

புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 அக்டோபர் 02, 2008 புரட்சி 7 முழக்கம் 40 விலை : ரூ.2.50

## கழகம் – மனித உரிமை அமைப்புகள்

# பா.ஜ.க.வுக்கு நேரடி எதிர்ப்பு மதவன்முறை சக்திகள் அதிர்ச்சி

நாடு முழுதும் மதக்கலவரங்களைத் தூண்டிவிட்டு வன்முறைகளை நடத்தி வரும் சங்பரிவார்களின் அரசியல் முகமான பா.ஜ.க.வின் மாநில பொதுக்குழு சேலத்தில் கூடியபோது மதவெறியை எதிர்க்கும் மனிதநேய உணர்வாளர்கள் கடும் எதிர்ப்பையும், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். பெரியார் திராவிடர் கழகம், சுற்றுச்சூழல், மனித உரிமை அமைப்புகளைச் சார்ந்த 250 க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

அண்மைக்காலமாக நாடாளுமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு, பா.ஜ.க. சங்பரிவாரங்கள், மதக் கலவரங்களைத் திட்டமிட்டு உருவாக்கி வருகிறார்கள். மதக் கலவரங்களை உருவாக்கி படுகொலைகளை நடத்தி, மத அடிப்படையில் வாக்காளர்களை கூறு போடுவதே இவர்களின் நோக்கம். தமிழ்நாட்டிலும் பெரியார் கருத்துப் பரப்பும் கூட்டங்களில் கலவரம் விளைவித்து, அதற்கு ‘இந்துக்களின் தன்னெழுச்சி’ என்று பார்ப்பனர்கள் இல.கணேசன், ராம.கோபாலன் போன்றோர், அறிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

இந்தச் சூழலில், சங். பரிவார்களின் அரசியல் அமைப்பான பா.ஜ.க. சேலத்தில் மாநில பொதுக் குழுவை கடந்த 27 ஆம் தேதி கூட்டியது. பா.ஜ.க.வின் - அகில இந்திய தலைவர் ராஜ்நாத் சிங், இதில் பங்கேற்க வருகை தந்தார். அமைதிப் பூங்காவான தமிழகத்தை, மதவெறிக் களமாக மாற்றிட திட்டமிட்டு வன்முறைகளை நடத்தி வரும், பா.ஜ.க.வின் செயற்குழு தமிழ்நாட்டில் சேலத்தில் மட்டுமல்ல, தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் நடத்திடக் கூடாது என்று, எதிர்ப்பு தெரிவிக்க, மதச்சார்பற்ற மதவெறிக் கலவரங்களை எதிர்க்கும் அமைப்புகள் முடிவு செய்தன. பெரியார் திராவிடர் கழகம், ‘சேலமே குரல் கொடு’, குடியுரிமை பாதுகாப்பு நடுவம், தமிழ் தேசிய இயக்கம், தமிழக இளைஞர் இயக்கம் ஆகிய அமைப்புகளின் சார்பில் முதல் கட்டமாக சேலத்தில் 23 ஆம் தேதி பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பேட்டியில், “சங்பரிவாரின் அரசியல் முகமான பா.ஜ.க.வின் மாநில செயற்குழு சேலத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் நடத்தவிட மாட்டோம்; அமைதிப் பூங்காவான தமிழகத்தை வன்முறைக் களமாக்கிடும், எந்த சிறு நிகழ்வும், தமிழகத்தில் நடக்கக் கூடாது என்று அமைதி விரும்பிகளாகிய நாங்கள் அறிவிக்கிறோம்; பொதுக்குழு நடத்தப்படுமானால் நேரடி நடவடிக்கையில் இறங்குவோம்” என்று அறிவித்தார்.

அடுத்த நாளே - ‘தமிழ்நாட்டை வன்முறைக் காடாக மாற்ற விரும்பும் பா.ஜ.க.வின் பொதுக் குழுவை அனுமதிக்காதே’ என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஏராளம் ஒட்டப்பட்டன. பத்திரிகையாளர்கள் சுவரொட்டிகளை படம் பிடித்து, பத்திரிகைகளில் வெளியிடவே, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் செய்தி வேகமாகப் பரவியது. அதிர்ச்சியடைந்த மதவெறி சக்திகள் - கழகத்தின் சுவரொட்டிகள் மீது பா.ஜ.க. பொதுக்குழு சுவரொட்டிகளை ஒட்டியதோடு, கழக சுவரொட்டிகளை கிழிக்கத் தொடங்கினர். கழகத் தோழர்கள் சுவரொட்டி கிழிக்கப்பட்ட பகுதிகளில் புதிதாக சுவரொட்டிகளை அடித்து, ஒட்டி, பதிலடி தந்தனர்.

சுற்றுச்சூழல்களை நாசப்படுத்தி, மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தி வரும் ‘கெம்பிளாஸ்ட்’ நிறுவனத்தை எதிர்த்துப் போராடி வரும் ‘கோனூர் விவசாயிகள் சங்கம்’ மக்களின் வாழ்வுரிமையை பறித்து, நிலங்களை பெரும் தொழில் நிறுவனங்களுக்கு ‘தாரை’ வார்ப்பதை எதிர்த்துப் போராடி வரும் ‘கஞ்சமலை பாதுகாப்புக் குழு’வினரும், மனித உரிமைக்கும், சுற்றுச் சூழலுக்கும் எதிராக செயல்படும் மதவெறி சக்திகளை எதிர்த்து இந்தப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டனர். இயற்கை வளங்களை தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதை எதிர்த்த காரணத்தால் சத்தீஸ்கர் மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி, மக்களுக்கு சேவை செய்து வந்த மருத்துவர் விநாயக்சென் அவர்களை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது. வங்காளியான விநாயக்சென் வேலூர் மருத்துவக் கல்லூரியில் படித்து - சத்தீஸ்கர் மாநிலத்தில் பழங்குடி மக்களிடம் மருத்துவப் பணியாற்றி வந்தவர். மனித உரிமைப் போராளி; மனித உரிமைக் கழகத்தின் அகில இந்திய துணைத் தலைவர்; மருத்துவர் விநாயக்சென்னை கைது செய்த பா.ஜ.க. அரசைக் கண்டித்து, அவரை விடுதலை செய்ய வேண்டும் என்ற முழக்கத்தோடும், ஒரிசா, கருநாடகம், தமிழ்நாட்டில் நடக்கும் மதவெறி வன்முறைகளைக் கண்டித்தும், பா.ஜ.க. பொதுக் குழு நடக்கும் மண்டபத்தின் முன், கறுப்புக்கொடிகளுடன் திரளுவது என முடிவு செய்யப்பட்டது.

‘மதத்தின் பெயரால் வன்முறைகளை அரங்கேற்றாதே’; ‘மருத்துவர் விநாயக்சென்னை விடுதலை செய்’; ‘அமைதியும் நல்லிணக்கமும் மலரட்டும்’ என்ற வாசகங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு, மார்பிலும், முதுகிலும் தொங்கவிட்டு, தோழர்கள் வந்த காட்சி, பொது மக்களின் கவனத்தை ஈர்த்தது. ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்த மனித உரிமையாளர் பியுஸ்மானஷ் - இவைகளைத் தயாரித்து வழங்கினார்.

சேலம் இரும்பாலை சாலையிலுள்ள ஜகீர் ரெட்டிப்பட்டி எம்.எஸ்.வி. திருமண மண்டபத்தில், பா.ஜ.க.வின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இரும்பாலை பிரிவு சாலை அருகே திரண்ட தோழர்கள் மண்டபத்தை நோக்கி, மதவெறி சக்திகளுக்கு எதிராக முழக்கமிட்டு, அணிஅணியாகப் புறப்பட்டனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் முதல் அணியில் வந்த 150 கழகத் தோழர்கள் மண்டபத்தை நெருங்கும் முன்பே காவல்துறை தடுத்து கைது செய்தது.

சேலம் மாவட்டக் கழகத் தலைவர் மார்ட்டின் தலைமையில் இரண்டாவது அணியில் 50 தோழர்கள் கறுப்புக் கொடியுடன் புறப்பட்டு, வேறு வழியாக மண்டபத்தை அடைந்து, மண்டப வாயிலின் அருகே கறுப்புக் கொடிகளுடன் முழக்கமிட்டபோது அதிர்ச்சியடைந்த காவல்துறை கழகத்தினரை சுற்றி வளைத்து போலீஸ் வேனில் ஏற்றியது.

மூன்றாவது அணியில் 50 தோழர்கள் மாவட்டக் கழக அமைப்பாளர் பாலன் தலைமையில் மண்டபத்தை நெருங்கி வாயிலிலே கூடியபோது காவல்துறை சுற்றி வளைத்து கைது செய்தது.

கோனூர் விவசாயிகள் சங்கத் தோழர்கள் 25 பேர் மாதேஷ் தலைமையில் - கழுத்தில், கோரிக்கைப் பதாகைகளை மாட்டிக் கொண்டு மண்டபத்தை நோக்கி வந்தபோது கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து கஞ்சமலை பாதுகாப்புக் குழுவினர் தோழர் கண்ணன் தலைமையில் வந்தபோது கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 250க்கும் மேற்பட்ட தோழர்கள் திருவாக்கவுண்டனூர் சாலையிலுள்ள பி.என்.சி.ஜி. திருமணமண்டபத்தில் வைக்கப்பட்டனர்.

தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, 30 நிமிட நேரம் கழித்து, சேலம் இளம்பிள்ளையைச் சார்ந்த கழகத் தோழர் மணிமாறன் மற்றும் பிரபாகரன் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் போராட்டத்தில் பங்கேற்க வந்தனர். மணிமாறன் கருப்புச்சட்டை அணிந்திருந்தார். மண்டபத்தின் வழியாக வந்தபோது, மோட்டார் சைக்கிளை மெதுவாக நகர்த்தி, கழகத் தோழர்கள் நிற்கிறார்களா என்ற தேடிக் கொண்டிருந்த

(4 ஆம் பக்கம்)

## வாழ்த்து – பாராட்டுகள் குவிகின்றன

அண்மைக் காலமாக வன்முறைகளை கையில் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டில் கலவரங்களை நடத்தி வந்த சங்பரிவார் – பா.ஜ.க. வன்முறைகளுக்கு எதிராக சேலத்தில் பெரியார் திராவிடர் கழகம் – சுற்றுச் சூழல், மனித உரிமை அமைப்புகளோடு இணைந்து வெளிப்படுத்திய எதிர்ப்பு மதச்சார்பின்மையாளர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது. பல்வேறு அமைப்பினரும் தங்கள் மகிழ்ச்சியை நேரிலும், பேசிகள் வழியாகவும் பகிர்ந்து வருகின்றனர். திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தோழர்களை விடுதலை சிறத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் உஞ்சை அரசன், அரங்க செல்லத்துரை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஜீவானந்தம், மார்க்சிய பெரியாரிய பொது வுடைமை கட்சித் தோழர்கள், கவிஞர் தமிழேந்தி, திருச்சி கலிய பெருமாள், த.தே.பொ.க. தோழர் பிந்துசாரன் உள்ளிட்ட பலரும் நேரில் சந்தித்து, பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

சூரமங்கலம் காவல் நிலையத்தில் தோழர்கள் திரண்டிருக்கும் செய்தி கிடைத்தவுடன், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும், உணர்வாளர்களும் தங்கள் மகிழ்ச்சி, வாழ்த்துகளைத் தெரிவித்த காட்சி உணர்ச்சிபூர்வமாக இருந்தது.

– நமது செய்தியாளர்

**தலையங்கம்**

## நளினியை விடுதலை செய்க!

17 ஆண்டுகளாக சிறையில் வாடும் நளினி, இராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோருக்கு தமிழக அரசு அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி வழங்கியுள்ள 'பொது மன்னிப்பின்' கீழ், விடுதலை செய்வதில் தமிழக அரசு முறைகேடாக செயல்பட்டிருப்பதை, உயர்நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது. இவர்களை விடுதலை செய்யவே கூடாது என்று ஏற்கனவே முடிவெடுத்துக்கொண்டு கலைஞர் ஆட்சி செயல்பட்டிருப்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

முதலில் – இந்த வழக்கில் தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு, சுப்ரமணியசாமி மனுதாக்கல் செய்தபோது, தமிழக அரசு அம்மனுவை நிராகரிக்கக் கோரியது. அதற்கான காரணம் – சுப்ரமணியசாமி கோரிக்கையில் அரசுக்கு உடன்பாடு இல்லை என்பது அல்ல; சுப்ரமணியசாமியின் கோரிக்கையை தி.மு.க. அரசே தீவிரமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது, அவர் தனியாக ஏன் மனு செய்ய வேண்டும் என்பதுதான் அரசின் கருத்தாக அமைந்துள்ளது.

இவர்களின் மீதான வழக்கை மத்திய குற்றப் புலனாய்வுத் துறை விசாரித்ததால் – இதில் முடிவெடுக்க வேண்டியது மத்திய அரசு தான் என்று 'பந்தை' மத்திய அரசின் மைதானத்துக்குள், தள்ளிவிட, கலைஞர் ஆட்சி முயற்சித்தது. இதை உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை. தமிழக அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்று கூறிவிட்டது.

நளினியின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் எஸ். துரைசாமி முன் வைத்த வாதங்கள் மிகவும் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அந்த வாதங்களை நீதிபதி அப்படியே ஏற்று, தீர்ப்பில் பதிவு செய்துள்ளனர். நளினியின் விடுதலைகோரும் மனுவை பரிசீலிக்கக்கூடிய சிறை ஆலோசனைக் குழுவின் கூட்டம் – சிறை விதிகளின்படி நடக்கவில்லை என்று கூறிய உயர்நீதிமன்ற நீதிபதி வி.எஸ். நாகமுத்து, எட்டு குறைபாடுகளை பட்டியலிட்டுள்ளனர். இந்த சட்ட நுணுக்கங்களுக்குள் நாம் நுழைய விரும்பவில்லை. தார்மீகப்படியும் நியாயப்படியும் சில கேள்விகளை தமிழக அரசின் முன் வைக்கிறோம்.

ராஜீவ் கொலையில் தொடர்புபடுத்தப் பட்டவர்கள் என்பதற்காகவே அவர்கள் வாழ்நாள் முழுதும் சிறையிலே அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்று அரசு கருதுகிறதா? ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனை காலத்தை 7 ஆண்டுகளாகக் குறைத்து, மனித உரிமையில் மகத்தான சாதனை புரிந்துள்ள கலைஞர் ஆட்சி, 17 ஆண்டு காலம் சிறையில் – அதுவும் தனிமைச் சிறையில் வதைப்பட்டுள்ளவர்களை விதிகளுக்கு புறம்பான வழிகளைப் பின்பற்றி சிறையிலேயே அடைத்து வைக்க முடிவெடுப்பது நியாயம் தானா? அரசியல் கூட்டணிப் பார்வை மட்டுமே அனைத்துப் பிரச்சினைகளிலும் முடிவெடுப்பதற்கான அடிப்படையான காரணமாக இருக்க வேண்டுமா? இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ள சுமார் 1400 சிறைக் கைதிகளில் பெரும்பாலோர் கொலைக் குற்றங்களில் தண்டிக்கப்பட்டவர்கள் தானே! நளினியும் – அதேபோல் ஒரு குற்றத்தில் அதுவும் நேரடியாக தொடர்பு இல்லாத 'குற்றச் சாட்டில்' அதுவும், தி.மு.க. எதிர்த்து வந்த கருப்புச் சட்டமான 'தடா' சட்டத்தின் கீழ் தண்டிக்கப் பட்டவர் தானே!

சோனியாகாந்தி அம்மையாரும், அவரது மகள் பிரியங்காவும் கருணையோடு இந்தப் பிரச்சினையை அணுக விரும்பும்போது, கலைஞர் மட்டும், இதில் தயக்கம் காட்டுவதில் நியாயமிருக்கிறதா? அதிகாரத்தை உறுதியாக – கொள்கை முடிவுகள் எடுப்பதற்குப் பயன்படுத்துவதில் கலைஞர் தயக்கம் காட்டலாமா? பார்ப்பனர்களும், பா.ஜ.க.வினரும், தங்களது அதிகாரத்தைத் துணிவோடு பயன்படுத்துகிறார்களே?

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு – ஒரு நல்ல வாய்ப்பாகும்; இதைப் பயன்படுத்தி நளினியை விடுதலை செய்யும் முடிவை எடுப்பதே விவேகமானது; கலைஞர் செய்வாரா?

*தலித் மாணவி படுகொலை*

# காவல்துறை அலட்சியத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

சத்திய மங்கலம் - கிச்சரகம்பாளையத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த 14 வயது மாணவி புனிதா, பாலியல் வன்முறையில் படுகொலை செய்யப்பட்டார். ஆகஸ்டு மாதம் 8 ஆம் தேதி இந்த சம்பவம் நடந்தது. ஆனால், காவல்துறை, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தடய சோதனைகளைக்கூட மேற்கொள்ளாமல், காவல்துறை காட்டும் அலட்சியத்தைக் கண்டித்து ஈரோடு மாநகராட்சி அலுவலகம் முன் 29.6.2008 வெள்ளி காலை 10 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான கூட்டமைப்பு சார்பில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்த வழக்கு சி.பி.சி.அய்.டி. விசாரணைக்கு மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர்மணி, பாலசுந்தரி (பா.ம.க. பொதுச்செயலாளர்), வி.பி.குண சேகரன் (ஈரோடு மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்), வழக்கறிஞர் பாப்பா மோகன், மக்கள் உரிமைக் கழக மாநில பொதுச் செயலாளர் பாலமுருகன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க பொதுச் செயலாளர் நிலவன் உள்ளிட்ட பல் வேறு அமைப்பைச் சார்ந்தவர்கள் கண்டன உரை நிகழ்த்தினர்.

'ஆம்னெஸ்டி இன்டர் நேஷனல்' என்ற சர்வதேச பொது மன்னிப்பு சபை - இவ்வாண்டை மாணவிகள் பாதுகாப்பு ஆண்டாக அறிவித்துள்ளதை சுட்டிக்காட்டி, தலித் மாணவியின் படு கொலையில் காவல்துறை அலட்சியத்தைக் கண்டித்தனர்.

# பெருஞ்சித்திரனார் நூல்கள் அரசுடைமை?

உவமைக் கவிஞர் சுரதாவின் சிலை திறப்பு விழாவில் விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் கோரிக்கையை ஏற்று, பாவலரேறு பெருஞ்சித்திரனார் நூல்களை அரசுடைமையாக்க தமிழக முதல்வர் முன் வந்துள்ளார். இந்த முடிவை நாம் வரவேற்கிறோம். பெரியார் சிந்தனைகளைப் போலவே பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இன விடுதலை சிந்தனைகள் தமிழர்களிடையே பரவ வேண்டும்! இதில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும்.

வேலு பிரபாகரன் நடத்திய பெரியார் பற்றிய குறுந்தகடு வெளியீட்டு விழாவில் பங்கேற்றுப் பேசிய தொல். திருமாவளவன் - பெரியார் நூல்களை அரசுடைமையாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், என்ன காரணத்தினாலோ, இப்போது பெருஞ்சித்திரனாரோடு பெரியாரையும் இணைத்துக் கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டுள்ளார். பெரியார் நூல்கள் அரசுடைமையாக வேண்டும் என்ற கருத்து பலராலும் வெளிப்படுத்தப்படும் நிலையில், தமிழக முதல்வர், இதில், நீண்ட மவுனம் சாதிக்கிறார். 'இளவல்' வீரமணி, இதை விரும்ப மாட்டார் என்பதற்காக, நியாயமான ஒரு செயலை அரசு முடக்குவது சரியாகுமா என்பதே நமது கேள்வி!

*"பெரியார் நூலை அரசுடைமையாக்க முடியாது; காரணம்,கடவுள், பார்ப்பன எதிர்ப்பு கருத்துகளை பெரியார் கடுமையாக கூறியுள்ளார். இவையெல்லாம் கலைஞருக்கு தெரியாதா?" என்றெல்லாம், 'விடுதலை'யில் 'மின்சாரங்கள்' கட்டுரைகளை எழுதினார்கள்.*

*அதுபோலவே பெருஞ்சித்திரனாரும் பார்ப்பன எதிர்ப்பு - தனித்தமிழ்நாடு லட்சியங்களைத்தான் தனது எழுத்திலும், பேச்சிலும் உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். இன்னும் ஒருபடிமேலே போய் ஈழத்தில் தமிழர்களை இந்திய இராணுவத்தை அனுப்பி கொன்று குவித்த ராஜீவ்காந்தி மீது புலவரின் சீற்றத்தை வெளிப்படுத்தி, 'ராஜீவ் காந்தியின் மரணமும் குண்டுவெடித்து இறக்கும் மரணமாகவே இருக்கும்' என்று அறம் பாடினார்.*

*பெரியாருக்கு எழுதியதுபோல் 'விடுதலை மின்சாரங்கள்" பாவலரேறு நூல்களை எப்படி அரசுடைமை யாக்கலாம்? அவர் பார்ப்பன எதிர்ப்பை மட்டுமா எழுதினார். தனித் தமிழ்நாடு விடுதலையை வலியுறுத்தியவரல்லவா? 'ராஜீவ் மரணத்துக்கு அறம் பாடியவரல்லவா?' கலைஞருக்கு இவை எல்லாம் தெரியாதா?"*

- என்று, எழுதாமல் பாவலரேறு நூல்களையாவது, நாட்டுடைமையாக்க முட்டுக்கட்டைப் போடாமல் இருந்தால் நல்லது. 'மானமிகுகள்' பெரியாருக்கு இழைக்கும் துரோகத்தை பாவலரேறு பெருஞ்சித்திரனாருக்கும் இழைக்காதிருப்பார்களாக!

## பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்க 'தி.க.சி.' கோரிக்கை

"எழுத்தாளர் தி.க.சி. 'தீக்கதிர்' நாளேட்டில் எழுதி வெளிவந்த கடிதம். (26.9.2008)

சமூக அநீதியை - பொருளாதார அநீதிகளை முறியடிப்போம்" எனும் பி.சம்பத் கட்டுரை ('தீக்கதிர்' 17.9.08) படித்தேன்.

கட்டுரை, தந்தை பெரியாரின் பேச்சுகளையும், எழுத்துகளையும் சான்று காட்டி, எழுச்சியூட்டும் வண்ணம் கச்சிதமாக எழுதப் பெற்றுள்ளது. பாராட்டுக்கள்.

கட்டுரையின் தொடக்கத்தில், "1929 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு மாநாட்டில் பெரியாரின் முழக்கம் இது" என்று குறிப்பிடப்படுகிறது. அவ்வாறு குறிப்பிடப்படும் கருத்துக்களும், பெரியாரின் புரட்சிகர முழக்கங்களும், எழுத்துக்களும், சிந்தனைகளும், தமிழக மக்களிடையே - குறிப்பாக ஏழை - எளிய அடித்தட்டு மக்களிடையே, பெரியாரின் 130 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் வேளையில் அதிகம் பரவவில்லை என்பது கசப்பான உண்மை.

இந்த இழிநிலையை மாற்ற, பெரியாரின் படைப்புக்கள் (எழுத்துக்கள், தலையங்க உரைகள் முதலியன) நாட்டுடைமை ஆக்கப் பெற வேண்டும். இதற்கு இடதுசாரிக் கட்சிகளும், தலைவர்களும், ஏடுகளும், தமுஎச போன்ற கலை இலக்கிய அமைப்புகளும் முயற்சியெடுக்க வேண்டும்.

**– தி.க.சி., நெல்லை.**

## சென்னை கரு.அண்ணாமலை இல்லத் திருமண விழா

தென்சென்னை மாவட்ட துணைச் செயலாளர் கரு. அண்ணாமலையின் மைத்துனியும், வேலு - அம்மா கண்ணு ஆகியோர் மகளுமான வே. பாக்கியா, குஞ்சிதபாதம்-வசந்தா ஆகியோரின் மகன் கு. சரவணன் இவர்களுடைய திருமணம் 14.9.2008 அன்று காலை 9 மணியளவில் கலைஞர் கருணாநிதி நகர் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் நடந்தது. கழகத் துணைத்தலைவர் ஆனூர் கோ. செகதீசன், வழக்கறிஞர் செ. துரைசாமி, வழக்கறிஞர் சு. குமாரதேவன், வழக்கறிஞர் இளங்கோவன், அன்பு தனசேகர் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். கழகப் பொறுப்பாளர்களுக்கு 'பெரியார்' படம் போட்ட சுவர் கடிகாரத்தை கரு. அண்ணாமலை திருமண வரவேற்பாக வழங்கினார். மணமக்கள் சார்பாக 'புரட்சி பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கினர்.



# கழகம் எடுத்த பெரியார் விழாக்கள்!

ஈரோடு மாவட்டத்தில் எழுச்சியுடன் நடைபெற்ற பெரியார் 130 வது பிறந்த நாள் விழா

200-க்கும் மேற்பட்ட இடங்களில் கழகக் கொடி ஏற்றப்பட்டது.

கோபி பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் தலைமை வகித்தார். தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி, மாவட்ட அமைப்பாளர்கள் சதுமுகை பழனிச்சாமி, புதுரோடு சிதம்பரம், இளைஞரணி அமைப்பாளர் கருப்பண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




பெருந்துறை ஒன்றியம் கூதாம்பி - வெள்ளாங்கோவில் பிரிவில் மாக்கானாங்கோம்பை பாலசுப்பிரமணி முதல் கொடியை ஏற்றி வைத்து ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தார்.

தந்தை பெரியாரின் உருவப்படம் பெரிய அளவில் தயாரித்து, மாலைளால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்ட வேன் முன் செல்ல, பேண்டு வாத்தியங்கள், மத்தளங்கள், இசைக் கருவிகள் ஒலி முழங்கத் தொடங்கிய ஊர்வலம், 30-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களில் தொடர்ந்து கழகக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க பல்வேறு ஊர்களின் வழியாகச் செல்லத் தொடங்கியது.

சிறுவலூர் பேருந்து நிறுத்தத்தில் தாரை தப்பட்டைகள் முழங்க ஊர்வலத்திற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. பெருந்துறை ஒன்றியச் செயலாளர் அர்ச்சுனன் இங்கு கொடியேற்றி வைத்தார்.

அதைத் தொடர்ந்து கொளப்பலூர் நகரை அடைந்தது ஊர்வலம். மூப்பன் சாலைப் பிரிவில் பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழகத் தலைவர் து.ஜெயக்குமார், கிழக்குத் தோட்டம் பெரியார் நகரில் நேதா ஆசை, புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி நிறுத்தத்தில் சரவணன், அருவங்கொரையில் ம. நிவாசு, குருமந்தூர் பிரிவில் சுப்பிரமணி, அம்மன் கோவில் பதியில் க. மூர்த்தி, கும்மிக்கருக்கில் செல்வராஜ் ஆகியோர் கழகக் கொடியேற்றி வைத்தனர்.

கொளப்பலூர் பேருந்து நிறுத்தக் கொடிக் கம்பத்தில் தோழியர் த. ரஞ்சிதமணி கொடியேற்றினார். கழக நகைச்சுவைப் பேச்சாளர் வேலுச்சாமி சமூகநீதிக்காக தந்தை பெரியார் ஆற்றிய தொண்டினை எளிமையாக எடுத்துக் கூறி உரை நிகழ்த்தினார்.

காமராஜ் நகர் அருகில் பகுத்தறிவு நெறியாளரும், தி.மு.க. பிரமுகருமான அருள்மணி, மளிகைக் கடை கணேஷ் ஆகியோர் அன்புடன் வரவேற்று அனைவருக்கும் இனிப்புகள் வழங்கியதுடன் ஆர்வத்துடன் ஊர்வலத்திலும் பங்கு கொண்டனர். பெரியார் படத்திற்கு மலர் தூவி மாலையணிவிக்கப்பட்டது. அருகிலுள்ள அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

வேட்டைக்காரன் கோயிலில் கொடிவேரி கிளைத் தலைவர் கோவிந்தன், மொடச்சூரில் காசி பாளையம் சுப்பிரமணி, ஜோதி நகரில் சு. வேலுச்சாமி, நாய்க்கன்காட்டில் கூடக்கரை அருளானந்தம், ஜீவா பணிமனை அருகில் கோபி நகரத் தலைவர் நாகப்பன் ஆகியோர் கொடியேற்றி வைத்தனர்.

கோபி - ஈரோடு முதன்மைச் சாலையில் அமைந்துள்ள பா. வெள்ளாளபாளையம், பொலவக்காளி பாளையம் ஆகிய ஊர்களில் புதியதாக கழகக் கொடிக் கம்பங்கள், ஆசிரியர் சோமசுந்தரம், நேதா ஆகியோர் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது. அருள்மணி, தி.மு.க. பிரமுகர் பெருமாள் ஆகியோர் கொடியேற்றி வைத்தனர். ஓய்வு பெற்ற அஞ்சலக அதிகாரி நேதாஜி முன்னிலை வகித்தார்.

பின்பு, தாசம்பாளையத்தில் தோழர் பழனிச்சாமி கொடியேற்றிய பின்பு கோபி நகருக்குள் ஊர்வலம் நுழைந்தது. ஒரே சீராக அழகுற நீண்ட வரிசையில் வந்த கருஞ்சட்டைப் படை ஊர்வலம், பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

கோபி கடைவீதிகள், முக்கியச் சாலைகள் வழியாக வாகன ஊர்வலம் பெரும் ஒலி முழக்கங்களுடன் வந்த போது அரசு அலுவலகங்கள், வணிக நிறுவனங்களில் இருந்தோர் பெருமளவில் பார்த்து வியந்தனர். ஆயிரக்கணக்கான துண்டறிக்கைகள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

கோபி பேருந்து நிலையத்தில் கற்பகம், மூன்று முக்கு அரசமரத்தடியில் சித்ரா தையலர், நாராயணன், வாய்க்கால் வீதியில் கனகராஜ், கச்சேரி மேட்டில் பி.சிவராஜ், கரட்டடிபாளையத்தில் மாவட்ட அமைப்பாளர் ரகுநாதன், ல.கள்ளிப்பட்டிப் பிரிவில் சித்தா பழனிச்சாமி, கள்ளிப்பட்டியில் மூர்த்தி ஆகியோர் கொடியேற்றி வைத்தனர்.

செப்டம்பர் 17 அன்று காலையில் தொடங்கிய ஊர்வலம் மாலை 6 மணிக்கு நிறைவு பெற்றது. கோபி நகரத் தலைவர் நாகப்பன் இல்லத்தில் அனைத்து தோழர்களுக்கும் சிறப்பான புலால் உணவு வழங்கப்பட்டது.

### கூடக்கரை

நம்பியூர் ஒன்றியம் கூடக்கரை கிராமத்தில் பெரியார் பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

புதிய கழகப் பெயர்ப் பலகையை நம்பியூர் ஒன்றிய தி.மு.க. செயலாளர் எம்.எஸ்.சென்னிமலை திறந்து வைத்து, கழகக் கொடியையும் ஏற்றி வைத்தார். அய்யா படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி சிறப்பித்தார்.

தி.மு.க. பிரமுகர்கள் சுப்பிரமணி, தனுஷ்கோடி, பொன்னுசாமி மற்றும் கழகத் தோழர்கள் அருளானந்தம், கலைச் செல்வன், சிவராசு, சண்முகம், செல்வன், சசி, மனோஜ், முருகேசன், சேகர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

### காவேரிப்பட்டினம்

செப்டம்பர் 15 ஆம் நாள் திங்கள் கிழமை பேரறிஞர் அண்ணா 100வது பிறந்த நாளையொட்டி காவேரிப்



பட்டினம் பேரூராட்சி அலுவலகத்தின் முன்புள்ள அண்ணாவின் திருவுருவ சிலைக்கு காலை 9 மணியளவில் காவேரிப்பட்டினம் ஒன்றிய அமைப்பாளர் பையூர் தி.க. இளையராசா தலைமையில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.கண்ணன், மாவட்ட துணை அமைப்பாளர் தி.குமார், கோ. பிரேம்குமார், நகர அமைப்பாளர் கோ. ஆனந்தன், மா. சேகர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

செப்டம்பர் 17 , பெரியாரின் 130வது பிறந்த நாளையொட்டி, காவேரிப்பட்டணம் பேரூராட்சி அலுவலகத் தின் முன்பு பெரியார் உருவ படத்திற்கு காலை 10 மணியளவில் ஒன்றிய அமைப்பாளர் பையூர் தி.க. இளையராசா தலைமையில் பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக சென்று மாவட்ட அமைப்பாளர் ஆர். கண்ணன், மாவட்ட துணை அமைப்பாளர் தி.குமார். கோ. பிரேம்குமார், நகர அமைப்பாளர் கோ. ஆனந்தன், மனோஜ்குமார், மா. சேகர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் ம.தி.மு.க. ஒன்றிய செயலாளர் இளங்கோ, ம.தி.மு.க. மாவட்ட இலக்கிய அணி செயலாளர் ருத்ரன், மாதையன், பா.ம.க. ஒன்றிய செயலாளர் பெரியண்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் நரசிம்மன், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றிய அமைப்பாளர் சிவக்குமார் மற்றும் கழக தோழர்கள் அனைத்து கட்சி தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். பின்னர் பையூரிலுள்ள பெரியார் உருவ சிலைக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### சீர்காழி

17.9.2008 அன்று காலை 10 மணி அளவில் சீர்காழி புதிய பேருந்துநிலையம் அருகிலுள்ள பெரியார் சிலைக்கு நகர செயலாளர் பா.பிரபாகரன் தலைமையில் சீர்காழி ஒன்றிய துணைத் தலைவர் பொன். தேவேந்திரன் மாலை அணிவித்தார். கொள்ளிட ஒன்றிய செயலாளர் பாக்யராஜ் கொடியேற்றி வைத்தார். சீர்காழி ஒன்றியத் தலைவர் இரா.ச.விசயகுமார் வரவேற்புரையாற்றினார். நகர தலைவர் சீர்காழி பெரியார் செல்வம் சிறப்புரையாற்றினார். மாணவரணி அமைப்பாளர் இன்பசேகரன், ரகுநாத், மாவட்ட துணைத்தலைவர் சோம. ராசராசன், புரட்சி கலை இலக்கிய மன்ற செயலாளர் அன்பு, ராசப்பா, வழக்கறிஞர்சோமசுந்தரம் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். கொள்ளிட ஒன்றியத் தலைவர் நந்த. ராசேந்திரன் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார். சீர்காழி ஒன்றிய துணை செயலாளர் இரா. மே. இராமமூர்த்தி நன்றி கூறினார்.

### கொள்ளிடம் ஒன்றியம்

கொள்ளிட ஒன்றிய செயலாளர் பாக்யராஜ் தலைமையில் நகர தலைவர் பெரியார் செல்வம் , சீர்காழி ஒன்றிய துணை செயலாளர் இரா.மே. இராமமூர்த்தி ஆகியோர் கொள்ளிட ஒன்றிய பகுதிகளில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கினர். கொடியேற்று விழாவில் கொள்ளிட ஒன்றிய பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை

17.9.2008 அன்று பெரியார் 130வது பிறந்த நாள் விழா காலை 8.30 மணியளவில் சென்னை பட்டாளத்திலுள்ள பெரியார் சிலைக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் தோழர்களுடன் சென்று மாலை அணிவித்தார். 9 மணியளவில் அண்ணா சாலை யிலுள்ள பெரியார் சிலைக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் மாலை அணி வித்தனர். பின்னர் இரண்டு சக்கர வாகனம், ஆட்டோக்கள் என 100க்கும் மேற்பட்ட தோழர்களுடன் ஊர்வலமாக சேத்துப்பட்டு, தியாகராயர் நகர் ஆகிய இடங்களிலுள்ள பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து, ஆயிரம் விளக்கு, ஆல்தோட்டம் பகுதியில் தோழர்கள் வியாஸ், வேழவேந்தன் ஏற்பாடு செய்திருந்த பெரியார் கருத்துக்கள் அடங்கிய கழகப் பெயர் பலகையை திறந்து வைத்து உரையாற்றினர். பின்னர் இராயப்பேட்டையிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். 11 மணி அளவில் இராயப்பேட்டை சைவ முத்தையா 5வது தெருவில் கழகக் களப்பணியில் உயிர் நீத்த கண்ணன். குமார் நினைவாக பெரியார் இரவு பாடசாலையை திறந்து வைத்து கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அன்பு தனசேகர் ஆகியோர் உரையாற்றினர். மாணவ மணிகளுக்கு நோட்டு பென்சில், பேனா வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு கு. சபரி தலைமை தாங்க சு. பிரகாசு வரவேற்க கோ. சீனு முன்னிலை வகித்தார். ச. சரவணன் நன்றி கூறினார்.

பகல் 12.30 மணியளவில் திருவல்லிக்கேணி அனுமந்தபுரம் பகுதியில் பெரியார் 130வது பிறந்த நாள் விழா அம்பேத்கர் இரவு பாட சாலை மற்றும் நூலகம் சார்பாக தோழர்கள் செல்வம், தம்பித்துரை, பாபு ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பெரியார் 130வது பிறந்த நாள் கேக்கை வெட்டி உரை நிகழ்த்தினார் கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன். அனைவருக்கும் புலால் உணவு வழங்கப்பட்டது.




பெரியார் 130வது பிறந்த நாள் பொதுக் கூட்டம் 18.9.2008 வியாழன் மாலை 6.30 மணியளவில் இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் சிலை அருகில் சமர்ப்பா குமரன் குழுவினரின் இன எழுச்சிப் பாடலோடு துவங்கியது. கி. முருகன் வரவேற்க, தபசி. குமரன் தலைமையேற்றக் கூட்டத்தில் இயக்குனர் சீமான் சிறப்புரையாற்றினார். கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், இளைஞர் இயக்கம் டாக்டர் எழிலன், எ.கேசவன், அன்பு தனசேகர் ஆகியோர் உரையாற்றினர். சு. ஆனந்தன் நன்றி கூற கூட்டம் 10.30 மணியளவில் முடிவுற்றது. மாவட்ட செயலாளர் இரா. உமாபதி தலைமையில் நிகழ்ச்சியை தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக முடியாதது ஏன்?


## திரிபுவாத திம்மன்கள் - யார்? (3)

“பெரியாரை பரப்புவதைவிட, **திரிபுவாத திம்மன்களிடமிருந்தும் சுயநலத் துரோகி கூட்டத்திலிருந்தும்** அவரைப் பாதுகாப்பதே முக்கியம்! (புத்தர் கொள்கையை திரித்தது போன்ற ஆபத்திலிருந்து) அய்யா அவர்தம் உண்மைத் தொண்டர்களின் பணி அதுதான்.”

**– மீ.கி.வீரமணி, ‘விடுதலை’ (30.8.2008)**

மேலே எடுத்துக்காட்டிய “24 காரட் பொன் மொழிகளுக்கு” முழு உரிமை படைத்த ஒரே தலைவரான வீரமணி தான் ‘திரிபுவாத திம்மன்’ ஆக செயல்பட்டு வருகிறார் என்பதற்கு கடந்த இதழ்களில் பல்வேறு புரட்டல்களை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆனால் ‘விடுதலை’யின் ‘அதிர்ச்சி’ எழுத்தாளர்கள் பேனாவை மூடிக் கொண்டு விட்டார்கள்.

பெரியாரியலையே புரட்டிக் கொண்டிருக்கிற இவர்கள் - அவற்றை கடந்தகால வரலாறுகளில் செய்தால்கூட பலருக்கும் தெரியாது போக வாய்ப்பு உண்டு. நடப்பு நிகழ்வுகளிலேயே - இந்தப் புரட்டுகளை வெட்க மின்றி அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்; இதோ, ஒரு புரட்டு.


அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும சட்டம்
அர்ச்சகர் பயிற்சி அளிக்கப்பட்டதன் பலன்கள்
அரசுப் பணிக்கு முன்பே அர்ச்சராகப் பணிபுரிகின்றன
“தி இந்து” ஏட்டின் படப்பிடிப்பு

‘விடுதலை’

கலைஞர் தலைமையில் நடக்கும் தி.மு.க. ஆட்சி, அனைத்துசாதி யினரும் அர்ச்சகராகலாம் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்டமியற்றிய பிறகு, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தொடரப்பட்டது. என்ன காரணத்தினாலோ, தமிழக அரசு சட்டப்படியான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. கலைஞர் மிகவும் சாதுர்யத்தோடு செயல்படுவதாக கி.வீரமணி அதை பாராட்டினார். தொடர்ந்து அனைத்து சாதியினரும் அர்ச்சகர் பயிற்சி பெறும் பயிற்சி நிறுவனங்கள், தமிழ்நாட்டின் 6 முக்கிய கோயில்களில் ஏற்படுத்தப்பட்டு, அனைத்து சாதியினருக்கும் பயிற்சிகளும் தரப்பட்டன. பயிற்சி முடித்து வெளியே வந்த மாணவர்கள் இப்போது அர்ச்சகராக முடியவில்லை.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க முடியாது என்று தமிழக அரசு அறிவித்துவிட்டது என்று ‘இந்து’ நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

“அர்ச்சகருக்கான ஓராண்டு பயிற்சியை முடித்தவர்கள், இப்போது தாங்கள் பெற்ற பயிற்சியைப் பயன்படுத்தக்கூடிய வேறு ஏதாவது மாற்று வேலைகள் கிடைக்குமா என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், அர்ச்சகர் வேலை கிடைக்கும் என்று காத்திருப்பது, நீண்டு கொண்டே போகிறது. காரணம் - உச்சநீதிமன்றத்தில், வழக்கு இருப்பதால், அரசாங்கம், சாதி வேறுபாடற்ற அர்ச்சகர் நியமனத்தை நிறுத்தி வைத்துவிட்டது” என்று செய்தி வெளியிட்டுள்ளது ‘இந்து’ ஏடு.


for alter

Government has defer

A. Srivathsan

MADURAI/SRIRANGAM: The 207 students, who have completed the one-year temple priest training course, are trying to find alternative avenues to put to use what they have learnt. Their wait for a job is growing longer after the government decided to defer the appointment of priests without caste discrimination in the face of legal challenges in the Supreme Court.

In 2007, the government

‘The Hindu’

இதை ‘விடுதலை’ நாளேடு எப்படி வெளியிட்டிருக்கிறது? “அர்ச்சகர் பயிற்சி அளிக்கப்பட்டதன் பலன்கள்; அரசுப் பணிக்கு முன்பே அர்ச்சகராகப் பணி புரிகிறார்கள்; ‘தி இந்து’ ஏட்டின் படப்பிடிப்பு” என்று புரட்டி செய்தி போடுகிறது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருப்பதையோ, வழக்கின் காரணமாக - அறநிலையத் துறையின் கீழ் உள்ள ஆகமக் கோயில்களில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக நியமிப்பதை அரசு நிறுத்திவிட்டது பற்றியோ, ‘இந்து’ வெளியிட்டதை இருட்டடித்து விட்டு, ‘விடுதலை’, ‘இந்து’ ஏட்டின் செய்தியை திரித்து மொழி பெயர்க்கிறது.

ஆகமங்களுக்கு உட்படாத கிராமக் கோயில்களில், தனியார் கோயில்களில் அர்ச்சகர்களாக ஏற்கனவே பார்ப்பனரல்லாதார் இருக்கிறார்கள். பெரியார் எழுப்பிய பிரச்சினையே ‘பார்ப்பனருக்கு மட்டுமே அர்ச்சகர் உரிமை உண்டு’ என்பதை நிலைநாட்டும் ஆகமக் கோயில்களில் அதைத் தகர்த்து, அதன் மூலம் ‘கர்ப்பகிரகத்துக்குள்’ நிலைநாட்டப்பட்டுள்ள ‘சூத்திர’ இழிவுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவேண்டும் என்பது தானே! அந்த மாற்றம் இப்போது வந்துவிட்டதா? இந்தக்கேள்விக்கு ‘இல்லை’ என்பதுதான் பதில்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொள்ளாமல், அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கிய அரசின் முடிவு தோல்வியில் முடிந்துவிட்டது. இது யார் தந்த ஆலோசனை? கலைஞர் எடுத்த ‘சாதுர்யமான’ முடிவு என்று, கி.வீரமணி பாராட்டியதற்கான காரணம் என்ன?

(‘31சி’ புகழ்!) வீரமணிதான் ஆலோசனை வழங்கினாரா? மீண்டும் தோல்வியில் முடிந்து விட்டதா?

- இந்தக் கேள்விகள் - மக்கள் மன்றத்தில் எழத்தானே செய்யும்?

அதற்காக - மக்களை உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டு குழப்பலாமா? செய்திகளையே திரித்து வெளியிடலாமா? ‘முரசொலி’ நாளேடுகூட இப்படி திரித்துப் போட்டு வெளியிட முன் வராத நிலையில் ‘விடுதலை’ ஏன், இப்படி புரட்டல் வேலை செய்கிறது?

ஏதோ, வேலை வாய்ப்புக்காக - அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கியது போலவும், அந்த நோக்கம் வெற்றிப் பெற்றது போலவும் ஒரு தோற்றத்தை உருவாக்கி பெரியார் கொள்கையை திரிப்பது புரட்டு அல்ல! மகா புரட்டு!

திரிபுவாத திம்மன்கள் பதில் கூறுவார்களா?

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

# ரங்கநாதபுரத்தில் கழகக் கிளை

7.9.2008 ஞாயிறு மாலை 5.30 மணியளவில் ஈரோடு மாவட்டம் நம்பியூரில் உள்ள ‘ரங்கநாதபுரம்’ என்ற பகுதியில் புதிய கிளை துவக்க விழா மற்றும் கொடியேற்று விழா, பெயர் பலகை திறப்பு விழா மற்றும் நம்பியூர் பேருந்து நிலையம் அருகில் “தமிழின உரிமைக்கு எதிரிகள் யார்?” விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

முதலாவதாக ரங்கநாதபுரத்தில் கழகக் கொடியை பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் ஏற்றி வைத்தார். அடுத்து ரங்கநாதபுரம் பிரிவில் பெயர் பலகையை திறந்து வைத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழகக் கொடியையும் தோழர்களின் கரவொலி, முழக்கத்திற்கிடையே ஏற்றி வைத்தார். பின்னர் நம்பியூர் பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டிருந்த கழகக் கொடிக் கம்பத்தில் பொதுச்செயலாளர் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

இருசக்கர வாகனங்களின் அணி வகுப்புக்கு பின்னர் கழகத் தலைவரும், பொதுச் செயலாளரும் ஜீப்பில் வந்து ஒவ்வொரு இடங்களிலும் கொடியினை ஏற்றி வைத்தது மிகுந்த எழுச்சியுடன் இருந்தது. பொதுமக்கள் ஆங்காங்கே நின்று கொண்டு இருளையும் பாராது வேடிக்கை பாாத்தனர்.

சரியாக 6 மணிக்கு பொதுக் கூட்ட மேடையில் குமாரபாளையம் “சமர்ப்பா குமரனின்” இசை நிகழ்ச்சி துவங்கியது. பாடல்கள் உணர்ச்சிகரமாக இருந்தது. எலத்தூர் செல்வக்குமார் தலைமையில் நாத்திகசோதி, ப. முருகன், சாமிநாதன், ப. அழகிரி ஆகியோர் முன்னிலையில் “தமிழின உரிமைக்கு எதிரிகள் யார்?” விளக்கப் பொதுக்கூட்டம் துவங்கியது.

மாவட்ட துணைத் தலைவர் கா.சு.வேலுச்சாமி மிகுந்த நகைச்சுவையுடன் உரையாற்றினார். மாவட்ட செயலாளர் இராம.இளங்கோவின் உரையைத் தொடர்ந்து, கழகப் பொதுச்செயலாளர் சிறப்புரையாற்றினார். இறுதியாக கழகத் தலைவர் நீண்ட நேரம் மிக நேர்த்தியாக தமிழினத்திற்கு எதிரிகள் ‘பார்ப்பனர்களே’! என்பதை பல்வேறு ஆதாரங்களை, சான்றுகளைக் கூறி உரை நிகழ்த்தினார். தலைவர் உரையாற்றும்போது மேடையில் நம்பியூர் பகுதியைச் சார்ந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொறுப்பாளர்கள் மாரியப்பன், தங்கவேலு ஆகியோர் மாலை அணிவித்து தலைவருக்கு தங்கள் அன்பை, ஆதரவை வெளிப்படுத்தினர்.

இறுதியாக ரங்கநாதபுரம் செயலாளர் இரமேசு நன்றி கூறினார். கூட்டத்தில் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி நின்று பேச்சைக் கேட்டனர். தோழர்கள் செல்வக் குமார், அழகிரி, ரமேசு, முருகன், கூடக்கரை அருளானந்தம், கலைச்செல்வன், சாமிநாதன் ஆகியோர் மிகுந்த ஆர்வத்துடன் கடுமையாகப் பணியாற்றி, கொடித் தோரணங்கள், சுவரெழுத்து, சுவரொட்டி என பல்வேறு வகையில் விளம்பரம் நன்கு செய்திருந்தனர். நம்பியூர் முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது.

முதல் பக்கத் தொடர்ச்சி

நிலையில், பா.ஜ.க.வினர் கூட்டமாக ஓடிவந்து, தனியாக சிக்கிய தோழரை தாக்கத் தொடங்கினர். ஆடிட்டர் ரமேஷ் என்ற பா.ஜ.க. பார்ப்பனர், ‘அவனைப் பிடித்து நொறுக்குங்கடா’ என்று கூச்சல் போட்டுக் கொண்டு முதலில் வெளியே ஓடிவந்தார். கும்பல் மோட்டார் சைக்கிளைப் பிடித்துத் தள்ளியது; கழகத் தோழர் மணிமாறனைத் தாக்கியபோது, காவல்துறை தோழரை மீட்டு, திருமண மண்டபத்துக்கு அனுப்பி வைத்தது. வெறி பிடித்த மதவெறி சக்திகள் - சாய்ந்து கிடந்த மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்த தோடு, வண்டியின் பெட்ரோல் டேங்க் மீது கல்லைத் தூக்கிப் போட்டு உடைத்தது. பெரியார் படம் போட்டு எழுதப்பட்டிருந்த வண்டி எண் அறிவிப்பு பலகையையும் உடைத்தது. கையில் தடி கற்களுடன் திரிந்த மதவெறியர்கள் கழகத்தினரை கைது செய்து ஏற்றி சென்ற காவல்துறை வேன்கள் மீது கற்களை வீசினர். ஆயிரக்கணக்கில் போலீசார் குவிக்கப்பட்டு, அந்தப் பகுதியே பரபரப்பாக காட்சியளித்தது.

திருமண மண்டபத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கழகத் தோழர்களிடையே கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாதேஷ் (கோனூர் விவசாயிகள் சங்கம்), செந்தில் (குடியுரிமை பாதுகாப்பு நடுவம்), கண்ணன் (கஞ்சமலை பாதுகாப்பு இயக்கம்) ஆகியோர் பேசினர். பா.ஜ.க. சங்பரிவார் கும்பலின் மதவெறி வன்முறைகள் மற்றும் டாக்டர் விநாயக் சென்னின் மக்கள் நலப்பணிகள் பற்றி விரிவாக பேசப்பட்டு கருத்தரங்கம் போல் நிகழ்ச்சி நடந்தது.


பா.ஜ.க. செயற்குழு மாலை 6.45 மணிக்கு முடியும் வரை, தோழர்கள் திருமண மண்டபத்திலேயே வைக்கப் பட்டு, பிறகு, விடுவிக்கப்பட்டனர்.

தோழர்கள் அனைவரும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சூரமங்கலம் காவல்நிலையம் வரை ஊர்வலமாகச் சென்றனர். கழகத் தோழர் தாக்கப்பட்டு, மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டது பற்றி காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டது. புகாரை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையைத் தந்த பிறகே கலைந்து செல்வோம் என்று கழகத்தினர் காவல்நிலைய வாயிலேயே நின்று விட்டனர். இரவு 8.30 மணி வரை காவல் நிலையத்திலே இருந்து முதல் தகவல் அறிக்கையின் பிரதியைப் பெற்ற பிறகே - தோழர்கள், கலைந்து சென்றனர். மதவெறி சக்திகளுக்கு எதிரான இந்த நடவடிக்கை சேலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 3rd October 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சி பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 அக்டோபர் 09, 2008 புரட்சி 7 முழக்கம் 41 விலை : ரூ.2.50


## ஈழத் தமிழர்களின் அவலங்களுக்கு அரசியல் முலாம் பூசாதீர்!

# இந்தியாவின் பச்சைத் துரோகம்!

தமிழ் ஈழத்தில் - சிங்கள ராணுவம் - தமிழர்களை இனப்படுகொலை செய்வது நாளுக்கு நாள் தீவிரமாகி வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தையே சூறையாடி, தமிழர்களை கொன்று குவித்த இராணுவம், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், அய்.நா. பார்வையாளர்கள், தொண்டு நிறுவனங்கள் அனைத்தையும் வெளியேற்றிவிட்டது. விடுதலைப் புலிகளின் முழுமையான நிர்வாகத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த வன்னிப் பிரதேச மக்கள் மீதும் குண்டு வீசத் தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணத்தில் 5 மாவட்டங்களிலிருந்து தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகிறார்கள். சொந்த மண்ணிலேயே "புலம் பெயர்ந்த உள்நாட்டு அகதி களாக" வெட்ட வெளியில் கொட்டும் மழையில் முகாம்களில் வாழ்க்கையோடு போராடிக் கொண் டிருக்கிறார்கள்.

இந்திய ஆட்சி வேடிக்கைப் பார்ப்பதோடு மட்டுமல்ல; இலங்கை ராணுவத்துக்கு ஆயுதங்களையும் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது. கடந்த அக்டோபர் முதல் தேதியன்று அரியானாவில் இந்தியாவின் ராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டு, 100 சிங்கள ராணுவத்தினர் கொழும்பு திரும்பியுள்ளனர். அக்டோபர் ஒன்றாம் தேதி தங்களுக்கு இந்திய அரசு அளித்துள்ள பயிற்சி, புதிய பலத்தை உருவாக்கியுள்ளதாக இந்திய தொலைக்காட்சிகளுக்கு சிங்கள ராணுவக் குழுவின் தலைவர் பேட்டி அளித்துள்ளார்.

இந்தியாவின் பார்ப்பனியம் - தமிழர் படுகொலைக்கு துணைப் போகும் நிலையில் தமிழர்களின் நிலை மிக மோசமடைந்து வரும் ஆபத்தை உணர்ந்த அய்.நா.வின் மனித உரிமைக் குழு, உடனடியாக தமிழர்களுக்கு உதவிடும் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ராஜபக்சேயிடம் அனுமதி கேட்டுப் போராடி, உணவு, மருந்துப் பொருள்களுடன், யாழ்ப்பாணப் பகுதிக்கு விரைந்துள்ளது. யாழ்ப்பாணத்தை பிறப் பகுதிகளுடன் இணைக்கும் ஒரே தரை வழிப் பாதையான ஏ-9 நெடுஞ்சாலைப் பாதையைக் கடந்த ஆகஸ்டு 2006 இல் மூடிய சிங்களப் பேரினவாத அரசு, அதற்குப் பிறகு திறக்கவே இல்லை. இப்போதுதான் முதல் முறையாக அய்.நா.வின் நிவாரண உதவிக் குழுக்களுக்காக 'மனமிறங்கி' திறந்துவிட்டுள்ளது. 51 லாரிகளில் 800 மெட்ரிக் டன் எடையிலான உணவு மருந்துப் பொருள்கள். அதன் வழியாக கடந்த 2 ஆம் தேதி சென்றுள்ளன. இந்த நிவாரணப் பொருள்களை ஏற்றிச் சென்ற லாரிகள் அனைத்துமே இலங்கை அரசு ஏற்பாடு செய்தவையாகும். இதில் 9 லாரிகளில் வெடிப் பொருள்களும் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளதை அய்.நா.வின் குழு கண்டறிந்து அதிர்ச்சியடைந்து, தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுக்கு வழி வகுத்த நார்வே நாடு, தனது அரசு செலவிலேயே கிளிநொச்சியில் 'சமாதான தூதரகம்' ஒன்றை பெரிய அளவில் கட்டித் தந்தது. அந்த சமாதான தூதரகத்தையே இப்போது சிங்கள ராணுவம் குண்டு வீசி தரைமட்டமாக்கிவிட்டது. சமாதான தூதரகத்துக்கு நேர் எதிரே அமைந்திருந்த, விடுதலைப் புலிகன் அரசியல் தலைமையகமும், அதே நாளில் சிங்களக் குண்டுவீச்சுக்கு பலியாகி தரை மட்டமாக்கப்பட்டுவிட்டது. சமாதானத் தூதரகத்தை தகர்த்து - இனி சமரசப் பேச்சே கிடையாது என்பதை சிங்கள அரசு உணர்த்திவிட்டது. இந்தியாவின் ஆயுதங்களோடும், இந்திய ராணுவத்தைச் சார்ந்த பொறியாளர்களின் நேரடி ஆலோசனைகளோடும் இந்த இனப் படுகொலைகள் ஒவ்வொரு நாளும் தொடருகின்றன.

இந்த நிலையில் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்க முன் வந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்பாடுகள் தமிழர்களின் உணர்வுகளுக்கு மருந்து போடுவதாக இருக்கிறது. இந்தியாவில் இதுவரை இல்லாத எண்ணிக்கையில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் மத்தியிலே அமைச்சர்களாக இருந்தும், தமிழினப் படுகொலையை தடுத்து நிறுத்த முடியவில்லை. சுட்டுக் கொல்லப்படும் தமிழக மீனவர்களுக்குக்கூட தமிழக அமைச்சர்கள் வாய் திறக்கவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் தோழர் ராஜாவின் ஒரே குரல் தான் ஒலித்தது. ஈழத் தமிழர்களைக் காக்கும் போராட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தது. மத்திய மாநிலங்களில் ஆட்சி செய்யும் கட்சிகளுக்கும், பாரதிய ஜனதாவுக்கும் அழைப்பு விடுக்கவில்லை. தமிழர்களைக் காப்பாற்றாத, குற்றத்தை செய்யும் ஆட்சிகளுக்கு அறிவுறுத்தவும், நடவடிக்கை எடுக்கக் கோரி நிர்ப்பந்திக்கவும் நடத்தப்படும் போராட்டத்தில் அவர்களை அழைப்பது எப்படி சாத்தியமாகும்? அப்படியே அழைத்தால், ஆட்சிகள் இதில் 'கேளாக் காதினராக' செயல்படுவதை சுட்டிக் காட்டிக் கண்டித்தால், அதை சகித்துக் கொள்வார்களா?

## கழகம் ஆதரவு

சென்னையில் நடந்த ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கழக சார்பில் மத்திய அரசைக் கண்டித்துப் பேசினார்.

ஜெயலலிதா ஈழத் தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேரடியாக எதிர்ப்புக் கருத்துகளைக் கொண்டவர்தான். பார்ப்பன உணர்வாளர்கள் தான்! ஆனால் கச்சத் தீவு பிரச்சினைக்கும், மீனவர் பிரச்சனைக்கும் குரல் கொடுத்து வருகிறார். ஜெயலலிதா கட்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு விடுக்கலாமா என்ற கேள்விகளுக்கு முன்னுரிமையும், அழுத்தமும் தந்து, 'லாவணி' நடத்துவது அவர்களின் அரசியல் துடிப்பைக் காட்டுகிறதே தவிர, ஈழத் தமிழர்கள் மீதான கவலையை அல்ல. ஒரு காலத்தில் ஈழத் தமிழர் பிரச்சினையில் உறுதி காட்டி வந்த தி.மு.க.வும் தனது நிலைப் பாட்டில் ஊசலாட்ட அணுகுமுறைகளையே மேற்கொண்டு வருகிறது. அடையாளத்துக்காகவும், சடங்குக்காகவும், ஆதரவு காட்டிப் பேசுவது என்ற நிலைப்பாட்டோடு தி.மு.க. தனது கடமையை முடித்துக் கொண்டு விடுகிறது. செஞ்சோலைப் படுகொலையைக் கண்டித்து, சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, மத்திய அரசு கடுகளவும் மதிக்கவில்லை. தி.மு.க.வும் அதைத் தட்டிக் கேட்கவில்லை. இனி தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடக்காது என்று எம்.கே.நாராயணன் இப்போது மட்டுமல்ல, கடந்த ஆண்டே கலைஞரிடம் உறுதிமொழி தந்தார். அதற்குப் பிறகு 25 துப்பாக்கி சூடுகள் நடந்துவிட்டன. சுப. தமிழ்ச்செல்வன் மறைவுக்கு இரங்கல் கவிதை எழுதினார் முதல்வர். காங்கிரசார் எதிர்ப்பு தெரிவித்தவுடன், தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் கூட்டம் நடத்தக்கூட அனுமதி மறுக்கப்பட்டு விட்டன. ஈழத் தமிழர் பிரச்சினைக் குறித்து கலைஞர் முரசொலியில் என்ன எழுதினார்?

*"இந்திய நாட்டு நலனையும் பாதுகாப்பையும் அதற்காக இந்திய நாட்டு மத்திய அரசு எடுக்கின்ற தேவையான நடவடிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு இலங்கைப் பிரச்சனையில் தமிழகம் தலையிடுமென்று யாரும் கனவு காண வேண்டாம் என்று அறிவுறுத்தப் படுகிறது." ('முரசொலி' 24.2.2007)*

இந்திய அரசு தமிழர்களைக் கொன்று குவிக்க, ஆயுதம் வழங்குவதும், இந்திய அரசு தமிழர்களைக் கொன்று குவிக்க ராணுவப் பயிற்சி தருவதும் இந்தியாவின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளே என்று 'துக்ளக்' சோ, சுப்ரமணிய சாமிகளின் கருத்துகளையே எதிரொலித்து கலைஞரும் ஒப்புதல் வாக்கு மூலமும் தந்து விட்டார்.

**இந்த நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும், கூட்டணி அரசியல் சாயம் பூசி, ஈழத்தில் அன்றாடம் தொடரும் தமிழினப் படுகொலைகளின் முக்கியத்துவத்தைக் குறைப்பது தமிழின உணர்வாளர்களைக் காயப்படுத்துவதோடு, அன்றாடம் செத்து மடியும் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கும் துரோகமாகி விடாதா?**

**சம்பிரதாய கடிதங்களும் தீர்மானங்களும் சடங்குகளாகிவிட்டன. தமிழர்கள் மீது சிங்களம் நடத்தும் படுகொலைகளை மத்திய அரசு கண்டிக்க மறுக்கிறது. ஆயுத உதவிகளை நிறுத்த மறுக்கிறது. இதற்கு தமிழ்நாடு அரசு தனது 'மவுன'த்தின் வழியாக ஏற்பு வழங்குகிறதா? கொதிக்கும் தமிழ் நெஞ்சங்கள் கேட்கின்றன!**

**தமிழர்களே! செத்து மடியும் சொந்த சகோதர சகோதரிகள் கதறுகிறார்கள். பட்டினியால் பரிதவிக்கிறார்கள். குண்டு மழைக்கும் துப்பாக்கிச் சூட்டுக்குமிடையே அலைக்கழிந்து கொண்டிருக்கிறார்கள்.**

**நாம் – தமிழன் என்று மார்தட்டி என்ன பயன்? என்ன செய்யப் போகிறோம்?**

**இந்தியாவின் பார்ப்பன நயவஞ்சகம் – ஆட்சிகள் மாறினாலும் தொடருகிறதே; இந்த இந்தியாவை எப்படி எனது தேசம் என்று அழைக்க முடியும்? இதில் எப்படி நான் குடிமகனாக இருக்க முடியும்? இந்தக் கேள்விகளை நோக்கி – தமிழகம் உந்தப்படுகிறது. ஆம்; வேகமாக உந்தப்படுகிறது.**

– புரட்சிப் பெரியார் முழக்கம் 09.10.2008

## கோபியில் வீரமணிக்கு எதிர்ப்பு

தந்தை பெரியார் சிலை திறக்க தி.க. தலைவர் வீரமணி கோபிக்கு 28.9.08 அன்று வருகை புரிந்ததை முன்னிட்டு, ஈரோட்டிலிருந்து கோபி வரை, மற்றும் நம்பியூர், புளியம்பட்டி, சத்தி, அந்தியூர் போன்ற அனைத்து மாவட்டத்தின் நகர்புறங்கள் முழுவதும் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக சுரெழுத்துகளும் எழுதப்பட்டன. அத்துடன் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. துண்டறிக்கைகள் அச்சிட்டு அனைத்துப் பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டது.

"பெரியார் சிந்தனைகளை பெரியார் திடலுக்குள் முடக்க முயற்சிக்காதே!

தமிழக அரசே! தந்தை பெரியாரின் நூல்களை நாட்டுடைமையாக்கு!"

என வாசகங்கள் எழுதப்பட்டன. ஒட்டப்பட்டன.

# பார்ப்பன எதிர்ப்பு பெரியார் கொள்கை இல்லையாம்! கூறுகிறார் வீரமணி

## திரிபுவாத திம்மன்கள் – யார்? (4)

*1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான பார்ப்பன ஆட்சி நடந்தது. ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா சென்னையில் நடந்த பெரியார் விழாவில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கு கி.வீரமணியிடம் ரூ. 5 லட்சம் நன்கொடை வழங்கினார். நன்கொடையைப் பெற்றுக் கொண்ட கி. வீரமணி, அதே மேடையிலேயே இந்த பணத்தை சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கு பதிலாக, பெரியார் மணியம்மை கல்வி அறக்கட்டளைக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். ஜெயலலிதாவும் அதை ஏற்றுக் கொண்டார். பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கான நன்கொடை என்றால் அதை பெரியார் கொள்கைப் பரப்பும் நூல் வெளியீடு போன்ற பிரச்சாரங்களுக்குத்தான் பயன்படுத்த முடியும்.ஆனால் அதைவிட - வீரமணி நடத்தும் கல்வி நிறுவனங்கள் தான் அவருக்கு முக்கியம் என்பதால், அந்த நிதியை அந்த அறக்கட்டளைக்கு மாற்றித் தருமாறு கி.வீரமணி கேட்டார்.*

*69 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்து, இடஒதுக்கீடு இடைக்காலத் தடைக்கு உள்ளானபோது அரசியல் சட்டத்தை திருத்த - 69 சதவீத இடஒதுக்கீட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று தி.மு.க. போன்ற கட்சிகள் கோரிக்கை வைத்தன. அப்போது கி.வீரமணி அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவையில்லை என்றும், 31(சி) சட்டப் பிரிவின் கீழ் தமிழ்நாட்டின் 69 சதவீத இடஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டால், பிறகு, நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் ஆலோசனைகளை வழங்கினார். ஜெயலலிதாவும், அன்பு சகோதரர் வீரமணியின் ஆலோசனையை சட்டமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றினார். ஆனால் உச்சநீதிமன்றம் இப்படி ஒரு சட்டம் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதை கண்டுக் கொள்ளவே இல்லை. உச்சநீதிமன்றம் மட்டுமல்ல, ஜெயலலிதா ஆட்சியே உச்சநீதிமன்றத்தில் இப்படி ஒரு சட்டம் நிறைவேற்றியிருப்பதை சுட்டிக் காட்டவில்லை. அதன் பிறகும் உச்சநீதிமன்றம் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு எதிரான விசாரணையை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, அதை நீதிமன்றத்தில் தெரிவிப்பதற்குக்கூட மறுத்த ஜெயலலிதாவுக்கு, கி.வீரமணி, 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்ற பட்டத்தைச் சூட்டினார். தமிழக அரசு சார்பில் 'பெரியார் விருது' ஒன்றை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதல்வர் ஜெயலலிதா முன் வைத்தார். அதை ஜெயலலிதா ஏற்றார். முதல் பெரியார் விருதை - விருதுக்கு பரிந்துரைத்த கி.வீரமணிக்கே வழங்கினார். விருதைப் பெற்றுக் கொண்ட கி.வீரமணி, 'ஆயுள் உள்ளவரை உங்களுக்கு துரோகமிழைக்க மாட்டேன்' என்று அதே மேடையில் உறுதிமொழி வழங்கினார்.*

*இப்படி கி.வீரமணி பார்ப்பனப் புகழ் பாடிக் கொண்டிருந்த அந்த ஜெயலலிதா ஆட்சி காலத்தில் 'தினமணி' நாளேட்டுக்காக அன்று 'தினமணி' நாளேட்டின் ஆசிரியர் பொறுப்பில் இருந்த மாலன், கி.வீரமணியிடம் பேட்டி ஒன்றை எடுத்தார். அந்தப் பேட்டியில் கி.வீரமணி வெளியிட்ட கருத்து மிக முக்கியமானது. என்ன கூறினார்?*

**கேள்வி :** *வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பார்ப்பனர் எதிர்ப்பு, கடவுள் மறுப்பு இவற்றை திராவிட இயக்கத்தின் முக்கிய கொள்கைகள் என்று சொல்லலாம். இந்த நான்குமே இன்றைய சமூகத்தில் நடைமுறையில் மழுங்கி தேய்ந்து போய்விட்டதா?*

**வீரமணி பதில் :** *ஒரு திருத்தம் நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த நான்கும் பெரியாருடைய கொள்கைகள் அல்ல. பெரியாருடைய லட்சியம் சுயமரியாதை, பகுத்தறிவு, மனித நேயம், சமத்துவம். நீங்கள் சொன்ன நான்கும் அந்த லட்சியங்களை அடைய ஒவ்வொரு காலகட்டத்திலும் பெரியார் கையாண்ட வழிமுறைகள்.*

*விமானத்தில் போவது, பஸ்ஸில் போவது, நடந்து போவது மாதிரி, போர் முறைகளில் முப்படை இருக்கிறது. அந்த மாதிரி போர் முறைகள் இந்தப் போர் முறைகள். இந்த முறைகளைப் பொறுத்தவரையில் அந்த லட்சியங்களுக்கு ஒரு காலகட்டத்தில் முக்கியத்துவம் வரும், ஒரு காலகட்டத்தில் முக்கியத்துவம் குறையும்.* **– 23.9.94 'தினமணி'**

*பார்ப்பனர் எதிர்ப்பு, கடவுள்மறுப்பு, கடவுள் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு எல்லாம் பெரியார் கொள்கைகள் அல்ல என்று, பார்ப்பன ஜெயலலிதாவை ஆதரிக்கும் தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்த, பெரியார் கொள்கைகளையே இப்படி திரித்தவர்தான் கி.வீரமணி. இதைவிட பெரியார் கொள்கைக்கு - துரோகம் - திரிபுவாதம், வேறு ஏதாவது இருக்க முடியுமா?*

*வீரமணி கூறிய சுயமரியாதை, பகுத்தறிவு, மனித நேயம், சமத்துவம் என்ற லட்சியங்களை இந்து மகாசபையும் காங்கிரசும் சங் பரிவார்களும் எவருமே எதிர்க்கவில்லை. அவரவர் அவரது கொள்கைகளுக்கும், 'இந்துக்களின் சுயமரியாதை', 'தேசிய சமத்துவம்', 'காந்திய மனித நேயம்', 'பாரதி-விவேகானந்தரின் பகுத்தறிவு' என்று தான் கூறி வந்தார்கள். இந்தக் கொள்கைகள் - பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் 'வர்ணாஸ்ரமங்கள்' என்றார். பெரியார் அதிலிருந்து மாறுபட்டு வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு ஆகிய கொள்கைகளை உண்மையான சுயமரியாதைக்கும், பகுத்தறிவுக்கும், மனித நேயத்துக்கும், சமத்துவத்துக்கும் முன் வைத்தார். அவை வெற்றி பெறுவதில்தான் உண்மையான சுயமரியாதையும், பகுத்தறிவும், மனித நேயத்தையும், சமத்துவத்தையும் எட்ட முடியும் என்றார். ஆனால், வீரமணியின் பார்வையில் இவை மாறுதலுக்குரிய 'போர் முறைகள்' என்றாகிவிட்டன. வீரமணியின் வாதப்படி, போர் முறையை மாற்றிக் கொள்ளலாம் என்றால் பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு என்ற போர் முறைகளைக்கூட கைவிட்டு, பார்ப்பன ஆதரவு, பக்திப் பிரச்சாரம் என்ற போர் முறைகளை மாற்றிக் கொள்ளலாமா?*

*'குடிஅரசு' தொகுப்புகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடும்போது கொள்கைகளைத் திரித்து விடுவார்கள் என்கிறார் வீரமணி.*

**அதற்காகவே – பெரியார் திராவிடர் கழகத்தை 'துரோகிகள்' என்கிறார். 'திரிபு வாத திம்மன்கள்' என்கிறார்.**

**பார்ப்பன எதிர்ப்பும், கடவுள் மறுப்பும், பெரியாரின் கொள்கைகள் அல்ல என்று கூறுவதைவிட திரிபுவாதம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?**

**இவையெல்லாம் ஒவ்வொரு காலகட்டத்தில் கையாளும் வழிமுறைகள் என்பதைத் தவிர, கடைந்தெடுத்த பித்தலாட்டம் வேறு ஏதாவது உண்டா?**

**இவை மாற்றங்களுக்குரிய போர் முறைகள் என்பதைவிட மகத்தான திரிபு வேறு இருக்க முடியுமா?**

**இவர்களிடம் 'குடிஅரசு', 'பகுத்தறிவு', 'திராவிடன்', 'ரிவோல்ட்' முடங்கிப் போய்விட்டால் அவை வெளி உலகத்துக்கு தெரியாமல் போய் விட்டால், இன்னும் எப்படி எல்லாம் கொள்கைகளை புரட்டி, குழிதோண்டி புதைத்து விடுவார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கவில்லையா?**

*யார் கொள்கை துரோகிகள்? யார் திரிபுவாத திம்மன்கள்? எழுத்தாணிப் புலவர்களே! எங்கே, பதில் கூறுங்கள் பார்க்கலாம்!* **(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

# வாலாசா வல்லவன்- பெரியார் திடல் நூலகத்தில் நுழைய தடை

*மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் சென்னை மாவட்ட துணைச் செயலாளர் வாலாசா வல்லவன் கழக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றதால் பெரியார் திடல் நூலகத்தில் நுழைய தடை செய்யப்பட்டுள்ளார். இது பற்றி அவர் எழுதியுள்ள கடிதம்:*

*கடந்த 25 ஆண்டுகளாக எந்தவித ஊதியமும் இன்றி பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதே என் முழு நேர லட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருபவன் நான். திராவிடர் இயக்கம் தொடர்பான ஆய்வு நூல்களையும், கவிஞர் கருணானந்தம் எழுதிய பெரியார் வாழ்க்கை வரலாற்றையும் என் சொந்தப் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டு வருகிறேன். 27.9.08 அன்று பெரியார் திடல் நூலகத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் வந்து கவிஞர் கலி. பூங்குன்றன் உங்களை அழைக்கிறார் என்றார். நான் சென்று அவர் அறையில் சந்தித்தேன். நீங்கள் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பேசியதையெல்லாம் சி.டி.யில் போட்டுக் கேட்டோம். மற்றவர்கள் பேசியது ஒரு மாதிரியாக இருந்தது. உங்கள் பேச்சு வேறுவிதமாக இருந்தது. அது இருக்கட்டும், நீங்கள் "கோவில் நுழைவு போராட்டங்களில் திராவிட இயக்கங்களின் பங்களிப்பு" என்ற நூலை எழுதியுள்ளீர்கள். அதில் இந்த நூல் நிலையத்திற்கு ஒரு நன்றி கூட தெரிவிக்கவில்லை. அப்படிப்பட்ட உங்களை எப்படி நூலகத்தில் அனுமதிக்க முடியும், இனி நீங்கள் இங்கு படிக்க வரக்கூடாது என்றார். அதற்கு நான் இப்போது பெரியாரின் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று தான் போராடினோம். இனிமேல் பெரியார் திடல் நூலகத்தையும் நாட்டுடைமையாக்க போராட வேண்டி வரும் என்று கூறி வந்து விட்டேன்.*

## இதுதான் அறிவு நாணயமா?

*கி.வீரமணி அவர்கள் பேசும் பொழுது அடிக்கடி பயன்படுத்துகிற வார்த்தை அறிவு நாணயமற்றவர்கள் என்பதுதான். முதலில் அவர் அறிவு நாணயம் உள்ளவரா என்பதை அவர் சிந்தித்து பார்க்க வேண்டும்.*

*தோழர் ஆனைமுத்து அவர்கள் 1972 இல் பெரியாரின் அனுமதி பெற்று பெரியாரின் எழுத்துக்களையும், பேச்சுகளையும் தொகுத்து பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என மூன்று பெரும் தொகுதிகளாக திருச்சி சிந்தனையாளர் கழகம் மூலம் வெளியிட்டார். பெரியாரின் கொள்கைகளை முழுமையாக அறிந்து கொள்ள அந்நூல் மட்டுமே இன்று வரை ஆதாரமாக இருந்து வருகிறது. ஆனைமுத்து தொகுத்தார் என்ற ஒரே காரணத்திற்காக வீரமணியும் அவரது அடியார் கூட்டமும் இன்று வரை அப்படி ஒரு நூல் இருப்பதையே மறைத்து வருகிறதே, என்றைக்காவது விடுதலையிலோ, அல்லது உண்மையிலோ அப்படி ஒரு நூல் இருப்பதாக எழுதி உள்ளார்களா, இத்தனைக்கும் அதில் உள்ள கட்டுரைகளை வேண்டும்போது பயன்படுத்துகிறார்கள் இது அறிவு நாணயமா? அவர்களுக்கு 2200 பக்கமுள்ள பெரியாரின் எழுத்துக்கள் தெரியவில்லை. அதை தொகுத்த ஆனைமுத்து மட்டுமே அவர்கள் கண்ணுக்கு தெரிவதுதான் காரணம்.*

*நான் கவிஞர் கருணானந்தம் எழுதி 1979 இல் வெளியிட்ட தந்தை பெரியாரின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை 2007 டிசம்பரில் வெளியிட்டேன். தந்தை பெரியாரைப் பற்றிய முழுமையான வாழ்க்கை வரலாறு அதுதான். பெரியார் திடலில் நூல் மதிப்புரைக்கு 2 நூல்களைக் கொடுத்தேன். இன்று வரை அப்படி ஒரு நூல் வந்ததாக 'விடுதலை'யிலோ, 'உண்மை'யிலோ ஒருவர் கூட எழுதவில்லையே ஏன்? இதுதான் அறிவு நாணயமா? 'தினமணி'யில் பார்ப்பன ஆசிரியர் இருந்தும்கூட இதற்கு மதிப்புரை எழுதினார்கள். ஆனால் தாங்கள் தான் பெரியாரின் உண்மையான வாரிசு என்பவர்கள் ஒருவரி கூட எழுதவில்லையே ஏன், இவர்களுக்கு அந்நூலில் பெரியார் வரலாறு தெரிவதைவிட வாலாசா வல்லவன் அவர்கள் கண் முன்னால் தெரிவதுதான் காரணம்.*

*இன்று பெரியார் திராவிடர் கழகம் 27 தொகுதிகள் குடிஅரசை வெளியிடுகிறது என்றால் உண்மையான பெரியார் தொண்டர்களாயிருந்தால் மகிழ்ச்சி தான்*

(4 ஆம் பக்கம்)

# கழகம் எடுத்த பெரியார் விழாக்கள்!

தந்தை பெரியாரின் 130வது பிறந்த நாள் நெல்லை மாவட்டத் தலைவர் ப. அரிய முத்து தலைமையில், மாவட்ட துணைத் தலைவர் வெ.கவிதைராசு, மாவட்ட செயலாளர் சி.ஆ. காசிராசன், மாவட்ட பொருளாளர் கா.மா. அமைதிராசன், மாநகரச் செயலாளர் பெ.பொன்ராக, மேலப்பாளையம் மண்டலச் செயலாளர் க. செய குமார், பாளை பகுதி செயலாளர் கா.மா. கருமலை பாண்டியன் மற்றும் கலை அழகன் ந. ரவிச்சந்திரன், ப. ஆனந்த் ஆகியோர் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். பாளை மைதானம் ஜான் பூப்பால்ராயன் நினைவு கொடிக் கம்பத்தில் கொடியேற்றி எல்லோருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

### சேலம் இளம்பிள்ளை

தந்தை பெரியாரின் 130வது பிறந்த நாள் விழா இரு சக்கர வாகன பேரணி இளம்பிள்ளையில் துவங்கி இராசிக் கவுண்டனூரில் கழகக் கொடியினை காளிமுத்து ஏற்றினார். கழக சார்பில் இராசிக் கவுண்டனூர் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இடங்கன சாலை, சின்னப்பம்பட்டி,



தாரமங்கலம் ஆகிய இடங்களில் துண்டறிக்கையும் வழங்கி ஒலி முழக்கம் எழுப்பப்பட்டது. தாரமங்கலத்தில் சாந்தி அச்சக உரிமையாளரும், கழக ஆதரவாளருமான ஆசிரியர் கிருஷ்ணன் கழகத் தோழர்கள் அனைவரையும் வரவேற்று தேநீர் வழங்கினார். பவளத்தானூரில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ. செழியன் கழகக் கொடியை ஏற்றினார். கே.ஆர். தோப்பூர் காடக்காரனூரில் துண்டறிக்கை வழங்கப்பட்டது. மோகன் நகரில் காளிமுத்து, பெத்தாம்பட்டியில் மாவட்ட இளைஞரணி தலைவர் அ.கோகுல கண்ணன், நல்லகவுண்டனூரில் இரமேசு, முருங்கப்பட்டியில் கோவிந்தராசு, லகுவம்பட்டியில் பன்னீர்செல்வம், மன்னாத கவுண்டனூரில் சிவராமன், தூதனூரில் அங்குசாமி ஆகியோர் கழகக் கொடியினை ஏற்றினர். லகுவம்பட்டி நடுநிலைப்பள்ளி தூதனூர் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. கலைஞர் நகரில் மாரிமுத்து கழகக் கொடியினை ஏற்றினார். அவரது இல்லத்தில் காரம், தேநீர் வழங்கப் பட்டது. கு. சௌந்தர்ராஜன் நன்றி கூற விழா நிறைவுற்றது. பேரணியில் 40 தோழர்கள் பங்கேற்றனர்.

### கொளத்தூர் ஒன்றியம்

17.9.08 தந்தை பெரியாரின் 130வது பிறந்த நாள் விழாவை கொளத்தூர் ஒன்றியத்தில் காலை 10 மணி முதல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் டைகர் பாலன், சூரிய குமார், ஈசுவரன் ஆகியோர் தலைமையில் 60-க்கும் மேற்பட்ட தோழர்கள் இரு சக்கர வாகனங்களில் பேரணியாக சென்று ஒன்றியம் முழுவதும் உள்ள கீழ் கண்ட இடங்களில் கழகக் கொடியை ஏற்றி பொதுமக்கள், பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. மதியம் தார்காடு தர்மலிங்கம் இல்லத்தில் தோழர்களுக்கு மாட்டு இறைச்சி உணவு வழங்கப்பட்டது. மாலை கோவிந்தப் பாடி அருகில் சென்னியப்பன் தலைமையில் மறைந்த பிரிகேடியர் சுப.தமிழ்ச்செல்வன் நினைவாக அமைக்கப் பட்ட பிரிகேடியர் சுப.தமிழ்ச்செல்வன் நகர் பெயர் பலகையை தோழியர் காவை. சரசுவதி திறந்து வைத்தார். காலை 10 மணிக்கு துவங்கிய கொடியேற்று விழா நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு உக்கம்பருத்திக் காட்டில் முடிவுற்றது. 1000 துண்டறிக்கைகள் பொது மக்களுக்கு வினியோகிக்கப் பட்டது. தார்காட்டில் புதிய கொடிகம்பம் அமைக்கப் பட்டது. நிகழ்ச்சி வெகுசிறப்பாக அமைந்தது.

கொடியேற்றிய இடங்கள்: கொளத்தூர் பேருந்து நிலையம்; கொளத்தூர் பழைய பேருந்துநிலையம்; கொளத்தூர் சோதனைச் சாவடி; வால்குறிச்சி; மூலக் கடை; காந்தி நகர்; காவலாண்டியூர்; செ.செ.காட்டு வளவு; கண்ணாமூச்சி; தார்க்காடு; லக்கம்பட்டி; மேட்டுக் கொட்டாய்; பெரிய தண்டா; நீதிபுரம்; உக்கம்பருத்திக் காடு.

பேரணியில் கலந்து கொண்ட தோழர்கள்: காவலாண்டியூர் - விசயகுமார், காவை சசிகுமார், ஈசுவரன், இராசேந்திரன், சந்திரன், பொன்னுசாமி, கண்ணையன், இளவரசன், எழிலன், தங்கராசு, பிரபாகரன், சென்னப்பன், வீ.ஈசுவரன், அபிமன்யு, கு. பழனிசாமி, க. பழனிசாமி, அய்யப்பன், சரசுவதி, ராணி, கலைச்செல்வி, மாதவி, இளவரசன், பச்சியப்பன், அவினாசி, வளவன்.

கொளத்தூர் - டைகர் பாலன், சூரியகுமார், இளஞ்செழியன், ராமன், சுந்தரம், பெரியசாமி, குமார், மோகன்ராஜ், சுரேசு, அய்யனார், இராசேந்திரன், கோவிந்தன், மணி, சேகர், குமரேசன், சென்னியப்பன், நல்லதம்பி, பாலன், செந்தில், விலிஸ், இராஜா, தர்மலிங்கம், இராசேந்திரன், குமாரசாமி, நாகராஜ், ரவி, இராஜா, சக்திகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

### மேட்டூர்

அறிவுலக ஆசான் தந்தை பெரியாரின் 130 ஆவது பிறந்த நாள் விழா செப்டம்பர் 17 ஆம் தேதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு மேட்டூர் குஞ்சாண்டியூர் பிரிவு சாலையிலிருந்து மேட்டூர்வட்டார சார்பில் இரண்டு சக்கர வாகன பேரணி தொடங்கியது. பேரணியில் 75 வாகனங்களில் தோழர்கள் கலந்து கொண்டனர். இரண்டு டாட்டா சுமோவும், 1 இண்டிகா காரோடும் தோழர்கள் கலந்து கொண்டனர். ஊர்வல பாதையிலுள்ள கழக கொடி கம்பங்களில் கொடியினை ஏற்றினர். கெம்ப்ளாஸ்ட் பிளான்ட் III முன் உள்ள கம்பத்தில் கி.சா.செஸ்டின்ராசும், இராமன் நகரில் மாவட்ட பொருளாளர் கோவிந்தராசும், புதுச்சாம்பள்ளி பகுதியில் சம்பூவும், ஆர்.எஸ். பகுதியில் ஆர்.எஸ். பகுதி தலைவர் நாகராசு, சேதாய் நகரில் சவுந்தர்ராசன், என்.எஸ்.கே. நகரில் பிரபாகரன், தங்கமாபுரிப்பட்டினத்தில் அரவிந்த், சேலம் கேம்ப் பேருந்து நிறுத்தத்தில் குமரசேன், காந்தி நகர் படிப்பகத்தில் பிரகாசு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின்நிலையம் எதிரில் முருகேசன், மாயைன் குட்டையில் மகளிரணி சித்ரா, ஐ.சி.எச். பகுதியில் சண்முகம், துக்காளம்பட்டியில் கணேசன், காவேரி நகரில் இளம்மதி, பழைய மார்க்கெட்டில் முல்லைவேந்தன், சின்ன பார்க்கில் அண்ணாதுரை, கட்டபொம்மன் நகரில் குமரன், பாரதி நகரில் மதன், குமரன்நகர் படிப்பகத்தில் கோவிந்தராசு, சதுரங்கபாடியில் குமரப்பாவும், மேட்டூர் பேருந்து நிறுத்தத்தில் மார்ட்டீன், மேட்டூர் நகர படிப்பகத்தில் அ. சக்திவேல் ஆகியோர் கழகக் கொடியினை ஏற்றி முழக்கங் களை எழுப்பினர். ஊர்வலம் சரியாக 2.30 மணிக்கு முடிந்தது. ஆர்.எஸ். பகுதி கழகத்தின் சார்பில் மேட்டூர் பெரிய பூங்காவில் மாட் டிறைச்சி உணவு அனைத்து தோழர்களுக்கும் வழங்கப்பட்டன. இந்த இரு சக்கரவாகன பேரணிக்கு அ. சக்திவேல் தலைமை தாங்கினார்.

### மயிலாடுதுறை

தந்தை பெரியாரின் 130வது பிறந்த நாளை முன்னிட்டு தோழர்கள் குருதிகொடை அளித்தனர். பள்ளி குழந்தைகளுக்கு நோட்டுகள், எழுதுகோல் வழங்கினர்.

17.9.08 அன்று காலை 9.30 மணியளவில் மயிலாடுதுறையில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். கழகக் கொடியை மாவட்ட துணைத் தலைவர் இரசீத்கான் ஏற்றினார். மயிலாடுதுறை அரசு பொ மருத்துவமனையில் இருக்கும் இரத்த வங்கியில் நா. இளையராசா, தெ.மகேசு, தெ. இரமேசு, ஏகைலைவன் அன்பு, முகிலன், உதயகுமார், குணராஜ், மு.ரவி, ஜீவா, இராஜராஜசோழன் ஆகிய தோழர்கள் குருதிக் கொடை வழங்கினர்.

குருதி கொடை வழங்கிய தோழர்களுக்கு கே.ஜி.ஆர். பவர்ஜிம் உரிமையாளர் உதயகுமார் பழச்சாறு வழங்கினார். ஆனதாண்டவபுரம் கிராமத்தில் கழகக் கொடியை குணராஜ் ஏற்றி வைத்தார். அங்குள்ள கீழ்மருதாந்தநல்லூர் டி.இ.எல்.சி. தொடக்கப் பள்ளியில் படிக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் கழகத்தின் சார்பில் நோட்டுகள் மற்றும் எழுதுகோல் வழங்கப்பட்டது. அப்பகுதி தோழர்களான வினோத், ஸ்ரீதர், பகலவன் ஆகிய தோழர்கள் அதன் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். அப்பகுதியில் ஒலிபெருக்கி வைத்து பெரியார் பாடல்களை ஒலிக்கச் செய்தனர்.

எலந்தங்குடியில் கழகக் கொடியை சந்துரு ஏற்றி வைத்தார். வழுவூர் கடைவீதியில் அமைந்திருக்கும் கழகக் கொடியை அப்பகுதியைச் சார்ந்த மூத்த இயக்க உணர்வாளர் டிபிசேசுமுத்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார். இறுதியாக மயிலாடுதுறை சின்னக்கடை வீதியில் அமைந்துள்ள கழகக் கொடியை ந. கலியபெருமாள் ஏற்றி வைத்தார். அனைத்து இடங்களிலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. தோழர்கள் அனைவரும் கழகக் கொடியை ஏந்தி இரு சக்கர வாகனங்களில் முழக்கங்களை எழுப்பியவாறு அணிவகுத்து வந்த காட்சி எழுச்சியாக இருந்தது. இறுதியாக தோழர்கள் அவைருக்கும் இயக்கத் தோழர் புத்தகச் சோலை விஜி மதியம் சிறப்பான கோழிக்கறி பிரியாணி வழங்கினார்.

இதனையடுத்து அன்று மாலை நடைபெற்ற நகர கலந்துரையாடல் கூட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் இரசீத்கான் தலைமையேற்றார். கூட்டத்தில் அக்டோபர்மாத இறுதிக்குள் பெரியார் 130-வது பிறந்த நாள் விழா மற்றும் அண்ணாவின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டத்தை மயிலாடுதுறையில் சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தோழர்கள்: மாவட்ட தணைத் தலைவர் இரசீத்கான், மாவட்ட அமைப்பாளர் நா. இளையராசா, செயலாளர் தெ. மகேசு, ந. கலியபெருமாள், நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர், துணைத் தலைவர் இராஜா, செயலாளர் ஏகலைவன் அன்பு, துணைச் செயலாளர் முகிலன், குத்தாலம் ஒன்றியத் தலைவர் ஜீவா, ஒன்றிய செயலாளர் இயற்கை, உதயகுமார், முரளி, அருள், சதிஷ், 'புத்தகச்சோலை' விஜி, சந்துரு, பொன்னுதுரை மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### உடுமலை

பெரியார் பிறந்த நாள் விழா உடுமலை மடத்துக் குளம் நகர, ஒன்றியப் பகுதிகளில் கழகக் கொடியேற்றத்தோடு 21.9.2008 ஞாயிறன்று காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் உடுமலைப்பேட்டை பேருந்து நிலையம் முன்பு ரமேஷ் சின்னவீரம்பட்டியில் 11 மணிக்கு கிளைக் கழகச் செயலாளர் சிவகுமாரும், 11.30 மணிக்கு இந்திரா நகர் கிளையில் உடுமலை ஒன்றியக் கழகச் செயலாளர் கோ.விசுவநாதனும், 12 மணிக்கு மடத்துக்குளம் ஒன்றியம் குமரலிங்கத்தில் கிளைக் கழக அமைப்பாளர் பீட்டரும், 12.30 மணிக்கு கொழுமத்தில் காரத் தொழுவு கிளை அமைப்பாளர் மயில்சாமியும், 1 மணிக்கு ருத்திரா பாளையத்தில் ஜோத்தம்பட்டி மோகனும் கொடியேற்றினர்.

மதியம் தோழர்களுக்கான உணவை கடத்தூர் கிளைக் கழகத் தோழர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.




கடத்தூர் கிளைக் கழகச் செயலாளர் அய்யப்பன் - செல்வி ஆகியோரது பெண் குழந்தைக்கு இளமதி என்று கழக செயற்குழு உறுப்பினர் இரா. மனோகரன் பெயர் சூட்டினார். கடத்தூர் புதூரில் மாலை 5 மணியளவில் காமராஜும், கடத்தூரில் கிளைக்கழகச் செயலாளர் அய்யப்பனும் கொடியேற்றினர்.

மாலை 5.30 மணியளவில் கடத்தூரில் கழக மாவட்டச் செயலாளர் கா.கருமலையப்பன் 'பெரியார் படிப்பகத்தை' திறந்த வைத்தார். கழக செயற்குழு உறுப்பினர் இரா. மனோகரன் சிறப்புரையாற்றினார்.

மாலை 6 மணியளவில் கணியூர் பொள்ளாச்சி இராம கிருட்டிணனும், 6.30 மணியளவில் காரத்தொழுவில் கணியூர் அரங்கசாமியும் கொடியேற்றினர்.

கடத்தூர் கிளையில் படிப்பகத்தை அமைத்த தோழர்கள் கதிரவன், காந்தி, அய்யப்பன், கிருஷ்ணன், காமராஜ், சரவணன் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் காமராஜ், முருகேசன், சதிஷ் ஆகியோரின் உழைப்பு பாராட்டும் வகையில் அமைந்திருந்தது.

மேலும் பெரியார் பிறந்த நாள் கொடியேற்று விழா நிகழ்ச்சியை உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் சு. சிவானந்தம், ஜோத்தம்பட்டி மோகன் ஆகியோரும் இணைந்து மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தினர்.

"தமிழர்கள் தன்மானம் பெற...." என்ற தலைப்பில் பெரியாரின் கருத்துரை ஆயிரக்கணக்கில் பொது மக்களிடம் கொடியேற்று விழாவின் போது வினியோகிக்கப்பட்டது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# சேலம் போராட்டக் காட்சிகள்

(சேலத்தில் மதவெறி வன்முறை சக்திகளான பா.ஜ.க. பொதுக் குழுவை எதிர்த்து அணி அணியாகத் தோழர்கள் கைதாகும் காட்சிகள்)



## விசுவ இந்து பரிசத் உளறலுக்கு கோபி கழகத்தின் பதிலடி


ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் நகரப் பேருந்து நிலையம் அருகே பெரியாரின் 130வது பிறந்த நாள் சிந்தனைக்கு என, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை இந்து மனுதர்மம் எவ்வாறு "வேசி மகன்" என்று சொல்லுகின்றது என்பது குறித்து அதில் குறிப்பிட்டிருந்தோம்.




அதற்கு போட்டியாக, முட்டாள்தனமாக (வடிகட்டிய முட்டாள்கள் - பண்பாடு தெரியாதவர்கள்) 'விசுவ இந்து பரிசத்' பெயரில் ஒரு அசிங்கமான வார்த்தையில் குறிப்பிட்டு ஒரு தட்டி வைத்தனர். ஏதோ, நாம் தான் அதில் அவர்களை வேசி மக்கள் என்று சொல்வது போல் எண்ணிக் கொண்டு எழுதப்பட்டிருந்தது.

அதற்கு பதில் கூறும் முகமாக இந்து மனு தர்மத்தில் 18வது அத்தியாயம், 415 வது சுலோகத்தில் சூத்திரன் எனச் சொல்லப்பட்டு, அதற்கு ஏழுவகை அர்த்தங்களை எழுதியுள்ளதைக் குறிப்பிட்டு, ஆதாரத்துடன் நாமும் மீண்டும் ஒரு தட்டி வைத்தோம்.

பொது மக்களிடையே இது பெரும் பரபரப்பையும், அதே நேரத்தில் இப்படி நம்மை இழிவுபடுத்தி எழுதியுள்ளார்களா? என்று வியப்புடன் அதனைப் பார்த்து படித்து விளக்கம் தெரிந்து கொண்டு மக்கள் செல்கின்றனர்.




இன்னும் பெரும் பாலான மக்களுக்கு நாம் 'இந்து' என்று நம்மை ஒத்துக் கொண்டாலே... அது 'வேசி மகன்' என்று நம்மை நாமே ஒத்துக் கொள்வதற்கு ஒப்பானது என்பதே தெரியாமல் உள்ளனர். சூத்திரன் என்பதன் பொருளே புரியாமல் அப்பாவித் தமிழர்களாக உள்ளனர்.

நமது மக்களிடையே இந்தச் செய்தியை இன்னமும் விரிவாக விளக்கமாக எடுத்து இயம்ப வேண்டிய 'பெரும் கடமை' உண்மையான பெரியார் தொண்டர்களான நமக்கு நிறைய உண்டு.

**– இராம. இளங்கோவன்**

## மணமகள் தேவை!

பொறியியல் பட்டப்படிப்பு முடித்து, 28 வயது, 5.10" உயரம், மாநிறம் உள்ள நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த சொந்த நிறுவனம் நடத்தும், சுயமரியாதை திருமணம், சாதி மறுப்பு - தாலி மறுப்பு, சடங்குகள், மூட நம்பிக்கை அற்ற திருமணம் செய்த பெற்றோர்களுக்கு பிறந்த மணமகனுக்கு, இதே அடிப்படையில் திருமணம் செய்து கொள்ள விரும்பும் பட்டப்படிப்பு பயின்ற, 27 வயதுக்குட்பட்ட சுயமரியாதை கொள்கையின்படி குடும்பம் நடத்தவிரும்பும் அழகுள்ள மணமகள் தேவை. அஞ்சல் அட்டை அளவு நிழல் படத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**க. கந்தன்,** 11/6, வெங்கட்ராமன் தெரு, பெரம்பூர், சென்னை-600 011.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

அடைவார்கள். ஆனால், அவர்கள் கண்களுக்கு 10000க்கும் மேற்பட்ட பெரியாரின் பேச்சுகளும், எழுத்துகளும் தெரிவதைவிட, அவர்களிடம் இருந்து பிரிந்து போன, கொளத்தூர் மணியும், இராமகிருஷ்ணனும், விடுதலை இராசேந்திரனும் தான் அவர்கள் கண்களுக்கு தெரிகிறார்கள். ஏற்கனவே பெரியார் தி.க. வெளியிட்ட குடிஅரசு 3 தொகுதிகள் என்றைக்காவது விடுதலையிலோ, உண்மையிலோ வெளியிட்டார்களா? இதுதான் அவர்களின் அறிவு நாணயமா?

கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் கீதைக் காட்டும் பாதை என்ற நூலெழுதி, கீதையை பெரியார் பார்வையில் பார்த்து விமர்சனம் செய்தார்கள். அந்நூல் திடலிலே தான் வெளியிடப்பட்டது. இன்றைக்கு கீதையின் மறுபக்கம் எழுதிய வீரமணி, நாரா. நாச்சியப்பன் தனக்கு முன்பே இப்படியொரு நூல் எழுதி உள்ளதை எங்காவது ஒரு வரி எழுதியுள்ளாரா? இது அறிவு நாணயத்தின் அடையாளமா?

அதே நாரா. நாச்சியப்பன் குருகுலப் போராட்டம் என்ற தலைப்பிலே நூல் எழுதினார். அவர் மறைந்த பிறகு அந்நூலின் சில பகுதிகளை கூடுதலாக சேர்த்து அண்மையில் வீரமணி அவர்கள் அதே தலைப்பிலே ஒரு நூலை வெளியிட்டார். நாரா. நாச்சியப்பன் இப்படியொரு நூலை எழுதியிருப்பதை எங்காவது ஒரு வரி எழுதியுள்ளாரா? இது தான் அறிவு நாணயமா?

பெரியார், "நான் நன்றி பாராட்டாத சேவை செய்கிறேன். 'தேங்க்ஸ் லெஸ் ஜாப்' என்று அடிக்கடி சொல்வார். தன்னுடைய சேவைக்கு யாரும் நன்றி சொல்லத் தேவையில்லை" என்பார். ஆனால் இன்று அவர் தொண்டர்கள் அவர்களுடைய நூலகத்திற்கு நன்றி தெரிவிக்கவில்லை என்று கூறி என்னை நூலகம் வரக் கூடாது என்கிறார்கள். இது என்ன நியாயம்?

## இந்து முன்னணிக்கு ஒரு கேள்வி!

ராஜஸ்தான் மாநிலம் ஜோக்பூர் அருகில் சாமுந்தா தேவி கோயிலுக்குச் சென்ற பக்தர்கள் 210 பேர் நெரிசலில் சிக்கி மரணமடைந்துவிட்டனர்.

டெல்லியில் குண்டு வெடித்தது என்றால் உடனே இந்து கோயில்களுக்கு - போலீஸ் பாதுகாப்பு.

தமிழ்நாட்டுக் கோவில்களில் - பக்தர்கள் வருகையை கண்காணிக்க ரகசிய காமிராக்களை காவல்துறை அமைக்கப் போவதாக செய்தி.

கடவுள் சக்தி இப்படி சிரிப்பாய் சிரிக்குது.

இந்த லட்சணத்தில இந்துக் கடவுள்களை புண்படுத்துவதாக ராம கோபாலன்கள் பெரியார் தொண்டர்கள் மீது பாய்கிறார்கள்.

இந்து முன்னணிகளே! உன் கடவுள் சக்தி புண்படுத்தாமல் இருக்க - கோயில் பாதுகாப்புக்கு நவீன கேமிராக்கள் - போலீஸ் பாதுகாப்புகள் வேண்டாம் என்று கூறுவாயா?


"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

**திருத்தம் :** செப்.18, 2008 இதழில் இரண்டாம் பக்கத்தில் வெளி வந்துள்ள 'குடிஅரசு' பத்திரிகை ஆசிரியர் வெளியிடுவோர் பட்டியலில் 2.5.1925 'குடிஅரசு' அச்சிடுவோர், வெளியிடுவோர் மற்றும் 26.7.1925 'குடிஅரசு' அச்சிடுவோர் வெளியிடுவோர் பெயர் கே.ஏ. அப்பையா என்பதற்கு பதிலாக, சுப்பையா என்று தவறாக வெளிவந்துள்ளது. 3 ஆம் பக்கத்தில் - 7.1.1944, 3.1.1944 'குடிஅரசு' ஆசிரியர் மற்றும் வெளியிடுவோர் பெயர் கரிவரதசாமி என்று இருப்பதே சரியானது; கலிவரதசாமி என்று தவறாக வெளிவந்துள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்.)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 9th October 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி
# பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 அக்டோபர் 16, 2008 புரட்சி 7 முழக்கம் 42 விலை : ரூ.2.50

## இந்திய அரசே – சிங்களருக்கு வழங்கிய படைக் கருவிகளை
# திருப்பிப் பெறு!



*இந்திய அரசு - சிங்களருக்கு வழங்கிய ஆயுதத்தைத் திரும்பப் பெறக் கோரும் ஆர்ப்பாட்டங்கள் - பல்வேறு நகரங்களில் அக்.13 அன்று நடந்தன. ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புகள் பலவும் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் பங்கேற்றது.*

13.10.2008 திங்கள் மாலை 4.30 மணியளவில் சென்னை மெமோரியல் அரங்கம் அருகில், "சிங்களன் பங்காளி; தமிழன் பகையாளியா?" என்ற முழக்கத்தோடு இந்திய அரசைக் கண்டித்து த.தே.பொ.க. பொதுச்செயலாளர் பெ. மணியரசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் சி.மகேந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழக துணைப் பொதுச் செயலாளர்), கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழ் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு, புலவர் புலமைப்பித்தன், இயக்குனர் சீமான், வழக்கறிஞர் அஜீதா, ஓவியா, கவிஞர் இன்குலாப், ஓவியர் புகழேந்தி, தமிழ்ப் படைப்பாளிகள் முன்னணி ஜெயப்பிரகாசம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். அனைத்து அமைப்புகளையும் சார்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். 6.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் முடிவுற்றது.

தமிழர்கள் படுகொலையை சித்தரிக்கும் வகையில் கழகத்தினர் காயக்கட்டுகளுடன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளுக்கும், ஈழ விடுதலைப் போராட்டத்துக்கும் மக்களின் பேராதரவு இருக்கிறது என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு வெளியிட்ட கருத்துக் கணிப்பை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு, கழக சார்பில் அனைவருக்கும் வழங்கப் பட்டது.

### சேலம்

ஈழத் தமிழர்களை இனப் படுகொலை செய்யும் சிங்கள அரசுக்கு இராணுவ உதவி செய்யும் இந்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் 13.10.2008 திங்கட்கிழமை காலை 11 மணியளவில் சேலம் தீயணைப்பு நிலையம் அருகிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்திற்கு கழகத் தலைவர் தா.செ. மணி தலைமையேற்க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஆ.ஜீவானந்தம் ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஈழத் தமிழரின் விடுதலைப் புலிகளைப் பற்றி தம் கட்சி ஆதரவான கருத்தை வெளிப்படுத்தி பேசினார். ஊர்வலத்தில் பெரியாரின் பிஞ்சுகள் தலையிலும், கைகளிலும் காயக்கட்டுகளுடனும், தோழர்கள் வயிற்றைக் கிழித்து குடல் வெளியே தெரிவது போலவும், கன்னத்திலே காயமடைந்தது போலவும் ஈழத் தமிழர்கள் இலங்கை இராணுவத் தினரால் சித்ரவதை செய்யப்படுவதை வெளிப்படுத்து கின்ற வகையிலே ஒப்பனை செய்து ஊர்வலத்தில் வந்தனர். ஊர்வலம் மதியம் 12.30 மணிக்கு மாவட்ட தலைமை தபால் நிலையம் முன்பு வந்தது. அப்பொழுது கழகத்தலைவர் கொளத்தூர் மணி தலைமை உரையாற்றினார். தலைவரின் உரைக்குப் பின்னால், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தை சார்ந்த தமிழ் தேசியன் கண்டன உரையாற்றினார். தமிழக இளைஞர் இயக்கத்தின் இளமாறன், தமிழர் தேசிய இயக்கம் வ. தம்பி, பழனிச்சாமி, ஸ்பீடோ அமைப்பு சார்ப் அ.முரளி, மனித உரிமை பாதுகாப்பு மைத்தின் வழக்குரைஞர் மாயன், குடியுரிமை பாது காப்பு நடுவத்தைச் சார்ந்த தமயந்தி, பகுஜன் சமாஜ் கட்சியின் மாவட்டத் தலைவர் வை.செல்வக் குமார், தமிழ் தேசப் பொதுவுடைமை கட்சியின் சபிந்துசாரன் ஆகியோர் மத்திய அரசைக் கண்டித்து கண்டன உரையாற்றினர். ஊர் வலத்தில் அனைத்து அமைப்பின் சார்பிலும் 400-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். இந்த கண்டன ஆர்ப் பாட்டத்தை சேலம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய் திருந்தது.

### ஆர்ப்பாட்டக் கோரிக்கைகள்

- சிங்கள அரசுக்குக் கொடுத்த படைக் கருவிகள் அனைத்தையும் திரும்பப் பெறு!
- சிங்களப் படைக்குத் துணையாக அனுப்பிய இந்தியப் படைத் துறையினர் அனைவரையும் திரும்ப அழை!
- இந்தியாவில் எவ்விடத்திலும் சிங்களப் படையினருக்கும் காவல்துறையினருக் கும் பயிற்சி கொடுக்காதே!
- நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ சிங்கள அரசுக்கு அரசியல், பொருளியல், படை வகை உதவி எதுவும் செய்யாதே!


### கோவை

கோவையில் 13.10.2008 திங்கள் மாலை 4 மணியளவில் செஞ்சிலுவைச் சங்கம் அருகில், இந்திய அரசு சிங்கள இராணுவத் திற்கு அளித்த ஆயுதங் களைத் திரும்பப் பெறக் கோரி கழகம் சார்பில் ஒத்த கருத் துடைய அனைத்து இயக்கங்களையும் ஒருங்கிணைத்து ஈழத்தில் போரில் காயம்படுகின்ற தமிழர்களின் நிலையை உணர்த்தும் வகையில் காயக்கட்டுகளுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் பா.ம.க. நகர செயலாளர் அனுபவ் ரவி, ஆதித் தமிழர் பேரவையின் மாணவரணி செயலாளர் வெண்மணி, ஆதித் தமிழர் விடுதலை முன்னணி மாநில அமைப்பாளர் ரவிக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் மாநகர செயலாளர் தென்னரசு, பு.இ.மு. தமிழரசன், த.தே.பொ.க. பா. தமிழரசன், கழக செயற்குழு உறுப்பினர் வெ.ஆறுச் சாமி, பு.ஜ.தொ.மு. விளவை இராமசாமி, த.ஒ.வி. அறிவுடை நம்பி, த.தே.வி.இ.தேவேந்திரன் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கண்டன உரையைப் பதிவு செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தோழர்ளுக்கு ஈழத்தில் போரில் காயம்பட்டு கிடக்கின்ற தமிழர் களின் நிலையை உணர்த்துவதுபோல தோழர்களுக்கு காயக்கட்டுகள் போடப்பட்டு இருந்தன.

பத்திரிகையாளர்களும், பொது மக்களும் ஆர்வத்துடன் காயம்பட்ட தோழர்களை வந்து பார்த்துச் சென்றனர். மேலும் அவர்கள் தோழர்களின் காயக்கட்டுகளை உண்மைக் காயங்கள் என்று நம்புகின்ற வகையில் தத்ரூபமாக சித்தரிக்கப்பட்டு இருந்தன. ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான பொது மக்களும் கலந்து கொண்டனர்.



**தலையங்கம்**

## ‘இராம லீலா’வுக்கு எதிராக ‘இராவண லீலா’

ஆரியர் - திராவிடர் போராட்டத்தை சித்தரிப்பதே இராமாயணம் என்பது ஜவகர்லால் நேரு உட்பட பல ஆய்வாளர்களின் கருத்து. பெரியார் இந்தக் கருத்தை நாடு முழுதும் பரப்பினார். திராவிடர்களை வீழ்த்துவதற்கு ஆரியர்கள் பின்பற்ற வேண்டிய ‘சூழ்ச்சி - சூது’ முறைகளை - இராமன் என்ற கதாபாத்திரம் வழியாக ராமாயணம் விளக்குகிறது. ‘சக்கரவர்த்தி திருமகன்’ என்று இராமாயணத்துக்கு விரிவுரை எழுதிய ராஜ கோபாலாச்சாரி பார்ப்பனர்களுக்கு நெருக்கடி வரும்போதெல்லாம் ‘இராமாயணத்தைப் படியுங்கள்’ என்று அறிவுரை கூறினார். இராவணன் கற்பனைப் பாத்திரம் என்றாலும், அவர் திராவிட இனத்தின் குறியீடாக உயர்ந்து நிற்கிறான். அத்தகைய இராவணனையும், அவனது குடும்ப உறுப்பினர்களான மேகநாதன், இந்திரஜித் ஆகியோரையும் உருவ பொம்மைகளாக செய்து, இந்த திராவிட மாவீரர்களை நெருப்பில் போட்டுக் கொளுத்தும் ‘இராமலீலா’வை டெல்லியில் ஆண்டுதோறும் உற்சாகமாகக் கொண்டாடி தென்னாட்டு மக்களை, திராவிடர்களை பார்ப்பனர்கள் அவமதித்து வருகிறார்கள்.

திராவிட மாவீரன் இராவணனை ‘தீமையின் சின்னமாக’ இழிவுபடுத்தும் இந்த ஆரியக் கூத்தில், கடந்த ‘விஜயதசமி’ நாளன்று டெல்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன்சிங், குடியரசு துணைத் தலைவர் ஆகியோர் பங்கேற்றுள்ளது, தென்னாட்டு மக்களை - திராவிடர்களை இழிவுபடுத்தும் மாபெரும் அவமதிப்பாகும். கடந்த சில ஆண்டுகளாகவே சோனியாவும், அவரது பரிவாரங்களும், இந்த ஆரியக் கூத்தில் தங்களை இணைத்துக் கொண்டு வருகிறார்கள்.

“டெல்லியிலே நடக்கும் ராமலீலாக்களை எதிர்த்து தென்னாட்டிலும், ராமனை எரிக்கும் ராவண லீலாக்கள் நடத்தும் காலம் வந்தே தீரும்” என்று அன்று கலைஞர், தனது ‘முரசொலி’ நாளேட்டில் 1954 ஆம் ஆண்டில் எச்சரித்தார்! (8.10.1954) பெரியார் மறைந்த - முதலாண்டு நினைவு நாளில் மணியம்மையார், திராவிடர் கழகத் தலைவராக பொறுப்பேற்ற நிலையில், பெரியார் திடலில் ‘இராமலீலா’வுக்கு பதிலடி தரும் வகையில், ‘இராமன்’ உருவ பொம்மைகளை தீயிட்டு பொசுக்கும் இராவணலீலாவை நடத்தினார். அவருக்குப் பிறகு கி.வீரமணி தலைமை ஏற்ற பிறகு, ‘இராவண லீலா’ நடத்தப் போகும் அறிவிப்புகள் வந்தனவே தவிர, ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணம் கூறி, பின் வாங்கிக் கொண்டார்கள்.

1996 ஆம் ஆண்டில் பெரியார் திராவிடர் கழகம் தோற்றம் கொண்ட பிறகுதான் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் அரசின் தடைகளை மீறி ‘இராமன்’ உருவ பொம்மைகளை எரித்து, ‘இராமலீலாவுக்கு’ பதிலடி தரப்பட்டது. அதற்காக தோழர்கள் கைது செய்யப்பட்டு, வழக்குகளை சந்தித்தனர். அண்மையில், ஜார்க்கண்ட் மாநில பழங்குடி மக்கள் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான சிபுசோரன், இராவணனை இழிவுபடுத்தும் நிகழ்வில் பங்கேற்க முடியாது என்று மறுத்துவிட்டார். இப்போதும் பல பழங்குடியினர், ‘இராவணனை’ தங்கள் மூதாதையராகக் கருதி வழிபட்டு வரும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். மத்திய பிரதேச மாநிலத்தில் விதிசா மாவட்டத்தில் ஒரு கிராமத்தின் பெயரே ‘ராவண கிராம்’ என்பதாகும். இக் கிராமத்தில் வாழும் 1100 மக்களும், இராவணனை தங்கள் மூதாதையர் என்று கூறி வழிபட்டு வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் தசரா பண்டிகையின் போது இராவணன் சிலை முன் கூடி, வழிபாடு நடத்துகிறார்கள். அதேபோல் போபாலிலிருந்து 600 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மண்டாசூர் எனும் கிராம மக்கள் - ராவணனின் மனைவியான மண்டோதரி பிறந்தது தங்களது கிராமத்தில்தான் என்று நம்பி, இராவணனை தங்கள் கிராமத்தில் மருமகனாகக் கருதி, இராவணனைப் போற்றுகிறார்கள். இவற்றிற்கு வரலாற்று ஆதாரங்கள் ஏதும் இல்லை என்றாலும், ‘ராமனை’ பார்ப்பனர்கள் உயர்த்திப் பிடிப்பது போல் - ‘இராவணனை’ போற்றும் நம்பிக்கையும் நாட்டில் நிலவுகிறது. இந்த உணர்வுகளை கிஞ்சித்தும் மதியாமல், ‘இராவணனை’ தீமையின் உருவமாக்கி, தீயிட்டுப் பொசுக்குவது என்ன நியாயம் என்பதே நமது கேள்வி?

இப்படி தென்னிலங்கை வேந்தன் ‘இராவணனை’ தீயிடும் ஆரியக் கூத்தில் பங்கெடுக்கும் மன்மோகன்சிங் ஆட்சி தான், ஈழத்தில் தமிழர்களைக் கொன்று குவிக்க சிங்களர்களுக்கு ஆயுதங்களையும், ராணுவப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

இராவணன் - திராவிட மாவீரன் என்ற கருத்தை முன் வைத்து, தமிழ் ஈழத்தில் ‘விடுதலை புலிகள்’ நடத்தும் ‘புலிகளின் குரல்’ வானொலி ‘இலங்கை மண்’ எனும் தொடர் நாடகத்தை 53 வாரங்கள் ஒலி பரப்பியது. அந்நாடகத்தை விடுதலைப்புலிகள் நூலாகவும் வெளியிட்டுள்ளனர். அந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய தமிழ் ஈழ மக்களின் தேசிய தலைவர் பிரபாகரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

“போர் விதிமுறைகளுக்கு மாறாக, மிகவும் கபடமான வழியில் தமிழ்மன்னனான இராவணனைக் கொன்றுவிட்டு, உண்மைக்குப் புறம்பான முற்றிலும் பொய்யான ஒரு வரலாறு எழுதப்பட்டது. மிகவும் நுட்பமாகச் செய்யப்பட்ட இந்த வரலாற்றுத் திரிபில் தமிழரின் பண்டைய வரலாறு இருட்டடிப்பு செய்யப்பட்டது. தலைகீழாகத் திரித்து விடப்பட்ட இந்த வரலாற்றின் தாக்கம் இருபத்தோராம் நூற்றாண்டிலும் முடிவுறவில்லை” என்று குறிப்பிட்டுள்ளார். இராவணனுக்கு தீ வைத்து மகிழ்ச்சிக் கூத்தாடும் ஆரியர்களும், அவர்களது வலையில் சிக்கிக் கிடப்போரும், இராவணனை அழித்த முறையைப் போலவே தமிழ் ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும், தமிழ் ஈழ மக்களின் ஒரே நம்பிக்கை ஒளி பிரபாகரனையும் அழித்திட ‘சூழ்ச்சி வலை’ விரிக்கிறார்கள். எம்.கே.நாராயணன் களும், சிவசங்கரமேனன்களும், ‘இந்து’ ராம்களும், ‘துக்ளக்’ சோக்களும், சுப்ரமணிய சாமிகளும், உளவு நிறுவனங்களும் மரத்தின் பின்னால் பதுங்கி ‘விபிஷணர்களைப் பிடி; அவர்களை அமைச்சராக்கு; இதோ ரகசிய ஆயுதங்களைப் பிடி; வெளியில் சொல்லாதே’ என்று ‘ராமாயணம்’ காட்டிய வழியில் இராவணனை வீழ்த்தும் படலத்துக்கு திட்டங்களைத் தயாரிக்கிறார்கள்.

தாய்த் தமிழ்நாட்டின் குடிமக்களை ‘பயங்கரவாதம்’, ‘தீவிரவாதம்’, ‘ஆயுதக் கலாச்சாரம்’ என்ற சொல்லாடல்களுக்குள் சிக்க வைத்து, மூளைச் சலவை செய்ய முயற்சிக்கிறார்கள். ஆனால், இது ‘இராமாயணயுகம்’ அல்ல. ‘இராவணயுகம்’ என்பதை எதிரிகளுக்கு நாம் உணர்த்த வேண்டும்.

இனி வரும் காலத்தில் இராமலீலாவுக்கு பதிலடியாக ‘இராவண லீலா’வுக்கு தயாராக வேண்டிய நிலையை பார்ப்பனர்களே உருவாக்கி வருகிறார்கள். இராவணன் வாழ்க என்ற முழக்கத்தோடு மாவீரன் பிரபாகரன் வாழ்க என்று சேர்த்து முழக்குவோம்! இராமனுக்கு எதிராக தீ மூட்டுவோம்; அதில் இந்திய தேசிய பார்ப்பன வர்க்கத்தையும், துரோகத்தையும் சேர்த்துப் பொசுக்குவோம்!

## பெரியார் விமர்சித்த போராட்டத்தை ஆதரித்த, கி.வீரமணி!

### திரிபுவாத திம்மன்கள் – யார்? (5)

அவ்வப்போது ஆட்சிக்கு வரும் கட்சிகளுக்கு ‘ஆலவட்டம் வீசி’ அதிகார மய்யத்தின் அரவணைப்பைத் தேடிக் கொண்டிருப்பவர் கி.வீரமணி. இந்த அரவணைப்புக்காக அவர் மேற்கொள்ளும் ‘யுக்திகளுக் கும்’, அதனடிப்படையில் வெளியிடும் சந்தர்ப்பவாத அறிக்கைகளுக்கும் கொள்கை முலாம் பூசிக் கொள்கிறார்கள்.

ஆச்சாரியார் கொண்டு வந்த குலக்கல்வி திட்டத்தை ஒழிப்பதற்கும், நாடு முழுதும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே கல்வி வெளிச்சம் பரவுவதற்கும், காமராசர் ஆட்சியை தீவிரமாக ஆதரித்தார் பெரியார். அதற்காக அவர் அதிகார மய்யத்திடம் சரணடைந்துவிடவில்லை. அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை காமராசர் ஆட்சியின் போதுதான் நடத்தினார். தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை காமராசர் ஆட்சியில் தான் அறிவித்தார். அதேபோல், இப்போது நடந்தால் ஆட்சிக்கு தொல்லைதரவே இத்தகைய போராட்டங்களை பெரியார் நடத்துகிறார் என்று, கி.வீரமணி அறிக்கைகளை வெளியிட்டிருப்பார்.

பார்ப்பனர் ஜெயலலிதா ஆட்சிக்கு ஆதரவும், பாராட்டுகளையும் குவித்துக் கொண்டிருந்தபோது, அந்த ‘யுக்திக்காக’ பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பும், கடவுள் எதிர்ப்பும், அவரது லட்சியமல்ல. ஒரு வழிமுறைதான் என்ற ‘வியாக்யானத்தை’ வீரமணி முன் மொழிந்ததை கடந்த இதழில் சுட்டிக்காட்டியிருந்தோம். மற்றொரு கொள்கை புரட்டை இங்கே எழுதுகிறோம்.

1965 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம், பெரியாருக்கு உடன்பாடானது அல்ல. கட்டாய இந்தியைக் கொண்டு வந்த பார்ப்பனர் ராஜகோபாலாச்சாரி, 1965 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் களமிறங்கினார். தி.மு.க.வும் அப்போது ராஜகோபாலாச்சாரியின் சுதந்திரா கட்சியை தனது கூட்டணியில் சேர்த்துக் கொண்டிருந்தது. பெரியார் இந்தப் போராட்டத்தை பார்ப்பனர் நடத்தும் கலவரம் என்று கூறினார். பெரியாரின் எதிர்ப்புக்கு உள்ளான அந்தப் போராட்டத்தை கி. வீரமணி, பெரியாருக்குப் பிறகு அங்கீகரித்தார். அதற்கான பின்னணியும் ‘யுக்தி’ தான்! ஜெயலலிதாவை தீவிரமாக ஆதரித்துக் கொண்டிருந்தபோது, பெரியார் திடலில் 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு தியாகிகளுக்கு ஒரு பாராட்டுக் கூட்டத்தை கி.வீரமணி ஏற்பாடு செய்தார். ஜெயலலிதாவின் நெருக்கமான தோழியான சசிகலாவின் கணவரும், ஜெயலலிதா ஆட்சி காலத்தில் அதிகாரத்தில் கொடிகட்டிப் பறந்தவருமான நடராசன் - 1965 ம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர். அவருக்கு விருது வழங்கி மகிழ்விக்க, நடராசன் ஆலோசனைப்படி கி.வீரமணி நடத்திய பாராட்டுக் கூட்டமே அது. அந்த ‘விருது வழங்கும்’ நிகழ்ச்சியின் விளம்பரம் ‘தினமணி’ நாளேட்டில் வெளியிடப்பட்டது. திராவிடர் கழகத்தின் பெயரால் நடத்தப்பட்ட அந்த நிகழ்ச்சிக்கான விளம்பரத்தில் திராவிடர் கழகக் கொடிக்கு பதிலாக, அ.இ.அ.தி.மு.க. கொடிகளோடு விளம்பரம் வெளி வந்தது. பெரியாரால் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு போராட்டத்தை பெரியார் மறைவுக்குப் பிறகு, அதை அங்கீகரித்து போராட்டத்தில் ஈடுபட்டவருக்கு விருது வழங்கியது - பெரியாரைத் திரிப்பது அல்லவா? அதிகாரத்தில் உள்ளவர்களை மகிழ்விப்பதற்காக எந்த எல்லைக்கும் போகக் கூடிய - இந்த வீரமணிதான், பெரியார் நூல்களை, மற்றவர்கள் வெளியிட்டால், திரித்து விடுவார்கள் என்கிறார். பெரியார் திராவிடர் கழகத்தை ‘திரிபுவாத திம்மன்கள்’ என்கிறார்!

பெரியாரைத் திரிப்பது யார்? பதில் வருமா?

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

## கோவையில் ‘இந்து’ ஏட்டுக்கு தீ

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகம் கிளர்ந்தெழுவதை தாங்கிக் கொள்ள முடியாத பார்ப்பன ‘இந்து’ ஏடு அக்.14 அன்று நஞ்சை கக்கும் தரம் தாழ்ந்த கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. இந்துவின் ஆசிரியர் குழுவைச் சார்ந்த மாலினி பார்த்தசாரதி என்ற பார்ப்பனப் பெண் எழுதியுள்ள அக்கட்டுரையில் விரக்தியடைந்த விடுதலைப் புலிகள் தூண்டுதலால் தான் - தமிழ்நாட்டில், ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டங்கள் நடக்கின்றன என்றும், இப்படி தூண்டிவிடும் சக்திகள் ஆபத்தானவை என்றும் எழுதியுள்ளார். விடுதலைப்புலிகளும், பிரபாகரனும் சிங்கள ராணுவத்தின் பிடிக்குள் சிக்கி விட்டார்கள் என்றும், அவர்கள் கதை முடியப் போகிற நிலையில், அதைத் தடுக்கும் தமிழக எழுச்சிகள் கண்டிக்கத்தக்கது என்றும், சாக்கடைத்தனமாக பூணூல் திமிரோடு அக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. தமிழ் உணர் வாளர்களிடம் கடும் கொந்தளிப்பை உருவாக்கியுள்ள இக் கட்டுரையை எதிர்த்து, கொதித்துப் போன கழக இளைஞர்கள் கோவையில் ‘இந்து’ பத்திரிகை அலுவலகத்தின் முன் கட்டுரை வந்த அதே நாளில் பகல் 12 மணியளவில் திரண்டு பார்ப்பன ஏட்டுக்கு எதிராக எச்சரிக்கை முழக்கமிட்டனர். மாலினி பார்த்தசாரதியின் ‘மலநாற்றம்’ வீசும் கட்டுரை வெளியிட்ட ‘இந்து’ ஏட்டுக்கு தீ வைத்தனர். கழக சட்டக் கல்லூரி மாணவர்களும், கழகத்தினரும் இரண்டு அணியினராக வந்தனர். பார்ப்பன இந்து நிர்வாகம் தோழர்களை தாக்கத் தொடங்கியது. இரு தரப்பிலும் கைகலப்பானது. பின்னர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானோர்: சாஜித், பன்னீர்செல்வம், மணி கண்டன், விசுவம், பிச்சுமணி, பாண்டியன், நேருதாஸ், சத்யா, ரகு, மணிவண்ணன், ரவி.

# விடுதலைப் புலிகளுக்கும் ஈழ விடுதலைக்கும் தமிழகத்தில் பேராதரவு

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் கருத்து கணிப்பு

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், ஈழத் தமிழர்களின் போராட்டத்தையும் பெரும்பான்மையான மக்கள் தீவிரமாக ஆதரிக்கிறார்கள் என்ற உண்மையை - 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு தமிழகம் முழுதும் கருத்துக் கணிப்பு நடத்தி வெளியிட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளுக்கும், ஈழத் தமிழர் போராட்டத்துக்கும் தமிழ்நாட்டில் ஆதரவு இல்லை என்று பார்ப்பன ஊடகங்கள் செய்து வரும் பிரச்சாரம் பொய் என்பது இதன் மூலம் அம்பலமாகியுள்ளது. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு விடுதலைப் புலிகளையோ, ஈழத் தமிழர் போராட்டத்தையோ ஆதரிக்கும் ஏடு அல்ல. ஆனாலும், அந்த ஏடே நடத்திய கருத்துக் கணிப்பு, இந்த உண்மைகளை தெளிவுபடுத்தியுள்ளது. 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு - 'சிஃபோர்' எனும் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பு முடிவுகளை அக்.12, 2008 அன்று முதல் பக்கத்தில் தலைப்பு செய்தியாக வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய ராணுவம் பயிற்சி தந்து, ஆயுதங்கள் வழங்குவதை தமிழ் நாட்டில் கணிசமான மக்கள் விரும்பவில்லை. இதனால் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி கட்சியுடன் திமுக. உறவை துண்டித்துக் கொள்ள வேண்டும் என்பதே - கணிசமான தமிழர்களின் கருத்து.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு, அவர் ராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டால், இந்திய ராணுவம் உடனடியாக, பிரபாகரனை மீட்க, இந்திய ராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று பெரும்பாலோர் கூறுகிறார்கள்.

விடுதலைப்புலிகள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்றும், ஈழத் தமிழர்களின் ஒரே பிரதிநிதி விடுதலைப் புலிகள் தான் என்றும் பெரும்பாலான மக்கள் கூறுகிறார்கள்.

40 சதவீத தமிழர்கள் ஈழத் தமிழர்களுக்கு நிதி உதவியும், பொருள் உதவியும் வழங்க விருப்பமுடன் உள்ளனர். சென்னை, கோவை, ஈரோடு, சேலம், மதுரை, வேலூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. 1031 பேர் பல்வேறு தரப்பிலிருந்து தேர்வு செய்யப்பட்டனர். பேட்டி காணப்பட்டவர்களில் 45 சதவீதம் பேர் பெண்கள். கடந்த அக்டோபர் 6 ஆம் தேதியிலிருந்து 11 ஆம் தேதி வரை இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது என்பதால், இதுவே தற்போதைய தமிழர்களின் உணர்வு என்பது குறிப்பிடத்தக்கது.

- தமிழ் ஈழம் அமைய - பணமும் பொருளும் அளிக்கத் தயார் என்று 40 சதவீதம் பேர் கூறுகிறார்கள். தமிழ் ஈழத்தை ஆதரிக்க மாட்டோம் என்று 10 சதவீதம் பேர் மட்டுமே கூறுகிறார்கள். ஈழத் தமிழர்களுக்காக முழு அடைப்பு நடந்தால், அதில் பங்கேற்போம் என்று 10 சதவீதம் பேரும், தமிழ் நாட்டில் அடைக்கலம் தேடி வரும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தருவோம் என்று 22 சதவீதம் பேரும், நியாயமான பிரச்னை தான், ஆனால், தங்களுக்கு இதில் ஆர்வம் இல்லை என்று 14 சதவீதம் பேரும் கூறுகிறார்கள்.
- பிரபாகரனுக்கு ஏதேனும் இலங்கை ராணுவத்தால் ஆபத்து நேருமானால், இந்திய ராணுவத்தை உடன் அனுப்பி பிரபாகரனை பாதுகாக்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டில் பெரும்பான்மையோர் கருத்து. இப்படி கருத்து கூறியவர்கள் 31 சதவீதம்.
- அதேபோல், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க வேண்டும் என்பதே பெரும்பான்மை தமிழர்களின் கருத்து. 51 சதவீதத்தினரின் கருத்து இதுவேயாகும். தடையை நீடிக்க வேண்டும் என்போர் 8 சதவீதம் மட்டுமே.
- விடுதலைப்புலிகள் இயக்கம் ஒன்று தான் ஈழத் தமிழர்களின் உண்மையான ஒரே பிரதிநிதி என்பதும், அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. விடுதலைப் போராளிகள் என்பதும் பெரும்பான்மைத் தமிழர்களின் கருத்தாக உள்ளது. 36 சதவீதத்தினர் இந்தக் கருத்தைக் கூறியுள்ளனர். பயங்கரவாதிகள் என்று கருத்துடையோர் 12 சதவீதம் மட்டுமே. மற்றவர்களுடன் இணைந்து தமிழர்களுக்காகப் போராடும் அமைப்பு என்று 22 சதவீதம் பேரும், சுதந்திரத்துக்காகப் போராடுவோர் என்று 30 சதவீதம் பேரும் கருத்து கூறியுள்ளனர்.
- இலங்கைப் பிரச்னையைத் தீர்க்க தமிழக அரசியல் கட்சிகள் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு - இலங்கைக்கு ஆயுதமும், ராணுவப் பயிற்சியும் வழங்கி வரும் மன்மோகன்சிங் ஆட்சியிடம் திமுக. உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்பதே பெரும்பான்மை தமிழர் களின் கருத்தாக உள்ளது. 34 சதவீதம் பேர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளனர். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முழு அடைப்பு நடத்தலாம் என்று 10 சதவீதத்தினரும், சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து, பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று 12 சதவீதத்தினரும், ஈழத் தமிழர் பிரச்சினைக்காக சிறப்பு வரி விதித்து, தமிழர்களுக்கு உதவ முன்வந்தால், வரி கட்டத் தயார் என்று 10 சதவீதத்தினரும், பிரச்சினையை அவர்களே தீர்த்துக் கொள்ளட்டும் என்று 2 சதவீதத்தினரும் கருத்து கூறியுள்ளனர்.
- ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகள் ஈடுபாடு காட்டுவதில் போட்டி போட்டுக் கொண்டிருப்பது சரி தானா என்ற கேள்விக்கு அது நியாயமானதே என்று பெரும்பான்மையான 44 சதவீதத்தினர் கருத்து கூறியுள்ளனர்.

# சிற்பி ராசனின் மகத்தான சமூகப் புரட்சி!

பெரியார் திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்டு, மூடநம்பிக்கைக்கு எதிராக மக்களிடம் பகுத்தறிவு பரப்புதலை லட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வரும் தோழர் சிற்பி ராசன் தலை சிறந்த சிற்பிகளில் ஒருவர். அவர் வழிகாட்டுதலில் உருவாக்கப்பட்ட 'கடவுள்கள்' தலித் சிற்பிகளால் உருவாக்கப்பட்டவர்கள். சிற்பி ராசனின் இந்த மகத்தான சமூகப் புரட்சியை 'ஆனந்தவிகடன்' ஏடு 8/10/08 படம் பிடித்துக் காட்டியுள்ளது.

"பதினைந்து வருடங்களுக்கு முன்பு இசைஞானி இளையராஜா எனது சிற்ப மையத்துக்கு வந்திருந்தார். அப்போது நான் செதுக்கிக் கொண்டு இருந்த விநாயகர் சிலையைத் தொட்டுப் பார்க்கலாமா என்று கேட்டார். 'இப்போதுதான் தொட முடியும். கோயில் கருவறைக்குள் சென்றுவிட்டால் பக்தனாகிய உங்களாலும் தொட முடியாது. சிலையைச் செய்த என்னாலும் தொட முடியாது' என்றேன். சிரித்துக் கொண்டார்!" தனது உளியைப் போலவே சிற்பி ராஜனின் வார்த்தைகளிலும் கூர்மை!

இந்தியாவின் மிகச் சிறந்த சிற்பிகளில் ஒருவர் ராஜன். சுவாமிமலை அருகே திம்மக்குடியில் இருக்கும் 'ராஜன் சிற்ப மையத்'தில் ஏதோ ஒரு தாளகதியில் இசை மீட்டுகின்றன நூற்றுக்கணக்கான உளிகள். தாமரைப்பூ சரஸ்வதி, காசுகளை அள்ளி இறைக்கும் லட்சுமி, ரதி, மன்மதன், திருப்பதி வெங்கடாசலபதி, ஆஞ்சநேயர், விநாயகர், வள்ளி தெய்வானையோடு முருகன், ஊழித் தாண்டவமாடும் நடராசர் என பஞ்சலோக மற்றும் வெண்கல வடிவங்களில் மினி தேவலோகச் சூழல்! இந்தியாவின் சார்பாக லண்டன், ஜெர்மனி, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து சிற்பக் கண்காட்சிகளில் கலந்து கொள்ள மத்திய அரசு தேர்ந்தெடுப்பது இவரைத்தான். பிரான்ஸ் நாட்டுப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பில் பாடமாக சிற்பி ராஜனின் வாழ்க்கைக் குறிப்பு இடம் பெற்றிருக்கிறது.

இவற்றைத் தாண்டியும் ராஜனுக்கு இருக்கிறது சில தனிச் சிறப்புகள். சுவாமி சிலைகளைத் தெய்வாம்சமாக வடித்துத் தரும் ராஜன், ஒரு பழுத்த நாத்திகவாதி. பெரியார் கொள்கைகளுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர். இவரது சிற்ப மையத்தின் இன்னொரு சிறப்பு தலித் சிற்பிகள்! தாழ்த்தப்பட்டவர்கள் என ஒதுக்கப்படும் தலித்களால் உருவாக்கப்பட்ட எண்ணிலடங்கா கடவுள் சிலைகள் இந்தியாவைத் தாண்டி உலகெங்கிலும் உள்ள முக்கியக் கோயில்களில் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றன. புரொஃபஷனல் கலைக்கூடம், லேப்-டாப் மூலம் வாடிக்கையாளர்களுடன் தகவல் பரிமாற்றம் என சிற்பக் கலையை அடுத்த நூற்றாண்டுக்குக் கை பிடித்து அழைத்துச் செல்கிறார் ராஜன். கலவையான உலோக மணம் நாசியைத் தீண்ட அங்கிருந்த வித்தியாசமான 'பறையடிக்கும் விநாயகர்' என்னோடு நின்றிருந்த வின் செண்ட்டின் கேமராவை ஈர்த்தது.



"அனைவருக்கும் பொதுவான கடவுள், தலித் மக்களின் கலாசாரத்தையும் பிரதிபலிக்க வேண்டும் இல்லையா? அதற்காகத்தான் இந்தப் பறையடிக்கும் விநாயகர் சிலை! பதின்மூன்று வயதிலிருந்தே கடவுள் மறுப்பாளனாக இருந்தாலும், எனக்கிருந்த சிற்பக் கலைநயத்தைக் கடவுள் சிலை செய்வதன் மூலம்தான் ஆழமாக வெளிப்படுத்த முடியும் என்று நம்பினேன். வெறும் கல்லை, உலோகத்தை கலைநயம் மிக்க கடவுளர்களாகத் தங்கள் உழைப்பின் மூலம் உரு வாக்கித் தரும் மக்களைக் கோயிலின் உடன்ளேயே விட மறுப்பது மானுட விரோதம் இல்லையா? பெரியார் தொண்டனாக இதற்கு நான் ஏதாவது செய்ய வேண்டியிருந்தது.

முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும்? மூலவர் சிலைகளையே தலித்துக்களைக் கொண்டு உருவாக்கி கோயில் கருவறைக்குள் வைக்கத் தீர்மானித்தேன். சிற்பக்கலையில் ஆர்வமுள்ள தலித் இளைஞர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு இலவசமாகத் தங்குமிடம், பயிற்சிகள் அளித்து என் சிற்ப மையத்தைக் குருகுலமாகவே மாற்றினேன். எதிர்பார்த்ததைவிடவும் இந்த முயற்சிக்குக் கடும் எதிர்ப்புகள். 'சாமி சிலையைக் கீழ்ச் சாதியினர் செய்வதா?' என்று கேள்வி எழுப்பியவர்கள் எல்லாம் அவர்களால் உருவாக்கப்பட்ட கலைநயம் மிக்க கடவுள் சிலைகளைப் பார்த்து அசந்து போனார்கள். ஆரம்ப காலங்களில் கோயில் நிர்வாகிகள் தலித்துகளால் உருவாக்கப்பட்ட சிலைகளை வாங்க மறுத்தார்கள். கடைசியில் அவர்களைக் கலை வென்றது. அந்த அளவுக்கு தலித் இளைஞர்களின் சிற்ப நுட்பம் ஒவ்வொரு அங்குலத்திலும் வெளிப்பட்டது.

இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தலித்துகள். நமக்கான கலையை, நாகரிகத்தை உருவாக்கித் தந்தவர்கள். சாமி சிற்பங்கள் மட்டும் அந்தக் கலை குடிகளின் கரங்களிலிருந்து தப்ப முடியுமா? எனது சிற்ப மையத்தில் அவர்களால் உருவாக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள் நியூ ஜெர்ஸி சிவன் கோயில், க்ளீவ்லேண்டிலுள்ள இந்து மிஷன் கோயில்களை அலங்கரிக்கின்றன. இதே சுவாமி மலைக்கு அருகில் காவிரிக் கரையில் அமைந்துள்ள ஐயப்பன் சிலையை நானும் எனது மாணவர்களும் தான் உருவாக்கினோம். அதன் பிறகு, அந்த ஐயப்பன் சிலைக்கு வெள்ளிக் கவசம் வேண்டுமென கோயில் நிர்வாகத்தினர் கேட்டனர். கவசத்துக்கு அளவெடுக்க வேண்டுமானால் கருவறைக்குச் செல்ல வேண்டும். ஆனால், கோயில் நிர்வாகம் என்னையும் எனது தலித் மாணவர்களையும் கருவறைக்குள் விடாமல் தடுத்தது. கோபப்பட்டு திரும்பி வந்துவிட்டோம். பிறகு, அவர்களே தேடி வந்து அழைத்ததால் அளவெடுத்துக் கவசம் சாத்தி னோம். அவ்வளவு ஏன்...? காஞ்சி சங்கரமடத்தி லுள்ள காமாட்சி அம்மனின் அவதார மாகிய மகாமேரு சிலையை உருவாக்கியவர்களும் என் தலித் மாணவர்கள்தான்" என்கிற ராஜனும், அவரது மாணவர்களும் இது வரைக்கும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சாமி சிலைகளை உருவாக்கி உள்ளனர்.

சுவாமிமலையில் இயங்கும் சிற்ப மையத்தை அண்மையில் விற்றுவிட்டார் ராஜன். அதை வாங்கியவர்கள், 'ராஜன் சிற்ப மையம்' என்ற பெயரையே தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள ஒரு பெரும் தொகையை ராயல்டியாக வழங்கியுள்ளனர். இப்போது கும்பகோணம் அருகே ஆலங்குடியில் பரந்து விரிந்த பிரமாண்ட சிற்ப மையத்தை உருவாக்கும் முயற்சியில் இருக்கிறார். "அங்கும் தலித் இளைஞர்களுக்கே முன்னுரிமை" எனும் ராஜன், சிற்பக் கலையின் மீதுள்ள ஈடுபாடு காரணமாகத் திருமணமே செய்து கொள்ளவில்லை.

ராஜனின் சீடரான சிற்பி பாண்டுரங்கன், "ஒளிவு மறைவின்றி சிற்பக் கலையின் ரகசிய நுட்பங்கள் அனைத்தையும் ராஜன் ஐயா தான் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். வருமானம், வெளிநாட்டுக்காரர் களின் பாராட்டுக்கள் பெரிய விஷயமில்லை. உள்ளூ ரிலேயே சாதியின் பெயரைச் சொல்லி எங்களை ஒதுக்கியவர்கள் கூட இன்று மரியாதையோடு பார்க்கிறார்கள்." ஏழரை அடி உயரமும் நானூறு கிலோ எடையும் கொண்ட லட்சுமி சிலையை உயிரோட்டமாகச் செதுக்கியபடியே பேசுகிறார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இறுகி கெட்டிப்பட்டுக் கிடக்கும் சாதி என்னும் கடும்பாறையின் மீது ராஜனின் உளி தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருக்கிறது!

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ கண்டன தலையங்கம்

# பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சியை வீரமணி முடக்குவது – பெரியாருக்கே எதிரானது


*(சமூக பொருளாதார ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வரும் - இந்தியாவின் தலைசிறந்த ஆங்கில ஆய்வு வார ஏடு - ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ ஆகும். நாட்டின் தலைசிறந்த அறிஞர்கள், ஆய்வாளர்களை வாசகர்களாகக் கொண்டிருக்கும் அந்த ஏடு பெரியார் நூல்கள் தேசவுடைமையாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது. திராவிடர் இயக்கத்தின் சீரிய ஆய்வாளரும், சர்வதேச நாடுகளில் திராவிடர் இயக்க ஆய்வாளர்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவருமான முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் எழுதிய கட்டுரையை அந்த வார ஏடு தலையங்கமாகவே வெளியிட்டிருக்கிறது. அதன் தமிழாக்கம், இங்கே தரப்படுகிறது)*

பெரியாருடைய எழுத்தும் பேச்சும் அறிவுசார் சொத்துடைமை என்றும், அவை தனது தலைமையின் கீழ் உள்ள பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்துக்கு மட்டுமே சொந்தமானது என்றும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி, அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் உரிமை கோரியுள்ளார். பெரியார் எழுத்து - பேச்சுகளை வேறு எவராவது வெளியிட்டால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தார். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், தமிழ்நாட்டில் வெகு மக்களின் பொதுப் புத்தியில் மிகப் பெரும் மாற்றங்களை உருவாக்கிய பெரியாரின் அரை நூற்றாண்டு கால சிந்தனைகளையும் அதை பரப்பிட பெரியார் மேற்கொண்ட கடினமான உழைப்பையும், தமக்கே உரித்தானது என்று ‘ஏகபோக’ உரிமை கோருகிறார் கி.வீரமணி.

தமிழ்நாட்டில் நீண்டகாலமாக ஒரு மரபு உண்டு. பெரியாருடைய கருத்துகளை ஏற்றுக் கொண்ட பல வெளியீட்டாளர்கள். பெரியார் நூல்களை எந்தத் தடையுமின்றி, வெளியிட்டு பரப்பி வந்திருக்கிறார்கள். இத்தகைய முயற்சிகள்தான் பெரியாரின் எழுத்தும், பேச்சும், நிலையாக தொடர்ந்து தமிழக மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தின. அப்படி பெரியார் நூல்களை வெளியிட்டவர்களில் பெரும்பாலோர் பெரும் வசதி படைத்தவர்கள் அல்ல. அவர்களே தங்களிடமுள்ள மிகக் குறைந்த நிதி வாய்ப்புகளைக் கொண்டு வெளியிட்ட சிறு வெளியீட்டாளர்கள் தான். அவர்களின் அரசியல் ஈடுபாடு தந்த உந்துதல் காரணமாகவே இந்த வெளியீடுகளைக் கொண்டு வந்தார்கள்.

அதே நேரத்தில், கடந்த காலங்களில் பெரியார் சிந்தனைகளை தொகுக்கும் பெரிய முயற்சிகளும் நடந்துள்ளன. திருச்சி சிந்தனையாளர் கழகம் 1974 ம் ஆண்டில் வே. ஆனைமுத்து அவர்களை பதிப்பாசிரியராக கொண்டு பெரியார் சிந்தனைகள் - 3 தொகுதிகளை வெளியிட்டது. அந்த தொகுதிகள் தான். பெரியாரின் சமூகம் மற்றும் அரசியல் குறித்த - பல்வேறு தமிழ் ஆங்கில ஆய்வுகள் உருவாகக் காரணமாக இருந்தன. இந்த 3 தொகுதிகளையும் சுதந்திரமாக பயன்படுத்தி எத்தனையோ ஆய்வுகள் வெளிவந்து விட்டன. அப்போதெல்லாம், இதை எதிர்த்து எவரும் கேள்வி கேட்டதில்லை.

தமிழ்நாட்டில் வாசிப்பாளர்களிடையே பெரியார் நூல்களுக்கான தேவை அதிகமாக இருந்தும்கூட, திராவிடர் கழகமோ அல்லது பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனமோ, இந்தத் தேவைகளை நிறைவேற்ற - பெரிய முயற்சிகள் ஏதும் எடுக்கவில்லை. இத்தனைக்கும் திராவிடர் கழகத்திடம் ஏராளமான சொத்துகளும் பொருள் வசதியும் உண்டு. அவர்களுக்கு நிதிப் பற்றாக்குறை என்ற பிரச்சினை ஏதுமில்லை. 1983 ஆம் ஆண்டிலேயே திராவிடர் கழக செயல்பாட்டாளர்கள் கடுமையாக உழைத்து, பெரியாரின் எழுத்து பேச்சுகளை தொகுத்து கைப்பட எழுதி, கி.வீரமணியிடம் கையளித்தார்கள். அப்படி தரப்பட்டு, கால் நூற்றாண்டு காலம் ஓடிவிட்டது.



### Monopolising Periyar

*No individual or organisation should have exclusive righ*

*M S S Pandian writes:*

In a recent statement, K Veeramani, the general secretary of the Dravidar Kazhagam (DK), has claimed that the “intellectual property rights” of Periyar E V Ramasamy’s writings and speeches rest with the Periyar Self-Respect Propaganda Institute which he heads. He has warned that anyone who reproduces them would be liable to prosecution. In other words, Veeramani is seeking a monopoly over Periyar’s intellectual and political labour of over half a century which radically transformed the political common sense of the state.

It is indeed a long-standing political tradition in Tamil Nadu that different publishers of Periyarist political and social persuasions freely publish Periyar’s works. This has ensured a constant circulation of his writings and speeches in the Tamil public sphere. Most often those who publish Periyar’s works are small-time publishers with meagre resources. It is their political

Economic & Political WEEKLY EPW SEPTEMBER 27, 2008

‘குடிஅரசு’ 1925 ஆம் ஆண்டு பெரியாரால் தொடங்கி நடத்தப்பட்ட வார ஏடு ஆகும். ‘குடிஅரசு’ தொகுப்புகளோடு 1928 இல் பெரியார் நடத்திய ஆங்கில ஏடான ‘ரிவோல்ட்’டிலிருந்து முக்கிய கட்டுரைகளைத் தொகுத்து 800 பக்கம் கொண்ட நூலை வெளியிடுவதாகவும் பெரியார் திராவிடர் கழகம் அறிவித்திருந்தது. திராவிடர் கழகத்தைப் போல் பெரியார் திராவிடர் கழகம் பொருள் வசதி கொண்ட அமைப்பு அல்ல. ஆனாலும் கூட, பெரியாரின் எழுத்து-பேச்சுகளை மக்களின் கரங்களில் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்பதற்காக இந்தப் பெரிய திட்டத்தை அந்த அமைப்பு தேர்வு செய்தது. தமிழ்நாட்டின் வாசகர்களிடையே இந்த திட்டம், மிகப் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. தாங்களாகவே முன் வந்து நன்கொடைகளை வழங்குகிறார்கள். முன் பதிவுத் திட்டத்தின் கீழ் - இதற்காக நிதி திரட்டப்படுகிறது.

இந்த நிலையில், பெரியார் எழுத்துகளை ஏகபோகமாக்கிக் கொண்டு, மக்கள் மன்றத்துக்கு சென்று அடையாது தடுத்து நிறுத்தும் வீரமணியின் முயற்சிகள், பெரியார் கொள்கைகளுக்கே நேர்எதிரானதாகும். திராவிடர் கழகத்தின் அடிப்படையான வேலைத் திட்டமே, பகுத்தறிவு கொள்கைகளை மக்களிடம் பரப்புவதுதான் என்று பெரியார் கருதினார். நூல்கள் வெளியிடுவதில், பெரியார் எப்போதும் லாபக் கணக்குப் பார்த்ததில்லை. தனது சகாவும், சைவருமான ஈ.எம்.சுப்ரமணிய பிள்ளைக்கு பெரியார் 1947 இல் எழுதிய கடிதத்தில், “நான் மிகவும் குறைந்த விலையிலேயே நூல்களை வெளியிடுகிறேன். இதில் வர்த்தக நோக்கம் இல்லை. பெரும்பாலான நூல்கள், இலவசமாகவே வழங்கப்படுகின்றன. எனவே, வர்த்தக எல்லைக்குள் நின்று இந்த வேலையை செய்வது மிகக் கடினம்” என்று எழுதினார். பெரியாரைப் பொறுத்தவரை எல்லாவற்றையும்விட, பகுத்தறிவு கருத்துகள் பரவ வேண்டும் என்பதே மிகவும் முக்கியமானது. பெரியாரின் அந்த பகுத்தறிவுக் கருத்துகள் தாராளமாக பரவுதலை, முடக்கிப் போடும் முயற்சிகளில் தான் வீரமணி, இறங்கியுள்ளார்.

ஆளும் கட்சியான தி.மு.கழகம், இதில் வீரமணியை ஆதரிப்பதுதான், வருத்தத்துக்கு உரியதாகும். தி.மு.க.வின் அதிகாரபூர்வ ஏடான ‘முரசொலி’ வீரமணியின் அறிக்கைக்கு முக்கியத்துவம் தந்து வெளியிட்டுள்ளது. இதன் நோக்கம் பெரியார் திராவிடர் கழகம் வெளியிடும் ‘குடிஅரசு’ தொகுப்புகளை தி.மு.க. தொண்டர்கள் வாங்கிவிடாமல், ஒதுங்கிக் கொள்ளச் செய்வதுதான். வீரமணி, அ.இ.அ.தி.மு.க.வுடன் நெருக்கமாக இருந்துவிட்டு, இப்போது, தி.மு.க.வின் அரவணைப்புக்கு வந்துள்ளார். எனவே புதிதாக கிடைத்துள்ள நண்பரை, கைவிட வேண்டாம் என்று தி.மு.க. கருதுகிறது போலும்.

தான் ஒரு ‘பெரியாரிஸ்ட்’ என்றும், ‘பகுத்தறிவுவாதி’ என்றும், அவ்வப்போது வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தமிழக முதல்வர் மு. கருணாநிதி கூறி வருகிறார். அது உண்மையானால், உடனடியாக பெரியார் நூல்களை அவர் நாட்டுடைமையாக்க வேண்டும். அதன் பிறகு எவர்வேண்டுமானாலும் பெரியார் நூல்களை வெளியிடலாம். ஏற்கனவே, புதுமைப் பித்தன், கல்கி போன்ற எழுத்தாளர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டதால், பதிப்புத்துறை ஜனநாயகப்படுத்தப்பட்டு, சிலர் மட்டுமே ‘லாபம்’ குவித்து வந்த ஏகபோகம் தகர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், இந்துக்கள் உரிமை என்ற பெயரால் தமிழ்நாட்டில் மதவாத அமைப்புகள் காலூன்ற இடம் தேடும் சூழ்நிலையில் பெரியாரியல் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. ?

## திருப்பூரில் பெரியார் கைத்தடி ஊர்வலம்



திருப்பூரில் பெரியார், அண்ணா சிலைகளை அகற்றக் கோரி இந்து மக்கள் கட்சி போராட்டம் அறிவித்த அக்.5 ஆம் தேதியன்று பெரியார் கைத்தடியுடன் திருப்பூர் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், மதவெறி சக்திகளை எதிர்கொள்ள ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

காவல்துறை, கழகத் தோழர்கள் 90 பேரை கைது செய்து, திருமண மண்டபத்தில் வைத்தது. கழக செயற்குழு உறுப்பினர் அங்ககுமார் தலைமையில் மாவட்ட தலைவர் துரைசாமி முன்னிலையில் போராட்டம் நடந்தது. திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த தோழர்களை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சந்தித்துப் பேசினார்.

திருப்பூர் மாநகராட்சி மேயர் செல்வராசு திருமண மண்டபம் வந்து தோழர்களைப் பாராட்டிப் பேசினார். பா.ம.க. பொறுப்பாளர்களும் தோழர் களை நேரில் சந்தித்து பாராட்டினர்.


ஒரே நாளில் 90 தோழர்களை திரட்டி, எதிர் போராட்டம் நடத்திய கழகத்தை முற்போக்கு அமைப்பினர் பலரும் பாராட்டினர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 16th October 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி
# பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 அக்டோபர் 23, 2008 புரட்சி 7 முழக்கம் 43 விலை : ரூ.2.50

# ‘இந்து’ ஏட்டுக்கு பதில்

கோவை, ஈரோடு நகரங்களில் ‘இந்து’ நாளேடு மீதான தாக்குதல்கள் தொடர்பாக அந்நாளேட்டின் முதன்மை ஆசிரியர் என். ராம், பெரியார் திராவிடர் கழகத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கைக்கு பெரியார் திராவிடர் கழகத்தின் விளக்கத்தையும், பதிலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையில் தமிழர்கள் மீது இனப் படுகொலையை அந்நாட்டு ராணுவம் தீவிரமாக கட்டவிழ்த்து விட்ட நிலையில், தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை தமிழக முதல்வர் கடந்த 14 ஆம் தேதி கூட்டினார். அந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் கூடிய அதே நாளில் ‘இந்து’ நாளேட்டின் நிர்வாக ஆசிரியர் மாலினி பார்த்தசாரதி கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். தமிழ்நாட்டில் இனத் தீவிரவாத ஆபத்து தலைதூக்குகிறது என்றும், விரக்தியுற்ற விடுதலைப் புலிகள் இதற்குப் பின்னால் இருந்து செயல்படுவதாகவும் அக்கட்டுரை கூறியது. பாதுகாப்பு தேடி பதுங்கு குழியை நோக்கி விடுதலைப் புலிகளின் தலைவர்களை இலங்கை ராணுவம் துரத்தி, முன்னேறிக் கொண்டிருப்பதாகவும், விடுதலைப் புலிகள் அத்தியாயம் முடியப் போகும் தருணத்தில், தமிழ்நாட்டில் மீண்டும் இனவெறி துண்டிவிடப்படுகிறது என்றும் அக்கட்டுரை குறிப்பிடுகிறது. இந்த இனவெறியை முன்னெடுப்பதில் இரண்டு கட்சிகளை அக்கட்டுரை சுட்டிக்காட்டியிருந்தது. ஒன்று பாட்டாளி மக்கள் கட்சி; மற்றொன்று மறுமலர்ச்சி தி.மு.க.

இந்தக் கட்டுரை வெளியான உடனே கோவையில் ‘இந்து’ பத்திரிகை அலுவலகம் முன், பெரியார் திராவிடர் கழகமும், உணர்வுள்ள இளைஞர்களும் ‘இந்து’ ஏட்டுக்கு எதிராக முழக்கமிட்டு, அந்த ஏட்டைக் கொளுத்தியுள்ளனர். ஈரோட்டில் ‘இந்து’ நாளேடுகள் கொளுத்தப்பட்டுள்ளன. இது பத்திரிகை சுதந்திரத்துக்கு எதிரான சட்டவிரோத வன்முறை என்றும், பெரியார் திராவிடர் கழகத்தை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்றும் ‘இந்து’ ராம் அறிக்கை கூறுகிறது.

தமிழினம் பூண்டோடு அழிக்கப்படும் சூழலில் தமிழகமே கொந்தளித்து நிற்கும் உணர்ச்சிப்பூர்வமான சூழ்நிலையில் அந்த உணர்வுகளைக் கிஞ்சித்தும் மதிக்காமல் இப்படி ஒரு கட்டுரையை வெளியிட ‘துணிவது’ பத்திரிகை தர்மமா என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறோம். இலங்கையிலே தமிழர்களைக் கொன்று குவிப்பது ‘இந்து’வின் பார்வையில் இனவெறியாகத் தெரியவில்லை. அந்த ராணுவ நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்றும் இலங்கை ராணுவம் வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும் பூரித்து கட்டுரை எழுதுகிறது. இதை எதிர்த்து தாய்த் தமிழகத்தில் உருவாகும் எழுச்சியை மட்டும் ‘இனவெறி’ என்கிறது.

இனவெறியர்கள் - சிங்களர்களா? படுகொலையை நிறுத்தக் கோரும் தமிழர்களா? என்று கேட்கிறோம்.

‘இந்து’ நாளேடு - ஒரு தேசிய பத்திரிகை என்ற போர்வையில் ஈழப் பிரச்சினையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசின் ‘முகவராகவே’ மாறி, தமிழ்நாட்டில் பிரச்சார இயக்கத்தையே நடத்திக்கொண்டு வருவதை தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

கருத்து சுதந்திரம் - பத்திரிகை சுதந்திரம் பற்றியெல்லாம் பேசும் ‘இந்து’ நாளேடு நடுநிலையையோ, கருத்து சுதந்திரத்தையே தனது ஏட்டில் பின்பற்றுகிறதா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது.




சென்னையில் கழகம் ஒட்டிய சுவரொட்டிகள்

இலங்கை ராணுவம் நடத்தும் இனப்படுகொலைகளையோ, அந்நாட்டின் அதிபர்களின் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளையோ கண்டித்து இந்த ஏடு எழுதியது உண்டா? மாறாக, ஈழத் தமிழர்களையும், அவர்களின் ஒரே பிரதிநிதிகளாக உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் குற்றக் கூண்டிலே நிறுத்துவதைத்தான் ஏட்டின் ‘பத்திரிகை தர்மமாகவும்’, ‘கருத்துச் சுதந்திர’க் கொள்கையாகவும் பின்பற்றி வருகிறது.

**அரசு ஒடுக்குமுறைக்கு ஒரு பத்திரிகை உள்ளாகும் போது அது – பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதாகும். அதைக் கண்டிக்க வேண்டியது நியாயம். மக்கள் உரிமைகளுக்கு எதிராக பத்திரிகைகள் செயல்படும் போது ஆத்திரமூட்டல்களை தூண்டிவிடும்போது மக்களின் தன்னெழுச்சியான எதிர்வினைகளை ‘கருத்து சுதந்திரப் பறிப்பு’ என்று கூறமுடியுமா?**

**விடுதலை இராசேந்திரன்**

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது ‘இந்து’ ஏட்டுக்கு கடும் விமர்சனங்கள் இருக்கலாம். அதற்காக பொய்யான செய்திகளை பரப்புவது கருத்து சுதந்திரமாகிட முடியுமா?

1984 ஜூலை 24 ஆம் தேதி பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று ஒரு செய்தியை வெளியிட்டது.

அந்த செய்திக்காக வருத்தம் தெரிவித்தது உண்டா?

பிறகு, 2005 ஜன.15 இல் பிரபாகரன் சுனாமியால் அடித்துச் செல்லப்பட்டு மரணமடைந்து விட்டார் என்று மீண்டும் எழுதியது. இப்படி ஒரு வதந்தியை கிளப்பிவிட்ட இலங்கை அரசின் வானொலியே அதை மறுத்துவிட்ட பிறகும், ‘இந்து’ பிரபாகரன் மரணத்தை உறுதி செய்யும் வகையில், ‘பிரபாகரன் எங்கே’ என்று தலையங்கமே தீட்டியது. இதுதான் பத்திரிகை சுதந்திரமா?

இலங்கையில் - சந்திரிகா, ரணில், ராஜபக்சே என்று தொடர்ந்து பிரதமர்கள் மாறிய நிலையில், இலங்கை அரசுக்கு ஆதரவாகவே செய்திகளையும், கட்டுரைகளையும், தலையங்கங்களையும் எழுதிக் குவித்ததே தவிர, செத்து மடியும் ஈழத் தமிழர்களுக்காக அல்ல என்பதை, அந்த ஏட்டைப் படிக்கும் வாசகர்களுக்குப் புரியும்.

**அதற்காகவே இலங்கை அரசின் உயர் கவுரவ விருதான ‘சிறீலங்கா ரத்னா’ விருதை, ‘இந்து’ ஆசிரியர் என்.ராமுக்கு அதிபர் சந்திரிகா கொழும்பு நகரில் வழங்கி மகிழ்ந்தார், அதைப் பெருமையுடன் ‘இந்து’ ராம் பெற்றுக் கொண்டார்.** விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவரான தமிழ்ச்செல்வன் குறி வைத்துக் கொல்லப்பட்டதைக் கண்டித்தோ, நார்வே தனது சொந்த செலவில் கட்டித் தந்த சமாதான செயலகத்தை ராணுவம் குண்டு வீசி தகர்த்தது பற்றியோ, போர் நிறுத்த ஒப்பந்தத்தை - தன்னிச்சையாக ராஜபக்சே அரசு ரத்து செய்து விட்டதைக் கண்டித்தோ, ‘இந்து’ ஏடு கண்டித்து எழுதியதுண்டா? இவையெல்லாம், ‘இனவெறி’யாக ‘இந்து’வின் கண்களுக்கு தெரியாதா?

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத் தலைவர்கள் வெளியிடும் கருத்துகளை வெளியிடுவதற்குக்கூட ‘இந்து’வின் கருத்து சுதந்திரத்தில் இடம் கிடையாது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இலங்கை இராணுவம் ஒப்பந்தத்தை மீறி நடத்திய ராணுவ நடவடிக்கைகளை எல்லாம் ராஜபக்சேயின் வெற்றியாகப் பாராட்டி எழுதிய ‘இந்து’ நாளேடு அதற்கு பதில் தாக்குதல்கள் வரும் போது மட்டும் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்படுகிறது என்று எழுதும்.

சுனாமிப் பேரலையால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பிணமான போது - வீடு வாசல்களை இழந்த போது -

ஈழத் தமிழ் நாளேடுகள் - அலுவலகங்கள் மீது இலங்கை ராணுவம் குண்டு வீசிய போது -

இராணுவம் பத்திரிகையாளர்களை சுட்டுக் கொன்றபோது -

‘கருத்து சுதந்திரம்’ பற்றி பேசும் ‘இந்து’ நாளேடு கண்டித்தது உண்டா?

யாழ்ப்பாணத்தை தரை வழியில் இணைக்கும் ஒரே தரை வழிப்பாதையை பல ஆண்டுகளாக இலங்கை அரசு மூடி, பொருளாதாரத் தடையில் மக்களை முடக்கிப் போட்டது பற்றியோ -

அப்பாவி மக்கள் மீது விமானக் குண்டுகளை வீசி பிணமாக்குவது பற்றியோ -

செஞ்சோலை குழந்தைகள் முகாமில் குண்டு வீசி - 60க்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொன்று குவித்தது பற்றியோ -

‘நார்வேயின் சமரச முயற்சியை ஏற்க மாட்டோம்; ராணுவத்தால் - சந்திப்போம்’ என்று சூளுரைத்து, தேர்தல் அறிக்கையிலும் அறிவித்து பதவிக்கு வந்த

(4 ஆம் பக்கம்)

# புரப்ப வேண்டியவர்கள் பதுக்குகிறார்கள்!

## திரிபுவாத திம்மன்கள் – யார்? (6)

*கி.வீரமணியின் பெரியார் கொள்கைப் புரட்டுகள் அம்பலமாகத் தொடங்கியவுடன், ‘விடுதலை’யின் இணைய தளத்தில் இடம் பெற்றிருந்த பழைய ‘விடுதலை நாளேடுகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டதாக அறிவிப்பு வெளிவந்துவிட்டது. பழைய ஏடுகளைப் புரட்டினால், இவர்களின் புரட்டுகளும், முரண்பாடுகளும் வெளிச் சத்துக்கு வந்துவிடுமே என்று அஞ்சுகிறார்கள் போலும்! எவரேனும் குறிப்பிட்ட ‘விடுதலை’ நாளேடு தேவை என்று மின்னஞ்சல் வழியாக கேட்டால், அவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் என்று அறிவித்து விட்டார்கள்.*

*பெரியார் கொள்கை பரப்புவதற்காகவே உருவாக்கப்பட்ட பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் கொள்கைப் பரப்பும் ‘லட்சணம்’ இதுதானா? பரப்பவேண்டிய பணியை செய்ய வேண்டியவர்கள், பதுக்கும் வேலையை செய்கிறார்கள். பழைய ‘குடிஅரசு’ பத்திரிகை கருத்துகளும் வெளிவந்துவிடக் கூடாது என்று பதைபதைக்கிறார்கள். இதுதான் பிரச்சார நிறுவனத்தின் வேலையா? வெட்கம்! மகா வெட்கம்! இது மட்டுமா?*

*பெரியார் நூலை அரசுடைமையாக்கினால் பெரியார் கருத்துகளை திரித்து விடுவார்கள் என்று எழுதியது ‘விடுதலை’. அப்படி எவராவது பெரியாரின் பழைய நூல்களை பார்க்க விரும்பினால், பெரியார் திடல் நூலகத்துக்கு வந்து, உரிய அனுமதியோடு பார்க்கலாம் என்று ‘விடுதலை’யில் ‘மின்சாரம்’ கட்டுரை எழுதினார். அந்தப் பெரியார் நூலகத்துக்குள், பழைய இதழ்களைப் பார்வையிடச் சென்ற வாலாஜா வல்லவனை நூலகத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று கூறிவிட்டார்கள். வாலாஜா வல்லவன், திராவிட இயக்கத்தின் பழைய நூல்களை தேடிப்பிடித்து வெளியிட்டு வருகிற ஒரு ஏழை பதிப்பாளர்; கொள்கை உணர்வாளர்.*

*‘பெரியார் சுயமரியாதை – சமதர்மம்’ என்ற, மிகச் சிறந்த பெரியாரிய பெட்டகத்தை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியவர்கள், தோழர் எஸ்.வி.ஆர். – வ.கீதா. அந்த நூலின் முன்னுரையில் பெரியார் நூலக ஆய்வகத்தில் பல நூல்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படாமல் இருந்ததை சுட்டிக்காட்டியிருந்தார்கள். அதற்காக, ‘பெரியாரின் சுயமரியாதை சமதர்ம’ நூலைக் கேவலமாக விமர்சித்து, ‘விடுதலை’யில், பழனியைச் சார்ந்த காளிமுத்து என்ற பேராசிரியரின் நூல் “திறனாய்வை” ‘விடுதலை’ வெளியிட்டு, ‘விடுதலை’ தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொண்டது. ‘பெரியார் சுயமரியாதை சமதர்மம்’ நூல் இன்று வரை பெரியார் இயக்கம் பற்றிய ஆய்வுகளுக்கு மிகச் சிறந்த அடிப்படை ஆதார நூலாக பலராலும் எடுத்தாளப்படுகிறது. அதற்கு இணையாக ஏதேனும் ஒரு நூலை கி.வீரமணியோ அல்லது அவரது இயக்கத்தினரோ வெளியிட்டதாக விரலை நீட்ட முடியுமா?*

*‘விடுதலை’ நாளேட்டின் முகப்பில், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம், பெரியார் மறைவுக்குப் பிறகும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. 1976 ஆம் ஆண்டு அவசர நிலை காலத்தில் பத்திரிகை முன் தணிக்கை அமுலில் இருந்தபோது, பார்ப்பன அதிகாரிகள் அதை நீக்குமாறு உத்தரவிட்டார்கள். அந்த நிலையில் ஆத்திரமடைந்த திராவிடர் கழகத் தலைவர் அன்னை மணியம்மையார், ‘தமிழ்நாடு பார்ப்பனருக்கே’ என்று அச்சிட்டு, அந்த பார்ப்பன அதிகாரிகளிடம் கொண்டு போடுங்கள் என்று ‘விடுதலை’ ஆசிரியர் குழுவினரிடம் கோபத்துடன் கூறினார்.*

*பார்ப்பன அதிகாரிகள் அந்த முழக்கத்தை நீக்காவிடில், பத்திரிகை வெளிவருவதை அனுமதிக்க முடியாது என்று கூறிய நிலையில் தான் அந்த முழக்கம் எடுக்கப்பட்டது.*

*இது பற்றி வாசகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த கி.வீரமணி, ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம் பெரியார் காலத்திலேயே, விடுதலையிலிருந்து நீக்கப்பட்டது என்று பதில் கூறினார்.*

*இது எவ்வளவு பெரிய புரட்டு?*

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 23.10.2008**

# தமிழகம் கொதிக்கிறது!

*ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து கழகம் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்.*

### உடுமலை

*தமிழர்களைக் கொல்லும் சிங்கள இராணுவத்திற்கு இந்திய அரசு கொடுத்த ஆயுதங்களை*




*திரும்பப் பெறக் கோரியும், இந்திய இராணுவ பொறியாளர்களை திரும்ப அழைக்கக் கோரியும், இந்தியாவில் சிங்கள இராணுவத்திற்கு எந்தப் பகுதியிலும் இராணுவப் பயிற்சி அளிக்கக் கூடாது என்றும், மத்திய அரசைக் கண்டித்து கழகத்தின் சார்பில் 13.10.2008 திங்கள் காலை 10 மணியளவில் உடுமலைப் பேட்டை பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன் தலைமையேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சு.சிவானந்தம் முன்னிலை வகித்தார்.*

*ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. நகர அவைத் தலைவர் இந்துபாய் (எ) சாகுல் அமீது, ம.தி.மு.க. நகரச் செயலாளர் நா. லோகநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டாரத் தலைவர் கே.சி. இராதாகிருஷ்ணன், தே.மு.தி.க. நகரச் செயலாளர் இந்தியன் தி.சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் நகரச் செயலாளர் சுல்தான், பா.ம.க. மாவட்ட அமைப்புச் செயலாளர் குணசேகரன், ஆதித் தமிழர் பேரவை மாவட்டத் தலைவர் பெரியார் தாசன், புரட்சிப் புலிகள் மாவட்ட அமைப் பாளர் ப. முருகானந்தம், சமத்துவ மக்கள் கட்சி வர்த்தக அணித் தலைவர் விவேகானந்தன், நாடார் பேரவை பொருளாளர் ஏ.கே.சக்திவேல், கொங்கு மணல் ஆய்வு மையம் இரா. இரவிக்குமார், உடுமலை தமிழ்ச் சங்கம் இல. கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்ட தமிழினத்துக்கு விரோதமாகச் செயல்பட்டு வரும் மத்திய அரசைக் கண்டித்துப் பேசினார்.*



**கோபியில் நடந்த ஆர்ப்பாட்டம்**

*கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் கா. கருமலையப்பன், உடுமலை ஒன்றிய செயலாளர் கோ. விசுவநாதன், ஒன்றிய பொருளாளர் சு. அரிதாசு, மடத்துக்குளம் ஒன்றியப் பொருளாளர் நா.ப.கதிரவன், கடத்தூர் அய்யப்பன், காமராஜ், காரத்தொழுவு மயில்சாமி, ஜோத்தம்பட்டி மோகன், சின்ன வீரம்பட்டி சு. தமிழ்வேந்தன், உடுமலை ரமேஷ் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.*




**தூத்துக்குடியில் நடந்த ஆர்ப்பாட்டம்**

*இறுதியாக நகர கழகத் தலைவர் யாழ். நடராசன் நன்றி கூறினார்.*

### குமாரபாளையம்

*பெரியார் பிறந்த நாளான செப்.17 அன்று ப. குமாரபாளையம் பேருந்து நிலையம் அருகில் கழகக் கொடி ஏந்தி இனிப்பு வழங்கப்பட்டது. ரேணுகா திராவிட மணி கழகக் கொடி ஏற்றினார். பேருந்து நிலையம், உழவர் சந்தை, சத்தியபுரி சேலம் மெயின் சாலை பகுதிகளில் காலை முதல் மாலை வரை ஒலி பெருக்கி வழியாக பிரச்சாரம் செய்யப்பட்டது. செப்.28 அன்று பேருந்து நிலையம் அருகே - பெரியார்-அண்ணா பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் தோழியர் சரசுவதி தலைமையில் நடந்தது. கழகப் பொறுப்பாளர்கள் சி.ரு.அண்ணாதுரை, மாதுராசு, கலைமதி, தி.க. கைலாசம், மு. சாமிநாதன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து தி.மு.க. மாவட்ட அவைத் தலைவர் தி.கு.சண்முகம், அண்ணா படத்தை திறந்து வைத்துப் பேசினார். இறுதியாக கீசகன் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியை நடத்தினார். திருச்செங்கோடு, பவானி கழகத் தோழர்கள், திரளாகக் கலந்து கொண்டனர். சி.மாதுராசு அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு செய்தார். கி.ரு.அண்ணாதுரை கூட்டத்துக்கான ஏற்பாடுகளை முன்னின்று செத்ார்.*

### மதுரையில்

*மதுரையில் செப்.17 அன்று மாவட்டத் தலைவர் மாயாண்டி தலைமையில் கழகத் தோழர்கள் ஒலி முழக்கங்களுடன் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். கைவண்டி கருப்பு, இராசேந்திரன், குமரேசன், சின்னதம்பி, கண்ணன், மருதமுத்து லீல்லி, சரசு, தமிழ் வேந்தன், முத்துராசு, பெரியார் முருகன், பிரேம் பாண்டி, மாயாண்டி, அகராதி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.*

### சூலூரில்

*5.10.2008 அன்று சூலூரில் பெரியார்-அண்ணா பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம், மதவெறி எதிர்ப்புக் கூட்டமாக சிறப்புடன் நடைபெற்றது.*

*இயக்குநர் சீமான் கலந்து கொள்வதற்கு அனுமதி உறுதி செய்யப்பட்டு, பின்பு மதவெறி சக்திகளின் மிரட்டலுக்கு பயந்து அனுமதி மறுக்கப்பட்டது. இப்பொதுக்கூட்டம் திருப்பூர் தோழர்கள் பெரியார் - அண்ணா சிலை காக்க கைத்தடி ஊர்வலம் நடத்தி கைதானதால் சற்று தாமதமாக இரவு 7.30 மணியளவில் தொடங்கியது.*

*மன்னை தங்கம், திருப்பூர் தியாகு இசை நிகழ்ச்சிகளுடன் தொடங்கிய இக் கூட்டத்திற்கு*

**4 ஆம் பக்கம்**

## சென்னை ஆர்ப்பாட்டத்தில் வாலாஜாவல்லவன் உரை

# பெரியார் பதிவு செய்தது அறக்கட்டளை அல்ல; கூட்டுறவு சங்கமே!

*பெரியார் திராவிடர் கழகம் நடத்திய பெரியார் எழுத்துக்களை நாட்டுடைமையாக்கக் கோரி 25.8.2008 அன்று சென்னையில் நடந்த கழக ஆர்ப்பாட்டத்தில் வாலாசா வல்லவன் நிகழ்த்திய உரை.*

கார்ல்மார்க்சின் நூல்களை காரல் மார்க்சின் உண்மை தொண்டர் லெனின் தலைமையில் சோவியத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு மார்க்சின் கொள்கை உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பதற்காக மார்க்சின் நூல்களை உலக மொழிகள் அனைத்திலும் அச்சிட்டு இலவசமாக அந்தந்த நாட்டுக்கும் அனுப்பி வைத்தார்கள். தமிழ்மொழி பெயர்ப்பு சென்னை துறைமுகத்தில் வந்து இறங்கிய பிறகு அவற்றைக் கொண்டு வந்து விற்பனை செய்த நியுசெஞ்சுரி புத்தக நிலையம் குறைந்த விலையில் அந்த நூல்களை விற்பனைச் செய்தது.

அதேபோல் தான் லெனின் நூல்களும், ஸ்டாலின் நூல்களும் உலக மொழிகள் அனைத்திலும் இலவசமாக இரஷிய அரசே வெளியிட்டு பரப்பியது. சீனாவிலும், மாசேதுங் (மாவோ) கொள்கைகள் பரவ வேண்டும் என்பதற்காக பீஜிகிலிருந்து அயல்துறை மூலமாக பல மொழிகளில் மாவோவின் சிந்தனைகளை குறைந்த விலையில் சீன அரசே வெளியிட்டு பரப்பியது. இந்திய அரசு காந்தியின் நூல்களை ஆங்கிலத்தில 100 தொகுதிகள் 40000 பக்கங்களை வெறும் ரூ.8000-க்கு வெளியிட்டு தற்போதும் விற்பனை செய்து வருகிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மராட்டியத்தை சேர்ந்தவர் என்பதால் அந்த மாநில அரசு அம்பேத்கரின் நூல்களை 1979 முதல் ஆங்கிலத்தில் வெளியிட்டு வருகிறது. இது வரை ஆங்கிலத்தில் 23 தொகுதிகள் வெளிவந்துள்ளன. அதில் காந்தியும், காங்கிரசும் தீண்டப்படாத மக்களுக்கு செய்தது தான் என்ன? என்ற நூலில் காந்தியையும், காங்கிரசையும் மிகக் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். அந்த நூலையும் காங்கிரசு அரசுதான் வெளியிட்டது. அதே போல நான்காவது தொகுதி 'இந்து மதத்தின் புதிர்கள்' என்பது இந்த நூல் அம்பேத்கரால் எழுதப்பட்டு அச்சிடப்படாமல் கைபிரதியாக இருந்ததாகும். குடும்பத் தகராறு வழக்கு காரணமாக பெட்டியில் சீல் வைக்கப்பட்டு, வழக்கு மன்றத்தில் இருந்தது. அம்பேத்கரின் நூல் தொகுப்பாளர் வசந்த் மூன் அவர்கள் குடும்பத்தினரின் அனுமதி பெற்று நீதிமன்றத்தை அணுகி பெற்று அதை வெளியிட்டார்.

அதில் இராமன், கிருஷ்ணன் புதிர்கள் என்பது ஒரு பகுதி. இராமனையும், கிருஷ்ணனையும் அம்பேத்கர் மிகக் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். இந்த நூலை வெளியிடக் கூடாது என இந்த மதவெறியர்களும், பார்ப்பனர்களும் மிகப் பெரிய போராட்டம் நடத்தினர். இதையெல்லாம் மீறிக் தான் மராட்டிய அரசு அவற்றை வெளியிட்டது. அம்பேத்கர் நூற்றாண்டின் போது வி.பி.சிங் பிரதமராக இருந்த காரணத்தால் அவர் அம்பேத்கரின் நூல்கள் முழுமையாக அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகள் அனைத்திலும் வெளியிட நிதி ஒதுக்கீடு செய்து இன்று வரையில் தமிழில் அம்பேத்கரின் பேச்சுகளும், எழுத்துகளும் மிகக் குறைந்த விலையில் 38 தொகுதிகள் வெளி வந்துள்ளன.

தமிழ்நாட்டில் தந்தை பெரியாரின் பெயரைச் சொல்லும் திராவிடக் கட்சிகள் 1967 முதல் ஆட்சியில் இருந்தும் இன்று வரையில் பெரியாரின் பேச்சுக் களையும், எழுத்துக்களையும் ஒரு தொகுதிகூட வெளியிடவில்லை. பெரியார் நூற்றாண்டின்போது எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் பெரியாரின் புரட்சி மொழிகள் என்ற ஒரு சிறு நூல் மட்டுமே அரசின் சார்பில் வெளியிடப்பட்டது.

தந்தை பெரியார், 1952 இல் தான் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தை கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி பதிவு செய்தார். ஒரு அணா சந்தா கட்டக் கூடியவரும், சுயமரியாதை இயக்கத்தை சேர்ந்த எவரும் அதில் உறுப்பினராக வழிவகைச் செய்திருந்தார். கி.வீரமணி, அப்போது அதில் சாதாரண உறுப்பினர்கூட இல்லை. பெரியார் டிரஸ்ட்டாக பதிவு செய்யவில்லை. டிரஸ்ட் என்றால் அதில் உறுப்பினர்களாக உள்ளவர்களைத் தவிர வேறு யாரும் கேள்வி கேட்கவோ, உரிமைக் கொண்டாடவோ முடியாது. எனவே தான் ஜனநாயகத் தன்மையில் அதை கூட்டுறவு சொசைட்டியாக பெரியார் நிறுவினார். பெரியாரை கொச்சைப் படுத்தியது இவர் தான். ஒரு பார்ப்பன பெண்ணைப் பார்த்து உங்களைப் போன்ற பெண்கள் தான் அரசியலுக்கு வரவேண்டும். ஆட்சிக்கு வர வேண்டும் என்று பெரியார் விரும்பினார் என ஜெயலலிதாவைப் பார்த்துச் சொன்னார். இவரை விட பெரியாரை வேறு யாரும் கொச்சைப்படுத்திட முடியாது.

பெரியார் உயிரோடு இருக்கும் வரை அவர் எந்த புத்தகத்திலும் பதிப்புரிமை கோரவில்லை. யார் அச்சடித்து பரப்பினாலும் அவர் பாராட்டவே செய்தார். வாழ்க்கைத் துணை நலம் என்ற தலைப்பில் சேலம் மகுடம்சாவடி கிள்ளிவளவன் பெரியாரின் பேச்சுகளையும், எழுத்துகளையும் திரட்டிக் கொண்டு வந்து பெரியாரிடம் கொடுத்து அணிந்துரை கேட்டார். பெரியார் மிகவும் மகிழ்ச்சியோடு அதற்கு அணிந்துரை எழுதிக்கொடுத்தார். இது 1960 இல் வெளி வந்தது.

1973 இல் தந்தை பெரியார் மறைந்த பிறகு இன்று 2008 வரை ஓர் ஆண்டுக்கு ஒரு தொகுதிகூட இல்லை. அதுவும் இப்போது சில ஆண்டுகளாகத்தான் அதிக தொகுதிகள் வெளி வந்துள்ளன. ஆனால் புதிதாக தொடங்கி சில ஆண்டுகளேயான பெரியார் திராவிடர் கழகம் முன்பு குடிஅரசு 3 தொகுதிகளை வெளியிட்டது. இப்போது ஒரே நேரத்தில் குடிஅரசு 27 தொகுதிகளை மிகவும் பொருளாதார நெருக்கடியில் வெளியிடச் செய்து வருவது பாராட்டுக்குரியது. கோடி கோடியாக பணம் உள்ளவர்களால்கூட செய்ய முடியாததை செய்து காட்டும் உங்களை பாராட்டுகிறேன்.

இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உண்மையில் பெரியாரின் தொண்டர் என்றால் பெரியாரின் நூல்களை நாட்டுடைமையாக்குவதோடு நில்லாமல், தமிழக அரசே பெரியாரின் பேச்சுகளையும், எழுத்துகளையும் மிகக் குறைந்த விலையில் அச்சிட்டு பரப்பிட முன்வரவேண்டும் என்று அன்போடு அவரை நான் இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

# ஈழத் தமிழர் படுகொலைகளை விளக்கி சீர்காழி–கொள்ளிடம் பகுதிகளில் கிராமம் கிராமமாக கழகம் பிரச்சாரம்

12.10.2008 ஞாயிறு காலை 10 மணிக்கு சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில், "இந்திய அரசே! ஈழத் தமிழர்களை கொன்று குவிக்கும் சிங்கள பயங்கரவாத அரசுக்கு ராணுவ உதவியும், ராணுவ பயிற்சியும் அளிக்காதே! போரில் பாதிக்கப்பட்டு இலங்கையில் பட்டினியால் வாடும் ஈழத் தமிழர்களுக்கு செஞ்சிலுவை சங்கம் மூலம் உணவு, மருந்து அனுப்ப உடனே ஏற்பாடு செய்! தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்லும் இலங்கை இராணுவத்திற்கு கொடுக்கப்பட்ட ரேடார்களையும், இலங்கையிலுள்ள 200-க்கும் மேற்பட்ட விமான ஓட்டிகளையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும் உடனே திரும்பப் பெறு!" ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி பிரச்சார பயணம் சீர்காழி பகுதி கொள்ளிடம் ஒன்றிய பகுதி கிராமங்களில் எழுச்சியுடன் நடந்தது. ஒன்றிய தலைவர் நந்த. ராசேந்திரன் தலைமையேற்றார். சீர்காழி ஒன்றிய துணை செயலாளர் அன்பு. முருகன் வரவேற்புரையாற்றினார். பிரச்சார பயணத்தை வி.வி.மு. மாவட்ட செயலாளர் அம்பிகாபதி துவக்கி வைத்தார்.

காலை 11.30 மணிக்கு பிரச்சாரப் பயணம் மங்கைமடம் கிராமத்தில் வந்தடைந்தது. நாகை மாவட்ட தலைவர் இரா. பரசுராமன், பால சுந்தரம் எழுச்சியுடன் சிறப்புரையாற்றினர். 12.25-க்கு திருவண்காடு , 1.30-க்கு மேலையூர், 2.45-க்கு தர்மகுளம், 3.50-க்கு பூம்புகார் பகுதிக்கு வந்தடைந்தது. சுற்றுலா தளமான பூம்புகாரில் ஏராளமான சுற்றுலா பயணிகளும், அப்பகுதி மீனவர்களும் அதிக அளவில் திரண்டிருந்தனர். கூட்டங்களில் மாவட்டத் தலைவர் இரா. பரசுராமன், ஒன்றிய தலைவர் நந்த. ராசேந்திரன், பாலச் சந்தர் ஆகியோர் உரையாற்றினர். 4.50-க்கு பிரச்சார பயணம் கருவி பகுதிக்கு வந்தது. 7 மணிக்கு வைத்தீசுவரன் கோயிலில் உரையாற்றி பயணம் முடிக்கப்பட்டது. தோழர்கள் அருண், சுந்தரபாண்டி, விசு, பரசுராமன், திருவாலி ரவி, திட்டை அன்பு முருகன், குன்னம் ராமச்ந்திரன், வேட்டையாம் பாடி பாலச்சந்தர் ஆகியோர் பயணக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

### கொள்ளிடம் ஒன்றியத்தில்

12.10.2008 அன்று - அதே நாளில் கொள்ளிடம் ஒன்றிய கிராமங்களில் இரண்டாவது பிரச்சாரக் குழு, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பிரச்சார இயக்கங்களை நடத்தியது. கொண்டல், பனங்காட்டாங்குடி, புத்தூர், கொள்ளிடம் ஆகிய ஊர்களில் நடந்த பிரச்சாரங்களில், பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பெரியார் செல்வம், அன்பு ராசப்பா ஆகியோர் உரையாற்றினர். இரண்டாவது குழுவும் வைத்தீஸ்வரன் கோயில் வந்தடைந்தது. ஈழத் தமிழர் படுகொலைகளை விளக்கி, மக்களிடம் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. கிராமங்களில் பயணம் பேரெழுச்சியை ஏற்படுத்தியது. தினேசுகுமார், ஆனந்த பாபு, கிருஷ்ணகுமார், கோபி ரகுநாத், சங்கர், அன்பு ராசப்பா, பெரியார் செல்வம், தென்னலகுடி இராமமூர்த்தி ஆகியோர் இரண்டாவது பயணக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

### ப. குமாரபாளையம் கழகத் தோழர்கள் உடல் கொடை

ப. குமாரபாளையத்தைச் சார்ந்த பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், பெரியார்-அண்ணா பிறந்த நாளில் மரணத்துக்குப் பிறகு, தங்களது உடலை, மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். இதற்கான உறுதி மொழி பத்திரத்தில் கையெழுத்திட்டு, சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி நிர்வாகிகளிடம் வழங்கினர். உடல் நன்கொடை வழங்கிய தோழர்கள் (1) மு. சாமிநாதன், (2) சா. சந்திரா (3) மாதுராசு (4) ம. சரசு (5) திராவிடமணி (6) ரேணுகா திராவிடன் (7) சின்னத்தம்பி -10.10.2008 அன்று மருத்துவமனை தலைமை அதிகாரி சண்முகம், தோழர்களின் உறுதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டார்.

### கவிஞர் குயில்தாசன் நூல் வெளியீடு

ஆகஸ்ட் 17 ஆம் நாள், சென்னை தீவு திடலில் விடுதலை சிறுத்தைகள் நடத்திய தமிழர் எழுச்சி நாளில், கவிஞர் குயில் தாசன் தொகுத்த "சான்றோர் பட்டுணர்ந்த திருக்குறள்" நூலை, தொல். திருமாவளவன் வெளியிட, அ. சவுரிராசன் பெற்றுக் கொண்டார். தமிழ் உணர்வாளர்கள், தங்கள் வாழ்க்கை அனுபவங்களோடு, திருக்குறளை விளக்கிடும் ஓர் புதுமையான தொகுப்பாக இது வெளி வந்துள்ளது. நூல் பற்றிய திறனாய்வு பின்னர்.

### பெயர் சூட்டு விழா

9.10.2008 மாலை 7 மணியளவில் அயன்புரம் இரயில்வே குடியிருப்பிலுள்ள சேத்துப்பட்டு இராசேந்திரன் இல்லத்தில் குழந்தைக்கு பெயர் சூட்டு விழா நடைபெற்றது. சேத்துப்பட்டு இராசேந்திரன், அலர்மேலு, அயன்புரம் நாராயணன்-வசந்தா ஆகியோர் பெயரன், நா. தினகரன்-ஜெயந்தி ஆகியோர் மகனுக்கு "பண்பாளன் (எ) பாலசிங்கம்" என கழகத் துணைத்தலைவர் ஆனூர் கோ. செகதீசன் பெயர் சூட்டினார். 'புரட்சிக் பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு ரூ.500/- வழங்கப்பட்டது.

# மனித உரிமையை நசுக்கும் கூட்டம், பத்திரிகை உரிமை பேசுகிறது!

முதல் பக்கத் தொடர்ச்சி

ராஜபக்சேயின் போர் வெறியைக் கண்டித்தோ -

'இந்து'வின் பத்திரிகை தர்மமும் - சுதந்திரமும் வாய் திறந்ததா?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க சர்வதேச நாடுகள் முன்வந்தபோது, அந்த உதவிகளையும் கிடைக்கவிடாமல் தடுத்ததே, இலங்கை அரசு! அதைக்கூட கண்டிக்க மனம் வராதவர்கள், 'நடுநிலை', 'பத்திரிகை தர்மம்' பற்றியும் கருத்து சுதந்திரம் பற்றியும் பேசுவதற்கு தார்மீக உரிமை உண்டா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை முதலில் சந்திக்கச் சென்றபோது பிரதமர் சந்திக்க மறுத்து விட்டார். பிரதமரின் மிகச் சிறந்த நடவடிக்கை என்று அப்போது 'இந்து' பாராட்டியது! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ஏன் சந்திக்கக் கூடாது என்று கேட்கவில்லை.

விடுதலைப் புலிகள் சமரசத் தீர்வை ஏற்க மறுப்பவர்கள் என்று குற்றம் சாட்டி வந்த இதே ஏடு, சமரசப் பேச்சுவார்த்தை தொடங்கி, போர் நிறுத்த ஒப்பந்தம் வந்த பிறகாவது ஈழத்திலே அமைதியை உருவாக்கும் முயற்சிகளை ஆதரித்ததா? போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி, களத்தில் கணிசமான போர் வெற்றிகளைக் குவித்திருக்கிறார் என்று ராஜபக்சே அரசின் ராணுவ நடவடிக்கைகளுக்கு பாராட்டுகளைக் குவித்து தலையங்கம் தீட்டியது.

தமிழ்நாட்டிலிருந்து ஈழத் தமிழர்களுக்காக மருந்துகள் அனுப்பியதாக, தமிழகத்தில் அடைக்கலம் புகுந்திருந்த ஈழவேந்தன், சச்சிதானந்தம் மற்றும் ஆஸ்திரேலிய மருத்துவர் மாலினி, தமிழகத்தைச் சார்ந்த மருத்துவர் ஸ்ரீதர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்ட செய்தியை பெரும் பரபரப்புடன் வெளியிட்ட 'இந்து' நாளேடு, பிறகு இது பொய் வழக்கு என்று நீதிமன்றம் தீர்ப்பளித்த செய்தியை திட்டமிட்டு இருட்டடித்தது. வழக்கில் தொடர்புடைய மருத்துவர் ஸ்ரீதர் இதைச் சுட்டிக்காட்டி, அகில இந்திய பத்திரிகை கவுன்சிலுக்கு கடிதம் எழுதினார். பத்திரிகை கவுன்சில் 'இந்து'வின் தலையில் குட்டிய பிறகு, நீதிமன்றத் தீர்ப்பு வந்து சுமார் ஓராண்டு காலத்துக்குப் பிறகு தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியையே சுட்டிக் காட்டாமல், அந்த செய்தியை வெளியிட்டது.

'இந்து'வின் பத்திரிகை தர்மத்துக்கு இது ஒரு உதாரணம்.

ஒரு குறிப்பிட்ட மதத்தை தனது பத்திரிகையின் பெயராக வைத்துக் கொண்டு, நூற்றாண்டைக் கடந்துவிட்ட பெருமை பேசும் 'இந்து' ஏடு தேசிய பத்திரிகை என்ற போர்வையில் ஒரு சார்பான கருத்துகளை வெளியிடுவதும், கருத்துகளை உருவாக்குவதும் உண்மைக்கு மாறான செய்திகளை பரப்புவதும் தான் அதன் பாரம்பர்ய பெருமையா என்று கேட்க விரும்புகிறோம். அண்மையில் 'ஆனந்த விகடன்' வார ஏடும், இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடும் தமிழகத்தில் நடத்திய கருத்துக் கணிப்பில் ஈழத்தில் நடப்பது சுதந்திரப் போராட்டம் தான் என்றும், ஈழத் தமிழர்களின் ஒரே பிரதிநிதிகள் 'விடுதலைப் புலிகள்' என்றும் தமிழகத்தில் பெரும்பான்மை மக்கள் கருதுகிறார்கள் என்ற உண்மைகளை வெளிச்சப்படுத்தியது. இதன் பிறகும், ஆசிரியர் அறைக்குள் உட்கார்ந்து கொண்டு 'இந்து' ஏடு (அக்.18) 95 சதவீத தமிழர்கள், விடுதலைப் புலிகளை நிராகரிக்கிறார்கள் என்று பொய்யான 'சதவீதப் புள்ளி' விவரத்தோடு தலையங்கம் தீட்டுகிறது. இதுதான் பத்திரிகை சுதந்திரமா? தர்மமா? பெரியார் திராவிடர் கழகத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்ட 'இந்து' ஆசிரியர் 'ராம்', 40 லட்சம் வாசகர்கள் சார்பாக கண்டிப்பதாகக் கூறுகிறார். 'இந்து' வை வாங்கும் அத்தனை பேருமே 'இந்து'வின் கருத்துகளை அப்படியே ஏற்றுக் கொள்வதாக, அவரே முடிவு செய்து கொண்டு அவர்களின் பிரதிநிதிகளாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதிலிருந்தே, இவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ள முடிகிறதே; 40 லட்சம் வாசகர்களுமே 'இந்து'வின் ஆதரவாளர்கள் என்று எப்படி முடிவுக்கு வந்தார்? இதே பார்ப்பன ஆதிக்க மனநிலையிலிருந்து தான், இவர்கள் ஈழத் தமிழர்கள் பிரச்சனையையும் தாய்த் தமிழக உணர்வுகளையும் கொச்சைப்படுத்தத் துணிகிறார்கள். இதே பார்வைதான் இவர்களின் 'கருத்து சுதந்திரம்' மற்றும் பத்திரிகை தர்மங்களையும் நிர்ணயிக்கிறது. இதில் இனியும் தமிழர்கள் ஏமாறப் போவதில்லை.

கோவை ஈரோட்டில் நடந்த போராட்டத்தின் வழிமுறைகளில் வேண்டுமானால் கருத்து மாறுபாடுகள் இருக்கலாமே தவிர, பெரியார் திராவிடர் கழகத்தினரும், தமிழின உணர்வாளர்களும், போராட்டத்துக்கு தேர்வு செய்த 'இலக்கு' மிகச் சரியானது. 'இந்து' ஏடு - மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தப்பட்டு, அவர்களின் சிங்கள - பார்ப்பன 'இனவெறி' ஆதாரங்களுடன் வெளிப்படுத்தப்பட்டே தீரும்!

# தமிழக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 'மனுதர்ம'ப் பார்வை

பெரியார் திராவிடர் கழகத்தினரை - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயற்குழு கண்டித்திருக்கிறது. 'இந்து' பத்திரிகை தாக்கப்பட்டதற்காக, மார்க்சிஸ்ட்டு கட்சியினர் கண்ணீர் வடிக்கிறார்கள்.

"விடுதலைப்புலிகளுக்கு எதிரான எந்த விமர்சனத்தையும் அனுமதிக்க மாட்டோம் என்று இந்த **வன்முறையாளர்கள்** அறிவித்திருப்பது கருத்து சுதந்திரத்தின் மீதான தாக்குதலேயாகும்" என்று அக்கட்சியின் செயற் குழு தீர்மானம் கூறுகிறது. நடந்த தாக்குதல் பெரியார் திராவிடர் கழகம் தீர்மானம் போட்டு, கழகத்தால் அறிவிக்கப்பட்டு நடந்த ஒன்று அல்ல. உணர்வுள்ள கழக இளைஞர்கள். தங்கள் உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் - 'தீக்கதிர்' திரித்து கூறுவதுபோல், விடுதலைப்புலிகளுக்கு எதிரான விமர்சனத்துக்காக அந்த எதிர்ப்பு காட்டப்படவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் உட்பட, அனைத்துக் கட்சியினர் பங்கேற்ற கூட்டம் நடைபெறும் நாளன்று, 'தமிழகத்தில் இனவெறி ஆபத்து' என்று கட்டுரை எழுதி, ஈழத் தமிழர்கள் படுகொலைக்கு கண்டனக் குரல் கொடுப்பதே இனவெறி என்று 'இந்து' எழுதியதற்காக எழுந்த எதிர்வினைதான் அந்தத் தாக்குதல். ஈழத்தில் போர் நிறுத்தம் செய்யாமல் போரைத் தொடர வேண்டும் என்று கூறுகிறது அக்கட்டுரை. நியாயமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரே இதைக் கண்டித்திருக்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைக் கிஞ்சித்தும் மதிக்காமல் ஈழத் தமிழர்கள் மீதான ராணுவத் தாக்குதல் தொடர வேண்டும் என்ற ஆத்திரமூட்டக்கூடிய கட்டுரை வெளியிடுவோரை ஒரு வார்த்தை கூட கண்டிக்காமல், பெரியார் திராவிடர் கழகத்துக்கு 'வன்முறையாளர்கள்' பட்டம் சூட்டுகிறது தமிழ்நாடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி!

மக்கள் மீது ராணுவத் தாக்குதலை நிறுத்தாமல் தொடரவேண்டும் என்று எழுதும் 'இந்து'வை 'அகிம்சாமூர்த்தி' என்கிறார்களா? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 'மனுதர்ம'ப் பார்வையிலிருந்து மீளப் போவதே கிடையாதா?

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

சூ.நா.தமிழ்ச்செல்வி தலைமையேற்க, கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ப.மவுனசாமி, சூலூர் பேரூராட்சி மன்றத் தலைவர் சூ.சு.பொன்முடி, ஒன்றிய தி.மு.க. செயலாளர் சன். இராசேந்திரன், கோவை வடக்கு மாவட்ட கழகத் தலைவர் சு.துரைசாமி ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர்கள் கோவை கு.இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அ.ப.சிவா வரவேற்புரையாற்றினார். இறுதி யாக ப.வீரமணி நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை கழகத்தின் சூலூர் ஒன்றியச் செயலாளர் சூ.இரா. பன்னீர்செல்வம் மற்றும் இருகூர் தோழர்கள் திருநாவுக்கரசு, சிவராசு மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னின்று செய்தனர்.

## தூத்துக்குடி

தூத்துக்குடி நகர கழக சார்பாக 20.9.2008 அன்று மாலை 6 மணியளவில் காந்தி சிலை அருகில் பெரியாரின் 130-வது பிறந்த நாள் மற்றும் அண்ணாவின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம், மாநகரத் தலைவர் கோ.அ.குமார் தலைமையில் நடந்தது. கழகப் பொறுப்பாளர்கள் செ.செல்லத்துரை, அரியமுத்து, வே.பால்ராசு, சி.அம்புரோசு, கண்ணன் (ஆதித் தமிழர் பேரவை) ஆகியோர் உரையைத் தொடர்ந்து, தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, குடந்தை சிற்பி ராசன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடத்தினார். மாநகரச் செயலாளர் பால். அறிவழகன் நன்றியுரையாற்றினார். 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கருத்துகளைக் கேட்டனர்.

தூத்துக்குடி மாவட்ட கழக சார்பாக 21.9.08 ஞாயிறு அன்று மாலை 7 மணியளவில் தூத்துக்குடி, புதுக்கோட்டை முதன்மைச் சாலையில், பெரியாரின் 130வது பிறந்த நாள் மற்றும் அறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மாவட்த் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையில் நடை பெற்றது. கழகப் பொறுப்பாளர்கள் செ.செல்லத் துரை, கோ.அ. குமார், ப.அரியமுத்து, வே.பால் ராசு ஆகியோர் உரையைத் தொடர்ந்து தலைமை யெற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் உரை நிகழ்த்தினார்.

குடந்தை சிற்பி ராசன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக மாவட்ட செயலாளர் ச.க.பாலசுப்பிரமணி நன்றி கூறினார்.

## ஓசூரில்

சிங்கள அரசுக்கு ஆதரவாக செயல்படும் இந்திய அரசைக் கண்டித்து ஒசூரில் தமிழ் ஈழ விடுதலைக் கூட்டமைப்பின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் சிறப்புடன் நடந்தது.

கோ.மாரிமுத்து (த.தே.பொ.க.) தலைமையில், கோ.பிரேம்குமார் (பெ.தி.க.) முன்னலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தி.க. இளையராசா (பெ.தி.க.), ஆ.இராமசந்திரன் (ம.தி.மு.க.), ஒப்புரவாளன் (த.ம.தொ.மு.), செந்தமிழ் (தொ.வி.மு.), முத்தாலு (த.தே.பொ.க.) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கழகப் பொறுப்பாளர்கள் தி.குமார், கோ.ஆனந்தன், சுப. மனோச் குமார், சேகர் மற்றும் அனைத்து தமிழின அமைப்புகளின் சார்பில் நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# கழகத் தோழர் வி.எஸ். இராசன் மறைவு உடல் மருத்துவக் கல்லூரிக்கு நன்கொடை




முதுபெரும் பெரியார் தொண்டர் ப. குமார பாளையத்தைச் சேர்ந்த வி.எஸ். இராசன், கடந்த அக்.8 ஆம் தேதி காலை 6.50 மணிக்கு மாரடைப்பால் முடிவெய்தினார். பெரியார் திராவிடர் கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு, தீவிரமாக செயல்பட்ட வி.எஸ்.இராசன், 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ்களையும், கழக வெளியீடுகளையும் ஆவணப்படுத்தி வந்தார். அவரது விருப்பப்படி, அவரது கண் ஈரோடு அரசு கண் மருத்துவ மனைக்கும், அவரது உடல் கோவை அரசு மருத்துவ மனைக்கும் நன்கொடையாக வழங்கப்பட்டது. கழகத் தோழர்கள் தி.க. கைலாசம், மு. சாமிநாதன், மாதுராசு, சமர்பா குமரன் ஆகியோர், ஊர்தியில் அவரது உடலை கோவை மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துச்சென்று, அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். மருத்துவ தலைமை அதிகாரி குமரன் உடலை பெற்றுக் கொண்டார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 24th October 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 அக்டோபர் 30, 2008 புரட்சி 7 முழக்கம் 44 விலை : ரூ.2.50


## அங்கே ரத்தத்தில் வெடிகுண்டு; இங்கே சத்தத்தில் பட்டாசா?



தீபாவளி நாளன்று மக்கள் தீபாவளி கொண்டாடும் காலை நேரத்தில் தீபாவளியைப் புறக்கணிக்கக் கோரும் ஊர்வலம் கழகம் மற்றும் இனஉணர்வு அமைப்புகளின் சார்பில் சென்னையில் நடத்தப்பட்டது. ஈழத்தில் இனப் படுகொலை நடக்கும்போது, தமிழர்களே, மத்தாப்பு கொளுத்தி மகிழாதீர்கள் என்ற வேண்டுகோள் முழக்கங்களுடன் மாபெரும் கருஞ்சட்டைப் படையின் அணிவகுப்பு எழுச்சியான அக்.27 ஆம் தேதி காலை 7 மணியளவில் மயிலை திருவள்ளுவர் சிலையிலிருந்து புறப்பட்டது. தென் சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். விடுதலை சிறுத்தைகள், மக்கள் எழுச்சி இயக்கம், புரட்சி பாரதம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புகளோடு திருவொற்றியூர் திராவிடர் கழகத்தைச் சார்ந்த தோழர்கள் சிலரும் இதில் பங்கேற்றனர். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

"அங்கே ரத்தத்தில் வெடிகுண்டு; இங்கே சத்தத்தில் பட்டாசா? தமிழர்களே! தமிழர்களே! மத்தாப்புகளை கொளுத்தாதீர்; தீபாவளியை கொண்டாடாதீர். நாளும் மடியும் ஈழத் தமிழருக்காக குரல் கொடுப்பீர்; தமிழராய் இணைவோம்; தமிழராய் குரல் கொடுப்போம்; துரோகமிழைக்கும் இந்தியப் பார்ப்பன அரசே, இனப்படுகொலைக்கு துணை போகாதே" என்ற முழக்கங்களுடன் 300க்கும் மேற்பட்ட தோழர்கள் தீபாவளி கொண்டாட்டங்கள் நடக்கும் வேளையில் வீதி வீதியாக முழக்கமிட்டு சென்ற காட்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. திருவள்ளுவர் சிலையிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம், மயிலாப்பூர் அப்பர்சாமி கோயில் தெரு, கணேசபுரம், அம்பேத்கர் பாலம், ரோட்டரி நகர், அனுமந்தாபுரம், செல்லம்மாள் தோட்டம் ஆகிய பகுதிகளில் பிரச்சாரம் செய்து காலை 10.30 மணியளவில் வி.எம்.தெரு பெரியார் சிலை அருகே வந்தடைந்தது.

இனப் படுகொலையை சித்தரிக்கும் படங்களை இளைஞர்கள் கரங்களில் ஏந்தி வந்தனர். ஒவ்வொரு வீதியிலும் ஈழத் தமிழர் படுகொலைகளையும் இந்திய அரசின் துரோகத்தையும் விளக்கி, தமிழர்கள் ஈழத் தமிழர் துயரில் பங்கேற்கும் வகையில் தீபாவளியைப் புறக்கணிக்குமாறு வேண்டுகோள் விடுத்து உரை யாற்றப்பட்டது. ஆண்களும், பெண்களும் திரளாக கருத்துகளைக் கேட்டனர். தீபாவளிப் புரட்டுகளை விளக்கிடும் துண்டறிக்கைகளும் திருவல்லிக்கேணி பகுதி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் அச்சிடப்பட்டு வழிநெடுக வழங்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் ஊர்வலம் சென்றபோது உணர்ச்சி பெற்ற இளைஞர்கள் ஊர்வலத்தில் இணைந்து கொண்டனர். ஊர்வலத்தினர் எண்ணிக்கை விரிவடைந்து கொண்டே போனது.

தோழர்கள் வேலுமணி (தமிழக மக்கள் எழுச்சி இயக்கம்), வழக்கறிஞர் வடிவம்மாள் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), இசைமொழி (தமிழக பெண்கள் செயல் களம்), வழக்கறிஞர் கயல், பெரியார் திராவிடர் கழக செயல் வீரர்கள் கேசவன், உமாபதி, டிங்கர் குமரன், தமிழ், வேழவேந்தன், மயிலை சுகுமார், விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்த பகலவன், பெரியார் பித்தன், புரட்சி பாரதத்தைச் சார்ந்த மதன் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முதல் நாள் இரவு 9 மணிக்கு திட்டமிடப்பட்டு இரவுக்குள் செல்பேசி தகவல் வழியாக தோழர்கள் திரட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. புதுமையான இந்த பரப்புரை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 'மக்கள் தொலைக்காட்சி', 'சன் நியூஸ்' தொலைகாட்சிகள் இந்த ஊர்வலத்தை காட்சிகளுடன் ஒளிபரப்பின.

## ஈழத் தமிழர் ஆதரவை வளர்த்தெடுப்போம்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசுக்கு சிக்கலை உருவாக்க வேண்டாம் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமிழக முதல்வர் கலைஞரை கேட்டுக் கொண்டுள்ளார். மத்திய அரசுக்கு நெருக்கடி எதையும் தரப்போவதில்லை என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'பதவி விலகல்' பற்றி அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும் என்றும் கலைஞர் கூறியுள்ளார். '40 ஆண்டுகளாக நடைபெறுகிற போராட்டம் இது நான்கு நாட்களில் முடியாது' என்றும் கலைஞர் கூறியுள்ளார். பாதிக்கப்படட தமிழர்களுக்கு 800 டன் உணவுப் பொருட்களை இந்திய அரசு வழங்குமாம்! போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை இந்தியா வழங்கப் போவதாகவும் அறிவிப்புகள் வெளிவந்துள்ளன.

போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அனைத்துக் கட்சி கூட்டத்தில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கை பற்றி திட்டவட்டமான அறிவிப்புகள் ஏதும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை. 800 டன் உணவுப் பொருள் அனுப்பப்படும் என்பது மட்டுமே உறுதி செய்யப்பட்ட செயல் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உணவுப் பொருள்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அய்.நா. அமைப்புகள் வழியாக வழங்கப்படும் என்ற முதல்வர் கலைஞரின் அறிவிப்பு ஆறுதலைத் தருகிறது. தமிழர்களுக்கான உதவிகளைக் கூட இலங்கை அரசு வழியாகவே வழங்க வேண்டும் என்று, 'இந்து' பார்ப்பன ஏடு தலையங்கமே தீட்டி, தனது சிங்கள ஆதரவு வெறியை வெளிப்படுத்தினாலும், அந்த திட்டம் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தமிழக அரசே உணவுப் பொருள்களையும், நிதி உதவியையும் திரட்ட முன்

(3 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## துரோக காங்கிரசுக்கு பாடம் புகட்ட 49(ஓ) பிரிவை கையில் எடுப்போம்

இந்துத்துவா - பார்ப்பன சக்திகள் - ஆட்சிக்கு வந்து விடக் கூடாது என்பதாலேயே காங்கிரஸ் கட்சியின் மீது உடன்பாடு இல்லாதவர்களும் அக்கட்சிக்கே வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை ஒவ்வொரு தேர்தலிலும் வந்து விடுகிறது.

இந்துத்துவா எதிர்ப்பு சக்திகளின் வாக்கு - எப்படி இருந்தாலும் தங்களுக்குத் தானே கிடைக்கப் போகிறது என்ற இறுமாப்பில் தமிழக காங்கிரஸ் கட்சியினர் தமிழின உணர்வுகளை அவமதித்து வருகிறார்கள். ஈழத் தமிழர் படுகொலைகளுக்கு எதிராக தமிழர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளை 'தேச விரோதம்' என்கிறார்கள். கடுமையான சட்டங்களின் கீழ் கைது செய்ய வேண்டும் என மிரட்டுகிறார்கள். காங்கிரசின் இந்த இனத் துரோகத்தை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பலப்படுத்தி, 'இந்துத்துவா' பார்ப்பன சக்திகளைப் போல் தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் துரோக காங்கிரசையும் தமிழர்கள் புறக்கணித்து சரியான பாடம் கற்பித்தாக வேண்டும்.

இதற்கு - வாக்களிக்கும்போது 49(ஓ) என்ற பிரிவை - உணர்வுள்ள தமிழர்கள் பயன்படுத்த முன்வர வேண்டும். இந்தப் பிரிவைப் பயன்படுத்துவதன் நோக்கம், போட்டியிடும் வேட்பாளர்கள் எவருக்கும் ஓட்டளிக்க விரும்பவில்லை என்பதை பதிவு செய்வதாகும். இந்திய அரசியல் சட்டம் அங்கீகரித்துள்ள மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் 1962 ஆம் ஆண்டில் இந்த 49(ஓ) என்ற பிரிவு சேர்க்கப்பட்டு, வாக்காளர்கள் எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்காமல் இருக்கும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால், இந்த நடைமுறை மக்கள் மன்றத்தில் பழக்கத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதில் ஆளும் கட்சிகள் அது பா.ஜ.க.வாக இருந்தாலும், காங்கிரசாக இருந்தாலும் கவனமாகவே இருந்து வருகின்றன.

தற்போதுள்ள நடைமுறையின்படி வாக்குச்சாவடியில் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ளதை சரி பார்த்த பிறகு அந்தப் படிவத்தில் வாக்காளரின் கையெழுத்தைப் பெற்று வாக்களிக்கும் சீட்டு வழங்கப்படுகிறது. அப்போது 49(ஓ) பிரிவை பயன்படுத்த விரும்புவோர் அதை அதிகாரியிடம் தெரிவித்தால் 49(ஓ) என்பதைக் குறிப்பிட்டு அதே படிவத்தில் மற்றொரு கையெழுத்தைப் போட வேண்டும். ஆனால், பல தேர்தல் அதிகாரிகளுக்கே இப்படி ஒரு 'புறக்கணிப்பு' நடைமுறை சட்டத்தில் இடம் பெற்றிருப்பது தெரிவதில்லை. இந்த நிலையில், வாக்களிக்கும் சீட்டுகளிலே வேட்பாளர்கள் சின்னங்கள் இடம் பெற்றுள்ள பட்டியலிலேயே 49(ஓ) என்பதும் இடம் பெற்று விட்டால், வாக்காளர்கள் இந்த உரிமையை இலகுவாகப் பயன்படுத்த முடியும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக மனித உரிமை அமைப்புகளால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதை வலியுறுத்தி மக்கள் சிவில் உரிமைக் கழகம் உச்சநீதிமன்றத்தில் 6 ஆண்டுகளுக்கு முன் தொடர்ந்த வழக்கு இன்னும் விசாரணைக்கே வரவில்லை. காரணம் இந்த வழக்கு மனுவுக்கு கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த வாஜ்பாய் ஆட்சியும் தற்போதுள்ள காங்கிரஸ் ஆட்சியும் பதில் மனுவையே தாக்கல் செய்யாமல் அலட்சியம் காட்டி வருவதுதான்.

'ஆனாலும் சீப்பை மறைத்துவிட்டால் திருமணம் நின்று விடாது' என்பதுபோல் இத்தகைய நடவடிக்கைகளால் மக்கள் உணர்வுகளை திசைதிருப்பி விட முடியாது.

எனவே, வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழினத்தின் கோடரிக் காம்புகளாக மாறி நிற்கும் தமிழக காங்கிரஸ் வேட்பாளர்களையும், பார்ப்பன பா.ஜ.க. வேட்பாளர்களையும் படுதோல்வி அடையச் செய்வதற்கு தமிழின உணர்வாளர்கள் 49(ஓ) பிரிவை பயன்படுத்த முன்வரவேண்டும்.

இந்தப் பிரிவைப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து மனித உரிமை அமைப்புகள், சமூக மாற்றத்துக்கான புரட்சிகர அமைப்புகள், ஈழத் தமிழர் விடுதலை ஆதரவாளர்கள் இணைந்து மக்களிடம் மிகப் பெரும் பிரச்சார இயக்கத்தைத் தொடங்க வேண்டும்.

தமிழனை காட்டிக் கொடுக்கும் துரோக கட்சிகளுக்கு இதுவே சரியான பாடமாக அமையும்.

# மக்களிடம் விளக்குவோம்

## (1)

**கேள்வி : ஈழத் தமிழர் படுகொலைகளை மட்டும் பேச வேண்டுமே தவிர, விடுதலைப் புலிகள் பற்றி பேசக் கூடாது என்று, பார்ப்பன ஏடுகளும், பார்ப்பன ஜெயலலிதா - சுப்ரமணிய சாமி, 'துக்ளக்' சோ, பார்ப்பனதாசர்களான சில காங்கிரஸ் கட்சியினர் கூறுவது சரியா?**

**பதில் :** இது பித்தலாட்டமான வாதம், மத்திய அரசை விமர்சிக்கலாமே தவிர, மன்மோகன் சிங்கைப் பற்றிப் பேசக் கூடாது. அ.தி.மு.க.வை விமர்சிக்கலாமே தவிர, ஜெயலலிதாவைப் பற்றி பேசக் கூடாது என்று கூறுவதைப் போன்ற அபத்தமான கருத்து, ஈழத் தமிழர்களின் ஒரே பிரதிநிதிகளாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகள்தான். இந்த உண்மை சர்வதேச ஆதரவோடு நார்வே நடத்திய பேச்சு வார்த்தையில் ஒப்புக் கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு மட்டும் இலங்கை அரசு பேச்சு வார்த்தை நடத்தியது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்திய உளவு நிறுவனங்களும் இலங்கை அரசும் உருவாக்கிய போட்டி குழுக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவமோ, ஆதரவோ பெறாதவர்கள். அவர்கள் தமிழர்களைக் கொன்று குவிக்கும் இலங்கை அரசின் ஆதரவாளர்களாகவே செயல்படுகிறார்கள். ராஜபக்சே அமைச்சரவையிலும் இடம் பெற்றுள்ளார்கள். தமிழினப் படுகொலைகளை இவர்களால் தடுக்க முடியவில்லை. விமானத்தில் ராணுவ விமானங்கள் குண்டு வீசி தமிழர்களை ஒழிப்பதையோ, லட்சக்கணக்கான தமிழர்கள் வெட்ட வெளிகளில் கொட்டும் மழையில் அகதிகளாக்கப்பட்ட அவலத்தையோ இவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. மக்களுக்காகப் போராடுகிற மக்களுக்காக ராணுவத்தை எதிர்த்து போரிட்டு வீரச்சாவுகளை ஏற்றுக் கொள்கிற விடுதலைபுலிகளையும் தமிழ் ஈழ மக்களையும் பிரிக்க முடியாது. மக்களிலிருந்து தான் விடுதலைப் புலிகள் உருவாகி, போராளிகளாக களத்தில் நிற்கிறார்கள். எனவே விடுதலைப்புலிகளைப் பற்றிப் பேசாமல், ஈழத் தமிழர் பிரச்சினையை பேச முடியாது என்பதே உண்மை. இப்படி குறுக்குசால் ஓட்டுகிறவர்கள் ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிங்களர்கள் நடத்தும் இனப்படுகொலையைக் கண்டு மகிழ்கிறவர்கள், குதூகலிக்கிறவர்கள்; இந்த உணர்வை பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாததால், ஈழத் தமிழர்களைப் பற்றி பேசு - விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசாதே என்று கூப்பாடு போடுகிறார்கள்.

## (2)

**கேள்வி : தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதே குற்றம் என்று துரோக காங்கிரசாரும், பார்ப்பன ஜெயலலிதாவும், 'இந்து' பார்ப்பன ஏடுகளும் மிரட்டுவது சரியா?**

**பதில் :** ஒரு இயக்கத்தை தடை செய்ய அரசுக்கு உரிமை உண்டு என்றால், அந்த இயக்கத்தின் மீதான தடையை நீக்கு என்று, குரல் கொடுப்பதற்கும் மக்களுக்கு உரிமை உண்டு. அதுதான் ஜனநாயகம். அதுதான் கருத்து சுதந்திரம். அரசு விதித்துள்ள தடை நியாயமற்றது என்ற கருத்துகளை எடுத்துக் கூறும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு. தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு நேரடியான உதவிகளை செய்வதுதான் சட்டப்படி குற்றம் பொடா சட்டத்தின் கீழ் பழ. நெடுமாறன், வை.கோ. உள்ளிட்டோர் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பொடாவில் பார்ப்பன ஜெயலலிதா கைது செய்தபோது, உச்சநீதிமன்றம் தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றமாகாது என்று தெளிவாகவே தீர்ப்பு வழங்கியிருக்கிறது. காங்கிரஸ் உட்பட இந்தியாவை ஆட்சி செய்யும் கட்சிகள் தடை செய்யப்பட்ட இயக்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்திவருவது தமிழ்நாட்டில் 'துள்ளிக் குதிக்கும்' துரோக காங்கிரசுக்கு தெரியுமா?

இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் 2006-2007 ஆம் ஆண்டுக்கான அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அதில் கூறப்பட்டுள்ள வாசகங்களை அப்படியே தருகிறோம்.

"வடகிழக்கு மாநிலங்களில் ஆயுதம் தாங்கிப் போராடும் பல்வேறு ராணுவ குழுக்களுடன் இந்திய சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதோடு **போர் நிறுத்த ஒப்பந்தமும்** செய்து கொண்டிருக்கிறது."

- சமாதானப் பேச்சு வார்த்தை நடத்துவது மட்டுமல்ல, **போர் நிறுத்த ஒப்பந்தமும்** செய்துள்ளார்களாம். இதன் அர்த்தமென்ன? இந்திய இராணுவத்துக்கும் இந்தியாவில் செயல்படும் ஆயுதம் தாங்கிய குழுக்களுக்குமிடையே போர் நடந்து வருகிறது என்பது தானே! நூற்றுக்கணக்கான இந்திய ராணுவத்தினர் இதே ஆயுதம் தாங்கிய குழுக்களால் சாகடிக்கப்பட்டுள்ளார்களே?

அமைச்சர் ஆஸ்கார் பெர்னாண்டஸ் தலைமையிலான அமைச்சர்கள் குழு ஓய்வு பெற்ற உள்துறை செயலாளர் தி.கே. பத்மநாபய்யா ஆலோசனைகளோடு இந்திய ராணுவத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடும் குழுக்களோடு சமரசம் பேசி வருகிறது. தமிழகத்தில் துள்ளி குதிக்கும் காங்கிரஸ் கட்சியினர் இதற்கு என்ன பதிலைக் கூறுவார்கள்?

தடை செய்யப்பட்ட இயக்கத்தோடு பேசாதே என்று டெல்லியில் போய் சுவரொட்டி ஒட்டி, மத்திய அரசை எதிர்த்து இந்த 'தேசபக்த வீராதி வீரர்கள்' போராடுவார்களா?

'அரிவாள் கத்தியுடன்' கட்சி செயற்குழுவுக்கு சத்தியமூர்த்தி பவனுக்குள் வந்து போட்டி குழுவினரை அரிவாளால் வெட்டி சத்திய மூர்த்தி பவனை ரத்தப் பவனாக மாற்றுகிறவர்கள் தான் பயங்கரவாதம் பற்றி வாய் கிழியப் பேசுகிறார்கள்! வெட்கம் வெட்கம்!

## (3)

**கேள்வி : சட்ட விரோத நடவடிக்கைகளை அனுமதிக்கக் கூடாது என்று துரோக காங்கிரசும், பார்ப்பன ஏடுகளும் 'சட்ட நியாயம்' பேசுகிறார்களே!**

**பதில் :** உண்மை தான். சட்டத்துக்கு எதிரான செயல்பாடுகளை அனுமதிக்கக் கூடாது என்பது சட்டப்படி சரியான கருத்து தான். அதனால் தான் சட்டத்துக்குப் புறம்பாக ஆயுதம் கடத்துவதோ, மருந்துகளை வழங்குவதோ, சட்டப்படி குற்றம் என்பதால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. ஆனாலும் ஒரு கேள்விக்கு இந்திய ஆட்சி பதில் சொல்ல வேண்டும்?

இந்தியாவிலிருந்து இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுதங்களையும், ராணுவத்தினரையும், ராணுவப் பொறியாளர்களையும் அனுப்பி வைத்துள்ளதே!

ராடார் கருவிகளை மட்டுமல்லாது, அதை பராமரிக்கவும், பொறியாளர்களை அனுப்பியுள்ளதே. அண்மையில் விடுதலைப் புலிகள் 'ராடார்' மீதுதாக்குதல் நடத்தியபோது, அதில் காயமடைந்தவர்கள் குப்தா, ராவுத் என்ற இரண்டு இந்திய பொறியாளர்கள் என்று செய்திகள் வந்தனவே!

2000 ஆம் ஆண்டில் ஹார்ஷா என்ற யுத்தக் கப்பலையும் (75 மீட்டர் நீளமுள்ள 100 மாலுமிகள் ஓட்டக் கூடிய கப்பல்) - அணு ஆயுதங்களும், ஏவுகணைகளும் அடங்கிய அய்.என்.எஸ்.சரயு (இப்போதைய பெயர் எஸ்.எல்.என்.எஸ். சயுரா) என்ற போர்க் கப்பலையும், அமெரிக்கா வழங்கிய நவீன ஆயுதங்களை பொறுத்துவதற்கு வசதியாக 'புளுவாட்டர்' என்ற போர்க் கப்பலையும் - ஆக 3 போர்க் கப்பல்களை இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளதே! இந்தத்தகவல் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதா? ஆயுதங்களையும் போர்க்கப்பல்களையும் வழங்குவதற்கு இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தம் ஏதேனும் செய்து கொண்டதா? இலங்கைப் பிரச்சினையில் தலையிட மாட்டோம் என்று வெளியே கூறிக்

4 ஆம் பக்கம்

# பார்ப்பன மிரட்டலுக்கு கலைஞர் அரசு பணியக் கூடாது

முதல் பக்கத் தொடர்ச்சி

வந்திருப்பதன் மூலம் தமிழக மக்கள் ஈழத் தமிழர்களின் இன்னல்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நல்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள்களை சேகரிப்பதோடு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உணர்வுகளையும், மக்களிடம் கொண்டு செல்லும் நல்வாய்ப்பை தமிழக முதல்வர் உருவாக்கி தந்திருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். இதன் மூலம் ஈழத் தமிழர் உரிமைகளுக்கான தமிழகத்தின் எழுச்சியை அணையாது காப்பாற்றும் அரிய வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இவை ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு வலிமையை சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசுக்கு சிக்கல் உருவாக்க வேண்டாம் என்று பிரணாப் முகர்ஜிகள் கூறுகிறார்கள். இந்த கோரிக்கையை இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத் துறை செயலாளர் சிவசங்கர மேனன், மத்திய பார்ப்பன அதிகார வர்க்கம் அதற்கு தலையாட்டும் மத்திய அமைச்சர்களை நோக்கித்தான் முன்வைக்க வேண்டும். காரணம் சிக்கலை உருவாக்கியவர்களே அவர்கள் தானே.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக வரம்பு மீறி சிங்கள ராணுவத்துக்கு ரகசிய ராணுவ உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி தமிழர்களின் படுகொலைகளைத் தூண்டிவிட்ட முதல் குற்றவாளியே மத்திய அரசு தான். விடுதலைப்புலிகளின் ‘ராடார்’ தாக்குதலில் 2 இந்திய ராணுவப் பொறியாளர்கள் காயமடைந்தபோது தான் ‘கருவாட்டை பறிக்கொடுத்த பார்ப்பனர்’ நிலைக்கு மத்திய அரசு தள்ளப்பட்டது.

விமானத்தின் மூலம் மக்கள் மீது இலங்கை ராணுவம் குண்டு வீசும் போதோ, செஞ்சோலை சிறார்கள் முகாம் மீது குண்டு வீசும் போதோ ஒரு கண்டன வார்த்தைகூட தெரிவிக்க மறுத்தது இந்திய அரசு. ‘இந்தியாவிற்குரிய கடல் பகுதியில் சில ராடார் கருவிகளை இந்தியா அமைத்தள்ளதாகவும், அதுவும் இந்தியாவின் பாதுகாப்புக்குத்தான் என்றும் இப்போது பிரணாப் முகர்ஜி கூறுகிறார். இது உண்மையில் சிங்கள கப்பல் படையினரை தாக்குதலிலிருந்து பாதுகாக்கவும், சிங்கள ராணுவத்துக்கு உளவு கூறவும் அமைக்கப்பட்ட கருவிகள்.

இந்திய கடல் பகுதியிலே நிறுவப்பட்ட இந்த ராடார் கருவிகள் வழியாக இலங்கை ராணுவத்துக்கு உளவு பார்க்கும் வேலையைத்தான் இந்திய கப்பல்படை செய்தது.

இந்தியாவின் ராணுவத் தளபதி தீபக் கபூர் டெல்லியில் பத்திரிகையாளர்களை அழைத்து, “இந்தியாவின் ராணுவ உதவி சிறீலங்காவுக்கு கிடைக்காமல் போயிருந்திருக்குமானால், சிறிலங்காவின் கடற்படை இவ்வளவு வெற்றிகளைக் குவித்திருக்கவே முடியாது. சிறீலங்காவின் விமானப் படைக்கும் அண்மைக் காலமாக இந்தியா பேருதவிகளை செய்து வருகிறது” (29.10.2007 ‘தினத்தந்தி’ மற்றம் ஆங்கில நாளேடுகள்) என்று பேட்டி அளித்துள்ளார். பிரணாப் முகர்ஜியோ எந்த உதவியும் செய்யவில்லை என்று தமிழர் காதில் பூ சுற்றுகிறார்.

பிரணாப் முகர்ஜி கலைஞரை சந்தித்துவிட்டு சென்றவுடனேயே இலங்கை விமானப்படை கிளிநொச்சியில் ஒரு பள்ளிக்கூடத்தில் 1300 மாணவர்களைக் குறி வைத்து குண்டு வீசியிருக்கிறது. ஆபத்துகளை எதிர்பார்த்து மாணவர்கள் அப்புறப்படுத்தப்பட்டதால் மிகப் பெரும் இனப்படுகொலை தவிர்க்கப்பட்டது. பொதுமக்களும், இளம் மாணவர்கள் சிலரும் குண்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதற்கு பதிலடி தருவதற்குத் தான் விடுதலைப்புலிகள் மன்னாரிலும், கொழும்பிலும் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

“நாற்பதாண்டு காலப் போராட்டம், நான்கு நாட்களில் முடிந்து விடுமா?” என்று கலைஞர் கேட்பது போல் 40 ஆண்டுகால ஈழப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படவும் இல்லை; அதற்காக பிரணாப் முகர்ஜிகள் கலைஞரைசந்திக்கவும் வரவில்லை. இப்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கையே - போரையும், இனப்படுகொலையையும் நிறுத்த வேண்டும் என்பதுதான். இந்தக் கோரிக்கைக்குள்ளேயே இந்தியா இலங்கைக்கு வழங்கிவரும் ரகசிய ராணுவ உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும் என்ற அறிவிக்கப்படாத வேண்டுகோளும் அடங்கியே இருக்கிறது. ஆனாலும் கூட -

அரசு மட்டத்தில் வெளிப்படையாக அறிவிக்க முடியாத பிரச்சினைகள் இருக்கலாம்; நமக்கும் அது புரியும். அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல்வர் அவற்றை விளக்கவும் கூடும். நாம் அவை பற்றி இப்போது ஏதும் கூறுவதற்கும் வரவில்லை.

ஆனால், தமிழ்நாட்டில் தமிழின உணர்வுகளை மதிக்காது, பார்ப்பன வெறியோடு ஜெயலலிதா, கலைஞர் ஆட்சியை மிரட்டுவதும், கைது செய்ய வேண்டியோர் பட்டியலை தருவதும், உடனே கலைஞர் ஆட்சி, ‘ஜெயலலிதா’ ஆணையை உடனுக்குடன் நிறைவேற்றுவதுதான் வேதனையைத் தருகிறது. மக்களிடமிருந்து அன்னியப்படுத்தப்பட்டு நிற்கும் தமிழக காங்கிரசாரும் மிரட்டுகிறார்கள். அவர்களை திருப்திப்படுத்தவே கலைஞரும் துடிக்கிறார்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய பார்ப்பனியம் பச்சை துரோகங்களை அரங்கேற்றிக் கொண்டு, இப்போது சிக்கலில் மாட்டி விடாதீர்கள் என்று மனு போடுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

இதேபோன்று ஈழத் தமிழர்களுக்கு உணவு, மருந்துகளைத் திரட்டி, செஞ்சிலுவை சங்கத்தின் வழியாக அனுப்பிட ஈழத் தமிழர் ஆதரவு இயக்கங்களின் சார்பில் பழ. நெடுமாறன் அனுமதி கேட்டபோது அதற்கு செவி சாய்க்க மத்திய அரசு மறுத்தது. தமிழக முதல்வரும் அந்தக் கோரிக்கையை உதறினார். அதே நேரத்தில் இந்தியாவின் ரகசிய ராணுவ உதவிகளும் இலங்கை அரசுக்கு தொடர்ந்து கொண்டே இருந்தன. ஆனாலும் தமிழ்ச் செல்வன் படுகொலையின்போது தமிழகம் கிளர்ந்து எழுந்ததை பார்ப்பன ஊடகங்களும், தமிழக அரசும் ஊதி அணைக்க முயன்றாலும், அந்த எழுச்சியை அடக்கிட முடியவில்லை.

தொடர்ந்து ஈழத் தமிழருக்காக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முன் முயற்சிகளுக்கு அனைத்துக் கட்சியினரும் ஆதரவாகக் குரல் கொடுக்க முன்வந்தபோது அந்த எழுச்சித் தீ அணையவில்லை என்ற உண்மை மீண்டும் உறுதியானது.

மக்களிடம் மூண்ட இந்த எழுச்சி தான் ஒதுங்கி நின்ற அமைப்புகளையும் செயல்பட வைத்தன. இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு கலைஞரும் செயல்படத் தொடங்கினார். இந்த நிலையில், தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிரான பார்ப்பன ஜெயலலிதா துரோக காங்கிரசின் மிரட்டல்களுக்கு ஏன் இந்த ஆட்சி பணிய வேண்டும் என்ற கேள்வியை எழுப்பியாக வேண்டியிருக்கிறது.

மத்திய அரசானாலும் சரி, தமிழக பார்ப்பன சக்திகளானாலும், துரோக காங்கிரசானாலும் சரி, இவர்களை எதிர்கொள்ள தமிழகத்தின பேரெழுச்சியை இந்த அரசு பயன்படுத்திக் கொள்ளாமல் ஏன் பணிந்து போக வேண்டும். இரண்டுக்குமிடையே தமிழக முதல்வர் மேற்கொள்ளும் ஊசலாட்டமான அணுகுமுறைகளால் பார்ப்பன ஜெயலலிதாக்களும், துரோக காங்கிரசாரும் தமிழக அரசை மிரட்டி கைது செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியலை அறிவித்து, அதை செயல்படுத்தவும் செய்து விடுகிறார்கள்.

தன்னைக் கைது செய்யப் போவதாக ஒரு கற்பனை செய்தியை ஜெயலலிதாவே உருவாக்கிடும் போது அதைப் புறந்தள்ள வேண்டிய கலைஞர், தமிழக காவல்துறை தலைமை அதிகாரி வழியாக மறுப்பு தரும் நிலைக்குப் போகிறார்.

தமிழகத் தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலித்த இயக்குனர் சீமான், அமீர், வைகோ, கண்ணப்பன் ஆகியோர் முறைகேடாக சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். ம.தி.மு.க. - தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, ‘ஏக இந்தியா’ கொள்கையை ஏற்றுக்கொண்ட ஒரு கட்சி தான். சீமானும், அமீரும் தமிழ்நாடு விடுதலைக்கு படைதிரட்டி, இயக்கம் நடத்துகிறவர்களும் அல்ல.

குடும்பத்துக்குள் முரண்பாடுகள் மோதல்கள் வெடிக்கும்போது, குடும்பத்துக்கு எதிராக பேசும் உணர்வோடு தான் மத்திய அரசை அவர்கள் விமர்சித்தார்கள். அந்த உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கு கிரிமினல் சட்டத்தின் பிரிவுகளைத் தேடிக் கொண்டிருப்பதுதான் வெட்கத்துக்கும் வேதனைக்கும் உரியது. நல்ல வேளை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மரணமடைந்து விட்டார். இல்லையேல் ‘கொலைவாளினை எடடா; மிகு கொடியோர் செயல் அறவே’ என்று அவர் எழுதிய பாடலை எடுத்துக்காட்டி பார்ப்பன ஜெயலலிதா புரட்சிக் கவிஞரை தேச விரோதப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என்று அறிக்கை விட்டிருப்பார். ‘தேசிய திலகங்களான’ தமிழக காங்கிரசார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களை தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பார்கள். கலைஞர் இருவர் உணர்வுகளையும் மதித்து புரட்சிக் கவிஞர் பாடலுக்கு தடை விதித்து புரட்சிக் கவிஞரையும், தேச விரோத சட்டத்தின் கீழ் சிறைப்படுத்திவிட்டு, ‘சட்டம் தனது கடமையைச் செய்துள்ளது’ என்று பேட்டியும் அளித்திருப்பார். மிகுந்த வேதனையோடு நாம் இதை சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.

இன்றைக்கு தமிழ்நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக - தமிழின உணர்வுகளின் பிரதிபலிப்பாக தமிழர்கள் நம்பியிருக்கும் ஒரே தலைமை கலைஞர் தலைமை. உறுதியோடும் தமிழர்களை வழி நடத்த வேண்டிய தலைமை - இப்படி ஊசலாட்ட அணுகுமுறைகளால் தள்ளாடலாமா என்பதே - லட்சோப லட்சம் தமிழர்களின் இதயத்தைக் குடையும் கேள்வி?

ஈழத்தமிழர் பிரச்சினையில் கலைஞரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு தமிழர்கள் கலைஞர் பின்னால் அணி வகுக்கத் தயாராகவே உள்ளனர். ஆனால் எதிரிகள் துரோகிகளின் மிரட்டல்களுக்காக, அந்த உணர்வுகளுக்கு அணை போடும் முயற்சிகளில் இறங்கிவிடக் கூடாது என்பதே தமிழர்களின் வேண்டுகோள். கட்சி அரசியல்களுக்கு அப்பாற்பட்டு காலத்தின் அறைகூவலை சந்திக்க வேண்டிய தருணம் இது. தளைப்படுத்தப்பட்ட தமிழின உணர்வாளர்களை விடுதலை செய்து ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் இயக்கத்தை விரைவு படுத்திட கலைஞர் முன் வர வேண்டும். அனைத்து இன உணர்வாளர்களும் இந்த முயற்சியில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்!

இந்தியாவின் துரோகத்தை அம்பலப்படுத்த கலைஞர் அரசு தயங்கினால் அந்தப் பணியை தமிழின உணர்வாளர்கள் செய்யும் போது அதைத் தடைப்படுத்தும் நடவடிக்கைகளில் தமிழக அரசு இறங்கிவிடவும் கூடாது என்பதே நமது வேண்டுகோள்!

**– இரா**

## மனிதச் சங்கிலியில் ‘பெரியார் திராவிடர் கழகம்’

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இனப் படுகொலையை நிறுத்தக் கோரி சென்னையில் அக்.24 ஆம் தேதி நடந்த 60 கிலோ மீட்டர் தொலைவான மாபெரும் மனித சங்கிலி அணி வகுப்பில் பெரியார் திராவிடர் கழகம் பங்கேற்றது. மனித சங்கிலி தொடங்க இருந்த பிற்பகல் 3 மணியளவில் கடும் மழை கொட்டத் தொடங்கிய நிலையில் திட்டமிட்டபடி, அண்ணாசாலையில் அணி வகுத்து நின்று விட்டனர். ஈழத்தில் இனப்படுகொலைகளை விளக்கும் ஓவியங்களை உடலில் அணிந்து கொண்டு, கொட்டும் மழையைப் பொருட்படுத்தாமல், இரண்டு மணி நேரம் கழகத் தோழர்கள் கைகோர்த்து உணர்ச்சி முழக்கமிட்டனர். கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் ஏ.கேசவன், தபசி. குமரன், உமாபதி, அன்பு. தனசேகரன், தமிழ், சீனு, அண்ணாமலை, குமரன், அன்பு, வண்டார்குழலி, யாழினி, தமிழ் ஒளி, குகன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# சென்னையில் சுவரொட்டிகள்




**இனப்படுகொலை நிற்கும் வரை எமது போராட்டம் தொடரும்**

*எங்கள் சீமான்– அமீரை சிறைப்படுத்தினாலும் எமது சீற்றத்தை சிறைப்படுத்த முடியாது. தமிழர்களே! பார்ப்பன ஜெயலலிதாவையும் – துரோக காங்கிரசையும் அடையாளம்காண்பீர்!*

*– பெரியார் திராவிடர் கழகம்*

*மேற்குறிப்பிட்ட சுவரொட்டிகள் - சீமான், அமீர் கைதையொட்டி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் சென்னையில் ஒட்டப்பட்டன.*

## கொழும்பு விமானம் தரை இறங்க எதிர்ப்பு

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து திருச்சி விமான நிலையத்தில் கொழும்பிலிருந்து வந்த விமானம் தரை இறங்குவதை நிறுத்த முயன்ற திருச்சி மாவட்டக் கழகத் தலைவர் செ.த. இராசேந்திரன் கைது செய்யப்பட்டார்.

**24.9.2008** மாலை **6** மணியளவில் பெரியார் **130**வது பிறந்த நாள் விழா திருச்சி சத்திரம் பேருந்துநிலையம் அருகில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன் தலைமையில், ச. இருளாண்டி முன்னிலையில், திண்டுக்கல் சம்பத், டாக்டர் எஸ்.எஸ்.முத்து, முத்துச்செழியன், கைவண்டி கருப்பு ஆகியோர் உரையாற்றினர். மு. மனோகரன், சுரேசு, எ.முகமது உசேன், கதிர், செ.இரா. அன்புசெல்வன், பரமசிவம், அட்லாண்டிக் செல்வம், செ. செயபால் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். க.செகநாதன் நன்றி கூறினார்.

### பிறந்த நாள் நன்கொடை

*இராயப்பேட்டை மு. சுதா - மு.அன்புசீலன் (ஓட்டுநர், அரசு போக்கு வரத்துக் கழகம்) மகன் அகிலனின் முதலாம் ஆண்டு பிறந்த நாள் விழா புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதி : ரூ.350/-*

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*கொண்டு, ரகசியமாக ஆயுதங்களையும், கப்பல்களையும் வழங்குவது சட்ட விரோதமில்லையா? இது அரசே நடத்தும் ஆயுதக் கடத்தல் தானே! பார்ப்பன ஏடுகளோ, பார்ப்பன ஜெயலலிதாவோ ஓலமிடும் காங்கிரசோ, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? மற்றொரு கேள்வி. இலங்கைப் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு காண முடியாது. பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று “சமாதானப் புறா” வேடம் தரித்து வரும் மத்திய பார்ப்பன ஆட்சி ஆயுதங்களை அள்ளிக் கொடுப்பதுதான் சமாதானத் தீர்வுக்கு வழி காட்டும் லட்சணமா?*

(4)

**கேள்வி : பயங்கரவாதம் தமிழ்நாட்டில் தலை தூக்குகிறது என்று ஜெயலலிதா பேசுகிறாரே?**

**பதில்:** *ஜெயலலிதாவைவிட பயங்கரவாதி வேறு யாராவது இருக்க முடியுமா? ஜெயலலிதாவுடன் பார்ப்பனப் பாசத்தோடு இன்று இணைந்து நிற்கும் சுப்ரமணியசாமிகள் தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியில் கூட்டமே நடத்தவிடாமல் தடுக்கப் பட்டது மறந்து விட்டதா? அய்.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா முகத்தில் ஆசிட் வீசப்பட்டது யாருடைய ஆட்சியில்? எதற்காக வீசப்பட்டது? மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தாக்கப்பட்டது, பார்ப்பன சேஷன் தங்கிய நட்சத்திர ஓட்டல் தாக்கப்பட்டது எல்லாம் யாருடைய ஆட்சியில்?*

*எல்லாவற்றையும்விட ஊழல் வழக்கில் ஜெயலலிதா தண்டிக்கப்பட்டதற்காக அ.தி.மு.க.வினர், சுற்றலா வந்த விவசாயக் கல்லூரி மாணவிகள் பேருந்துக்கு தீ வைத்து, 3 பிற்படுத்தப் பட்ட மாணவிகளை எரித்துக் கொன்றார்களே! அந்தக் குற்றத்துக்கு தூக்குத் தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்களே? இந்தப் படுபாதகத்தை மூடி மறைக்க சாட்சிகளைக் குலைத்து, குற்றவாளிகளை விடுவிக்க ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, அரசு அதிகாரங்கள் முறைகேடாக செயல்பட்டதை உயர்நீதி மன்றமே சுட்டிக்காட்டியதே!*

*இந்த ஜெயலலிதாவா, பயங்கரவாதம் பற்றிப் பேசுவது? பார்ப்பனர் பயங்கரவாதத்தில் ஈடுபட்டால் மட்டும் – அது ‘தேச பக்தி’ யாகிவிடுமோ?*

# ‘விடுதலை’ தலையங்கத்தின் புரட்டு

**திரிபுவாத திம்மன்கள் – யார்? (7)**


*‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ – கி.வீரமணியின் கொள்கைப் புரட்டுகளைத் தொடர்ந்து – தோலுரித்து வருகிறது. இதற்கு அவர்களிடமிருந்து வரும் பதில் நீண்ட மவுனம் தான். ‘அமைதி காத்து சாகடிப்பது’ என்ற பார்ப்பன தந்திரத்தையே தனது அணுகுமுறையாக வீரமணி பின்பற்றி வருகிறார். பெரியார் கொள்கைகளை தங்களின் சந்தர்ப்பவாதத்துக்கேற்ப திருத்திக் கொள்வதற்காகவே இவர்கள் உண்மையான வரலாறுகள் வெளிவந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் குறியாக செயல்படுகிறார்கள்.*

*திறந்த புத்தகமாக எந்த சவாலையும் உறுதியாக எதிர் கொண்டு பெரியார் கருஞ்சட்டைப் படையினரின் தலையை நிமிர வைத்தார். அந்த சிறப்புகளும், பெருமைகளும் இன்று சிறுமையாக்கப்பட்டு சீர்குலைந்து போய் நிற்கின்றன. பெரியார் தங்களுக்கு மட்டுமே உரிமை என்று சொந்தம் கொண்டாடுகிறவர்கள் பெரியார் ஒவ்வொரு கருஞ்சட்டை தோழனுக்கும் வழங்கி விட்டுச் சென்ற கொள்கைப் பெருமைகளை சிதறடித்து, விவாதங்கள் என்றாலே தலைதெறிக்க ஓடும் நிலைக்கு வீரமணி கொண்டு வந்துவிட்டார். தன்னை ஆளும் கட்சிகளின் பக்கவாத்தியக் குழுவாக்கிக் கொண்டு, முதல் பாராட்டு மாலை தன்னுடையதாகவே இருக்க வேண்டும் என்பதிலேயே இரவும் பகலும் கண்துஞ்சாது உன்னிப்பாகக் ‘கடமையாற்றும் காவலராகி’ விட்டார் வீரமணி. அவர் நிலை தான் அப்படியென்றால், அவர் வழியில் நடைபோடும் விடுதலை தலையங்க எழுத்தாளர்களும் அந்த நிலைக்கு வந்து விட்டனர்.*

*கடந்த அக்.11 ஆம் தேதி ‘விடுதலை’ நாளேட்டில் வெளிவந்த தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:*

*“ஈரோடு பக்கத்தில் சதுமுகை என்ற ஊரில் பிள்ளையார் சிலைக்கு செருப்பு மாலை போட்டு பழியை திராவிடர் கழகத்தினர் மீது போட்டு, பிறகு காவல்துறை கண்டுபிடித்தது” என்று அத்தலையங்கம் கூறுகிறது.*

*சதுமுகையில் இந்து முன்னணியினர் அப்படி ஒரு வேலையை செய்து பழியை பெரியார் திராவிடர் கழகத்தினர்மீது போட்டதால், பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பழனிச்சாமி, அண்ணாத்துரை, தன்ராசு, ரவி, கனகராசு ஆகியோர் கைது செய்யப்பட்டனர் என்பதே உண்மை. பிறகு – பெரியார் திராவிடர் கழகம் எதிர்ப்பு தெரிவித்து போராடிய பிறகு, காவல்துறை மீண்டும் விசாரணை நடத்தி, பிள்ளையார் சிலைக்கு செருப்பு மாலை போட்ட இந்து முன்னணியைச் சேர்ந்த செல்வகுமார், மஞ்சுநாதன் என்ற இருவரையும் கைது செய்து கழகத் தோழர்களை விடுதலை செய்தது. இந்த செய்தியை வெளியிட்ட ‘இந்து’ நாளேடு திராவிடர் கழகத்தினர் கைது செய்யப்பட்டதாக பொய்யாக செய்தியை வெளியிட்டதைப் பயன்படுத்தி கி.வீரமணி, இந்த ஏட்டின் பொய்ச்செய்தியை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு திராவிடர் கழகத்தினர்மீது இந்து முன்னணியினளர் பழி சுமத்துவதாக நீண்ட அறிக்கையை தனது விடுதலையில் வெளியிட்டுக் கொண்டார். இதற்கு ஆதாரமாக ‘இந்து’ ஏட்டின் பொய்ச் செய்தியையும் அப்படியே அந்த அறிக்கையில் படம் பிடித்துப் போட்டுக் கொண்டார். வீரமணியின் இந்த அற்பமான செயலை ‘பெரியார் முழக்கம்’ அப்போதே சுட்டிக்காட்டியது. அது மட்டுமல்ல, ‘திராவிடர் கழகத்தினர்’ கைது செய்யப்பட்டதாக பொய்ச் செய்தி வெளியிட்ட ‘இந்து’ ஏட்டுக்கும் கழகம் கடிதம் எழுதி, திருத்தம் வெளியிட வேண்டும் என்று கோரியது.*


Correction: On the report "Two Hindu Munnani volunteers arrested", published in these columns on February 18, Mr. Viduthalai K. Rajendran writes: "The news item stated that the DK has sought permission to conduct meetings, while the fact remains that it was the Thanthai Periyar Dravidar Kazhagam, which is endorsed in the FIR also. We are the only organisation actively working in the Sathyamangalam area fighting communal outfits".
The error is regretted.
THE HINDU MARCH-9

*காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பிரதியை அனுப்பினால் தான் திருத்தம் வெளியிடுவோம் என்று ‘இந்து’ பதில் கூற, அதையும் பெரியார் திராவிடர் கழகம் அனுப்பியது. அதன் பிறகு, ‘இந்து’ ஏடு தவறுக்கு வருத்தம் தெரிவித்து திருத்தத்தையும் வெளியிட்டது. (‘இந்து’ ஏடு வெளியிட்ட திருத்தத்தை இங்கே வெளியிட்டிருக்கிறோம்). இவ்வளவுக்கும் பிறகு மீண்டும் பழைய பொய்யையே உறுதி செய்து ‘விடுதலை’யில் தலையங்கம் தீட்டுகிறார்கள். பெரியார் திராவிடர் கழகம் ‘குடிஅரசு’ தொகுதிகளை வெளியிட்டால், ‘துரோகிகள்’, ‘புரட்டர்கள்’, ‘திரிபுவாத திம்மன்கள்’, ‘அனாமதேயங்கள்’ என்று வசைபாடும் கி.வீரமணி, பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளை தங்களது செயல் பாடாக மாற்றி உண்மைகளைத் திரித்து எழுதுவதற்காக வெட்கப்பட வேண்டாமா? கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவமே இப்படி திரிக்கப்படும்போது, கடந்த கால வரலாறுகளை எல்லாம் எவ்வளவு மோசமாக திரித்துக் கொண்டிருப்பார்கள்?*

*தமிழர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறோம்!*

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 31st October 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.